R & C PROPERTY LAWYERS LLP
& NOTARY PUBLIC
10a Upper Tooting Road , London SW17 7PG
Telephone: 02087724920
Conveyancing Services:
Residential , Commercial Conveyancing ,
Notarial Services:
Notarisation & Legalisation of Documents
Power of Attorneys,
SENTHURAN THAVARAJA LLB (Hons) Solicitor & Notary Public
Consultant : RAJA THAVARAJA LLB Solicitor

A Freely Circulated Monthly
புதினம்
PUTHINAM
DECEMBER 2016
மலர் 20
இதழ் 11

LINGA & CO
LEGAL ADVISORS AND IMMIGRATION SPECIALISTS

V.P.Lingajothy
LLB (Hons), MSc, Dip Fms, Acilex
Principal, Immigration Specialist
46 HIGH STREET COLLIERS WOOD
LONDON SW19 2BY
TEL: (020) 8544 9285 FAX: (020) 8542 9530
EMAIL : LILEGALADVISORS@YAHOO.CO.UK
OISC

MITHUS JEWELLERS
லண்டனில் தமிழர்கள் விரும்பிச் செல்லும் நகைமாளிகை
நியாயமான விலை, உறுதியான வேலைப்பாடு
பழைய நகைகளுக்கு அதிக விலை அல்லது புதிய நகை
322 LONDON ROAD, CROYDON CRO 2TJ 020 8683 1756

THARANI JEWELLERY
அதி குறைந்த வட்டி வீதத்தில்
அடைவு பிடிக்கும் நகை மாளிகை
54 Ealing Road, Wembley, Middlesex HA0 4TQ.
Tel: 020 8902 7111, 020 8902 6777

தோழரே...

சென்று வாருங்கள் பிடல்! கொடுங்கோல் ஆட்சியினைத் தூக்கியெறிந்து, கியூபாவில் புரட்சியினை விதைத்தீர்கள்!

உலக விடுதலை இயக்கங்களின் பேசுபொருள் நீங்கள்.

எமது இயக்கப்பாசறைகளில் உங்கள் ஒளிப்படம் காட்சியளிக்கும் தோழரே.

கரும்புத் தோட்டங்களில் நீங்கள் களமாடிய பல கதைகள் நாம் படித்தோம்.

உங்கள் உற்ற துணை, மாவீரன் சேகுவாராவின் களப்பணி அளப்பரியது.

'எமது கொல்லை புறத்தில் சிவப்பா...?' என்று வெகுண்டெழுந்தது கழுகு.

சுருட்டுக்குள் விஷம் வைத்து உம்மைக் கொல்ல முயற்சித்தார் வல்லரசாளர்.

எத்தனை கொலை முயற்சிகள்...!.

எத்தனை பொருண்மியத் தடைகள்....!!

எதற்கும் உனது மக்கள் அசையவில்லை.

பிளவுபட்ட உலக ஒழுங்கில், ஒரு சாரார் உமக்குத் துணையாய் நின்றனர்.

மேற்கின் அழுத்தங்களில் இருந்து விடுபட பலர் உதவினர்.

ஐ.நா.சபையில் இடம் கிடைத்தது.

திரும்பிப் பார்க்கிறோம்.

எம் மீது உலக வல்லாதிக்கங்கள் அனைத்தும்

இணைந்து போர் தொடுத்தபோது, உங்கள் 'புரட்சிகர கியூபா' எங்கே நின்றது?...நீங்கள் யாரோடு கைகோர்த்தீர்கள் என்று பார்க்கிறோம்.

ஐ.நா.சபையில் உங்கள் நாடு, மகிந்தரின் ஆட்சிக்கு முண்டு கொடுத்தது தோழரே.

கியூபா மக்களின் விடுதலைக்காகப்போராடிய நீங்களும் உங்கள் தோழர்களும், ஈழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கி, அவர்கள் மீது இன அழிப்பினை நடாத்திய சிங்களப் பேரினவாத அரசினை எப்படி ஆதரிக்க முடிந்தது தோழரே...

ஐ.நா.சபையில் அமெரிக்கா தீர்மானம் கொண்டு வந்ததால், அனைத்து ஈழ மக்களும் அமெரிக்க ஆதரவாளர்கள் என்று நினைத்து விட்டீர்களா தோழரே...

இலங்கையில் ஒரு ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவரவே, இத்தீர்மானத்தை அமெரிக்கா கொண்டு வந்தது என்பதனை நீங்கள் புரிந்து கொள்ளவில்லையா....?.

உங்கள் மக்களுக்காக நீங்கள் செய்த புரட்சியை நாம் மெச்சுகிறோம். ஆனாலும் உங்கள் நாடு, எம் மக்களின் விடுதலைக்கு எதிராக எடுத்த நிலைப்பாட்டினை மன்னிக்க முடியவில்லை தோழரே.

சென்று வாருங்கள்.

KULENDRAN IMMIGRATION
LAW CHAMBERS
90 High street, Colliers Wood, London, SW19 2BT
Tel: 020 85428222
020 86824494
020 8286 7537 (Appointments)
020 8767 5156 (Evenings only)
We are teamed with Barristers & Solicitors to advice & assist our clients
- Immigration & Asylum
- Entry Clearance- EEA Applications
- Appeals (Appearance & Assistance)
- Bail hearings & European Court
- Police Station Attendance
- Criminal Law
- Benefits Appeals
[All other aspects of Legal matters]
merton chamber of commerce member
Recommened By
The Merton Chambers Of Commerce
Mr.Pires on 079 8533 9948
for Criminal matters
Police Station &
Traffic offences (24Hrs)
Translation &
Interpreting Services

செல்வராஜா கோல்டு ஹவுஸ்
கிறிஸ்மஸ் புதுவருட
அதிரடி மலிவு விற்பனை
162 B, MITCHAM ROAD, LONDON SW17 9NJ
TEL: 020 87673795

LycaFly
call us 24X7
0207 132 32 32
Colombo பயணமா?
எங்குமில்லாத சிறப்பு சலுகை.
PLUS
FREE LYCAMOBILE TOP-UP

தரமான தங்கத்திற்கு லண்டனில் சிறந்த இடம்
LAKSHMIS JEWELLERS
276, High Street North, London E12 6SA,
Tel: 020 8470 5600 FAX: 020 8470 3448

NW LONDON ACADEMY LTD.

website: www.nwla.co Email: admin@nwla.co

Government Funded Course

Btec level 3 diploma customer service

Training At No Cost

Bus training

truck training

car training

Driver cpc

Minicab licence

தினமும் Theory வகுப்புகள்

தமிழ் ஆங்கிலம் கலந்த Theory புத்தகம்

இப்போது விற்பனைக்கு உள்ளது

- ✔ SOUTH EAST இங்கிலாந்தில் உள்ள வேலையற்றோருக்கு (19 வயதுக்கு மேற்பட்டோர்) இலவச ஆங்கில பயிற்சி
- ✔ 16-23 வயதுக்குட்பட்டோருக்கு வேலை பெறுவதற்கான இலவச பயிற்சி
- ✔ 22 மணி நேர வாகனம் ஓட்டும் சாரதி பயிற்சி

Please Call Us On: **020 8357 0500, 020 8475 8887**
0247 6681815, 020349 00028

Our Office's
Based on
Harrow
Eastham Tooting
Leicester Coventry

பௌத்த மேலாதிக்கத்தின் அடையாளமே மட்டக்களப்பு மங்களராமய தேரர்!

சிங்கள பௌத்த மேலாதிக்கத்தின் அதியுச்ச செயற்பாடாக இந்தப் பிக்குவின் அட்டகாசம் அமைந்துள்ளது. காவற்துறையினரோ அரசாங்க அதிகாரிகளோ அவர்மீது எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது கைகட்டி வாய்பொத்தி நிற்கும் நல்லாட்சி இன்று அரசோச்சுகிறது.

இலங்கையின் முதன்மை மதமாக புதிய அரசியலமைப்பிலும் பௌத்தமே இடம்பெறுமென இலங்கையின் பிரதமர் சில வாரங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தார்.

இந்த முடிவை தமிழர் தலைமையும் (தமிழ் தேசியக் கூட்டமைப்பு) ஏற்றுக் கொண்டுள்ளதென்ற பிரதமரின் மேலதிக அறிவிப்பு பலருக்கும் அதிர்ச்சியைக் கொடுத்தது.

1948க்குப் பின்னரான சகல அரசியலமைப்புகளும் பௌத்தத்துக்கே முதலிடம் கொடுத்து வந்தன. இப்போது உருவாகிக் கொண்டிருக்கும் நல்லாட்சியின் அரசியலமைப்பும் அதனைத்தான் சொல்கிறது.

எதிர்க்கட்சியென்று அதிகாரபூர்வமாக இருக்கும் சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பு தனது பதவிப் பெயரளவிற்காவது இதற்குத் தன் எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லை.

திருமணம் செய்யாது கணவன் மனைவியாக இல்லறம்; நடத்தும் மேற்குலகின் கூடிவாழும் (Living together) பாணியில் சிங்கள அரசுடன் சேர்ந்தியங்குவதால்எல்லாவற்றுக்கும் தலையாட்ட வேண்டும் அல்லது எதிர்க்கக்கூடாதென்பது இவர்களுக்கான நியதி போலும்.

புதிய அரசியலமைப்பிலும் பௌத்தத்துக்கே முதலிடம் என்ற அறிவிப்பைத் தொடர்ந்து வெளிவந்த ஓர் அறிக்கை, வடக்கிலும் கிழக்கிலும் புதிதாக 100 விகாரைகளை அமைக்கவும், குறைந்த வசதிகளைக் கொண்ட விகாரைகளைப் புனரமைக்கவும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்பதாகும்.

புத்தசாசன அமைச்சர் விஜயதாச ராஜபக்ச சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை பூரண ஆதரவு கொடுத்துள்ளது.

சீனாவிலுள்ள பௌத்த சங்கம் ஒன்றின் தலைவரான மிங் செங் என்பவர் இருபது முதல் இருபத்தினான்கு மில்லியன் வரையான ரூபாவை இதற்கென அன்பளிப்பாக வழங்கியுள்ளதாக இலங்கை அரசின் அறிக்கை கூறுகிறது.

யுத்தத்துக்குப் பின்னரான காலங்களில் தமிழர் தாயகத்தில் புத்தர் சிலைகள் நாட்டப்படுவதையும் பௌத்த விகாரைகள் முளைவிடுவதையும் அந்த மண்ணின் உருத்துக்காரர்கள் எதிர்த்து வருகின்றவேளையில், சீனாவின் பௌத்த சங்கமொன்றின் தலைவர் அதே தமிழர் தாயகத்தில் பௌத்த விகாரைகளுக்கு நிதி வழங்குவதன் பின்னணியை சாதாரணமாகப் பார்க்க முடியாது.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் அவரது அம்பாந்தோட்டையில் புதிய விமான தளத்தையும், நவீன துறைமுகத்தையும் அமைத்துக் கொடுத்தது சீனா.

இப்போது, மைத்திரியின் ஆட்சியில் தமிழர் தாயகத்தில் பௌத்த விகாரைகள் அமைக்கவும், புனர்நிர்மாணம் செய்யவும் அதே சீனா நிதி வழங்க முன்வந்துள்ளது. அதுவும் 100விகாரைகள் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

மகிந்தவின் ஆட்சியின்போது திருமலையின் மத்தியிலுள்ள நகரசபைக்குச் சொந்தமான விளையாட்டு மைதானத்தில்



இரவோடிரவாக புத்தர் சிலையொன்று நாட்டப்பட்ட சம்பவம் இலகுவாக மறந்துவிட முடியாதது.

அப்போது வன்னித் தலைமையில் தாயக நிர்வாகம் இயங்கி வந்தது. திருமலை மக்கள் அந்தப் புத்தர் சிலை கண்டு துணிச்சலோடு பொங்கியெழுந்தனர்.

இன்று பௌத்த துறவிகளின் அட்டகாசமும், இராணுவத்தின் அத்துமீறல்களும், சிங்கள அரசியல்வாதிகளின் அபரிமிதமான துணிச்சலும் புதுப்புது வடிவில் பௌத்த சிலைகளை தமிழ் மண்ணில் நாட்ட ஏதுவாகியுள்ளது.

வலிகாமம் வடக்கிலுள்ள காங்கேசன்துறையில் குமாரகோவில் என்ற சைவ ஆலயம் அழிக்கப்பட்டு அந்த இடத்துக்கு முன்னால் கமுனு விகாரையென்ற பௌத்த வழிபாட்டுத்தலமொன்றை இராணுவம் நிறுவியுள்ளது.

சைவ ஆலயத்திலிருந்த பிள்ளையார், அம்மன், முருகன் சிலைகள் கமுனு விகாரையின் ஒருபுறத்தை அலங்கரிக்க வைக்கப்பட்டுள்ளன.

அம்பாறையிலுள்ள இறக்காமம் என்ற இடத்தில் இரு வாரங்களுக்கு முன்னர் சில பிக்குகள் ஒன்றுசேர்ந்து புத்தர் சிலையொன்றை நாட்ட முற்பட்டபோது அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாறை நாடாளுமன்ற உறுப்பினரான தயா கமகே அதனை அகற்ற முடியாதென்று அழுத்திக் கூறிவிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரான இவர், கைத்தொழில் அமைச்சராகவும் இருக்கிறார்.

இவரது மனைவி அனோமா கமகே ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் வாயிலாக நாடாளுமன்ற உறுப்பினரானவர். இவர் நீர்ப்பாசன விவசாய பிரதியமைச்சராகவும் உள்ளார்.

இந்தக் கணவனும் மனைவியும் ரணில் விக்கிரமசிங்கவின் குசினி வட்ட நண்பர்கள்.

நல்லாட்சி அரசில் நல்லெண்ணச் செயற்பாடுகளை பிரதமர் ரணிலின் தலைமையில் அவரது நண்பர்கள் எவ்வாறு மேற்கொள்கின்றனர் என்பதற்கு இறக்காமம் புத்தர் சிலை ஆகப்பிந்திய ஒரு சாட்சி.

இவ்விடத்தில் 1970ல் இலங்கையில் ஆட்சிக்கு வந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா, யாழ்ப்பாணத்தில் தமிழ் பௌத்த பாடசாலைகளை உருவாக்கியதை இங்கு சுட்டிக்காட்டவேண்டிய தேவையுண்டு.

அவ்வேளையில், அங்கு மேலோங்கியிருந்த சாதிப் பிரச்சனையை ஓர் ஆயுதமாகக் கையிலெடுத்து, வர்க்க முரண்பாட்டில் பாதிக்கப்பட்ட மக்களுக்கென தெரிந்தெடுக்கப்பட்ட சில இடங்களில் அம்மையார் இப்பாடசாலைகளை உருவாக்கினார்.

யாழ்ப்பாணத் தமிழர்களை சாதியின் பெயரால் நிரந்தரமாகப் பிரித்து வைக்க மேற்கொள்ளப்பட்ட ஒரு சூழ்ச்சி இது.

பௌத்த பிக்குகள் சிலர் இப்பாடசாலைகளில் சிங்களம் கற்பிக்க அனுப்பப்பட்டனர். அந்தப் பாடசாலைகளுக்குள் பௌத்த மத வழிபாட்டு மண்டபங்களும் நிறுவப்பட்டன

1977 தேர்தலில் சிறிமாவோ அரசு மண் கவ்வியதோடு, பௌத்த பாடசாலை முயற்சிகளும் கரைந்து போனது.

அன்று சிறிமாவோ மேற்கொண்ட அந்த முயற்சியை, அவரது புதல்வியான சந்திரிகா நல்லிணக்கத் தலைவியாக இயங்கும் இன்றைய அரசு வேறுவழியாக மேற்கொள்ளமுயல்கிறது.

இதன் ஓரம்சமாகவே மட்டக்களப்பு மங்களராமய விகாரையின் தலைமைப் பிக்கு அம்பிட்டிய சுமணரத்ன தேரோவின் நடவடிக்கைகளைப் பார்க்க வேண்டும்.

மண்முனை தெற்கு பட்டிப்பளைப் பிரதேசத்தில் கால்நடைகளுக்கென ஒதுக்கப்பட்ட தமிழருக்குச் சொந்தமான மேய்ச்சல் நிலங்களைக் கையகப்படுத்தி அதில் சிங்களக்குடியேற்றங்களை மேற்கொள்ள இவர் நடவடிக்கையெடுத்து வருகிறார்.

இச்செயற்பாட்டை சட்டரீதியாகத் தடுக்க சென்ற கிராமசேவகர் உட்பட அரசாங்க பணியாளர்களை காவற்துறையினர் முன்பாக வைத்து தகாத வார்த்தைகளால் ஏசித்துரத்தியுள்ளார் இந்தப் பிக்கு.

சிங்கள பௌத்த மேலாதிக்கத்தின் அதியுச்ச செயற்பாடாக இந்தப் பிக்குவின் அட்டகாசம் அமைந்துள்ளது. காவற்துறையினரோ அரசாங்க அதிகாரிகளோ அவர்மீது எந்தநடவடிக்கையும் எடுக்க முடியாது கைகட்டி வாய்பொத்தி நிற்கும் நல்லாட்சி இன்று அரசோச்சுகிறது.

இந்தப் பிக்குவின்மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு அப்பிரதேச மக்களும் பொதுஅமைப்புகளும் விடுத்த வேண்டுகோள் ஜனாதிபதினதும் பிரதமரினதும் காதுகளுக்குள்புகமறுக்கிறது.

நாடாளுமன்றத்திலுள்ள தமிழர் தலைமை இது எதுவும் தெரியாததுபோல் நடித்துக் கொண்டு, இந்த மாதம் 19ம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளதாகக் கூறப்படும் புதியஅரசியலமைப்பின் முதற்கட்ட அறிக்கைபற்றி பேசிக் கொண்டிருக்கிறது.

தமிழரின் காணிகளில் ஒரு பகுதி இராணுவத்தாலும் இன்னொரு பகுதி பிக்குகளாலும் சூறையாடப்படுகின்றன. எஞ்சியுள்ள இடங்களில் அரச மரக்கன்றுகள் நாட்டப்பட்டு புத்தர்சிலைகள் நிறுவப்படுகின்றன.

இதன் பின்னர், நடைமுறைக்கு வரப்போவதாகக் கூறும் எந்தத் தீர்வும் அந்த மண்ணின் பூர்வீகச் சொந்தக்காரர்களுக்கானதாக இருக்காது என்பது நிச்சயம்.●

புதினம்
PUTHINAM

லண்டன் தமிழர்களின்
அபிமான இலவச இதழ்

ஆசிரியர்:
ஈ.கே.ராஜகோபால்
E.K.Rajagopal

வடிவமைப்பு
சத்யன் லே-அவுட்
9551395516

அலுவலக முகவரி:
PUTHINAM
38 MOFFAT ROAD
LONDON SW 17 7EZ
TEL: 020 8767 8004
MOB: 077 353 46890
EMAIL:
editor@londonputhinam.co.uk

'ஈழகேசரி' வெளியீட்டு
நிறுவனத்துக்காக
20 ஆண்டுகளாக வெளிவரும்
இலவச இதழ். தபாலில் பெற
விரும்புவோர் முத்திரைச் செலவான
25 பவுண்களை மட்டும் Puthinam
என்ற பெயருக்கு காசோலையாக
அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

முக்கிய அறிவிப்பு

'புதினம்' விடுமுறை

ஜனவரி - 2017
இதழ் மட்டும் வெளிவராது

'புதினம்' அலுவலகத்துக்கு டிசம்பர் 15ம் திகதி முதல் ஒரு மாத காலத்துக்கு விடுமுறை. ஆதலால், ஜனவரி - 2017 'புதினம்' இதழ் வெளிவரமாட்டாது. வழமைபோல் பிப்ரவரி 2017 முதல் புதினம் இதழ் தொடர்ந்து வெளிவரும் என்பதை வாசகர்கள், விளம்பரதாரர்களுக்கு அறியத்தருகிறோம்.

அனைவருக்கும் 'புதினம்' தனது இதயபூர்வமான புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

அச்சகத் தொழில் செய்வோர்,
பத்திரிகை நடாத்துபவர்கள்,
புத்தகங்கள் வெளியிடுவோர்,
மாதாந்திர சஞ்சிகை
நடாத்துபவர்களுக்காக....

புத்தக வடிவமைப்பு, டி.டி.பி.,
திருமண அழைப்பிதழ்கள், சிறப்பு மலர்கள், உங்கள் வீட்டு விஷேச நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்கள் என சிறந்த வேலைகளை இந்தியாவிலிருந்து வழங்குகிறோம்

Call: 9551395516
www.satyanlayout.com

Looking for an
ACCOUNTANT ?
We are next to you!
We provide solutions for your Accountancy needs

உங்கள் தனிப்பட்ட மற்றும் வியாபார
ACCOUNTANCY
தேவைகளுக்கு
LONDON இல்
இயங்கும் தனித்துவமான ஸ்தாபனம்

Initial consultation is free
No fee for first three months

P&K
ASSOCIATES
CIMA
PRACTISING CERTIFICATE HOLDER

183. Burnt Oak Broadway,
Edgware. Middlesex.
HA8 5EH

020 8958 8883
079 1613 4976
(Mr.P. Navendran)

www.pandkgroup.co.uk
pandkassociates@aol.com

ஆங்கிலப் பாடத்தில் ரியூஷன் (TUITION)

7ம் 8ம் 9ம் வகுப்புகளிலும், மற்றும் 11ம் வகுப்பில் (GCSE) படிக்கும் மாணவர்களுக்கு ஆங்கிலப் பாடத்தில் ரியூஷன் சொல்லிக் கொடுக்கப்படும்.

லூய்ஷியாம் (LEWISHAM) பகுதியில் உள்ள பிள்ளைகளுக்கு இச்சேவையைச் செய்ய முன்வந்துள்ளார். நிதாஷி ஆபூபைட் (NITHASI ABUBAID)

OTHER SERVICES OFFERED

"I can talk to your child's school to get any additional support required, can join you to meet the school teachers/head teacher etc, for meetings as your representative."

– NITHASI ABUBAID

தொடர்புகளுக்கு:
0780 2896455
(நிதாஷி அபூபைட்)

நீங்களும் படித்து பட்டம் பெறலாம்

தமிழ் மொழியில் படித்து,

B.A (Tamil), B.A (Applied Tamil)
M.A (Tamil), B.Lit. (Tamil pulavar)
MBA (General - பொது முகாமைத்துவம்)

பட்டம் பெற வேண்டுமானால் இன்றே
இப்போதே தொடர்பு கொள்ளுங்கள்.

WESTERN TAMIL SCHOOLS FEDERATION
07958408280 / 07946937000/
02085400705

www.wtsf.org.uk.
Web: www.b-u.ac.in www.wtsf.org.uk.
email:joseph.vilvaraj@gmail.com/
kanmanohar@gmail.com

விமலின் பக்கம்

எழுபதுகளின் நடுப்பகுதி, நான் பிரிட்டனில் வந்திறங்கிய காலகட்டம்.

வெள்ளையர்கள் அல்லாதவர்களுக்கு எதிராக தேசிய முன்னணி(நாஷனல் புரொண்ட்) என்ற கடும் கோட்பாட்டு வன்முறை அமைப்பு கோஷங்களை எழுப்பியபடி இந்திய மக்கள் வாழும் தெருக்கள் ஊடாக பேரணிகளை நடத்திய காலம் அது நான் மறக்க விரும்பும் கெட்ட 'கனாக்காலம்'.

ஈனோக் பவல் போன்ற தீவிரவாதிகள், "வெள்ளையரல்லாதவர்கள் பிரிட்டனுக்குள் வருவதால் பிரிட்டிஷ் வீதிகளில் இரத்த வெள்ளம் ஓடப்போகிறது" என்று பொறுப்பற்றவிதத்தில் விஷம் கக்கினார்கள்.

இப்போதெல்லாம் லண்டன் பஸ் தரிப்பிடங்களிலும் தெரு விளக்கு தூண்களிலும் பாலியல் உறவுப் பெண்களின் தொலைபேசி இலக்கங்களுடன் 'உடலை உருவி ஒத்தடம்கொடுக்கும் மசாஜ்' கன்னியர் என்ற போர்வையில் விளம்பரப்படுத்தப்படுவதை நீங்கள் கண்டிருக்கலாம்.

1970-களில் பஸ் தரிப்பிடங்களில் நான் கண்ட துண்டு விளம்பரங்கள் - எனக்காகவே ஒட்டப்பட்டது போல் இருந்தன.

"ஆசிய இன கறுப்பனே ஏன் பிரிட்டனுக்கு வந்தாய்? எங்கள் தொழில் வாய்ப்புக்களை எங்கள் வீடுகளைப் பறிப்பதற்கா? உனது ஊருக்கே திரும்பிப் போ...!" சீக்கிய தலைப்பாகை அணிந்த சர்தார்ஜி ஒருவரின் உருவமும் அருகில் வரையப்பட்டிருக்கும்!

"லண்டனில் நான் கண்ட இன்னும் சில விளம்பரங்கள் - வசதியான அறை வாடகைக்கு உண்டு கறுப்பர்களும் ஆசிய இனத்தவர்களும் விண்ணப்பிக்க வேண்டாம்!

இப்படியாக பச்சை பச்சையாக - அப்பட்டமாக நிறத் துவேஷம் பேயாக தலைவிரித்தாடியதால்தான் 'இன நல்லுறவுச் சட்டம்' பிரிட்டனில் இயற்றப்பட்டு, பல முறை திருத்தப்பட்டு, 2010-ல் சமத்துவச் சட்டம் (EQUALITY ACT) என்ற பெயரில் அனைவரையும் பாதுகாத்து வருகிறது.

கறுப்பு இன நீக்ரோக்கள், மஞ்சள் நிற சீனர்கள், இந்திய - இலங்கை பாகிஸ்தானியர் ஆகியோரை மட்டும் இந்தச் சட்டம் பாதுகாக்கிறது என்றில்லை.

துவேஷவாதிகளால், பாரபட்சமாக, ஏற்றத்தாழ்வாக நடத்தப்படும் - பெண்கள், கர்ப்பிணிகள், அங்கவீனர்கள், கல்யாணம் செய்யாமல் ஒன்றாக வாழ்பவர்கள், ஓரினச்சேர்க்கையில் நாட்டம் உள்ளவர்கள் - யாராக இருந்தாலும்

அந்தக் காரணத்துக்காக அவர்களைத் தாழ்வாக நடத்துதல் இன்று பிரிட்டனில் தண்டனைக்குரிய CRIME - குற்றவியல் சம்பவம்.

தொலைபேசியில் 999 அல்லது 101-க்கு அழைத்து நேரடியாகவே காவல் துறையினருக்கு முறையிடும் அதிகாரம் சிறுபான்மையினர் அனைவருக்குமே இருக்கிறது.

இலங்கையில் ஆயுதப் போர் மௌனிக்கப்பட்டு 7½ ஆண்டுகள் கடந்து விட்டன. இந்த ஏழரை ஆண்டுகளில் சிங்களத் தலைமையை மட்டுமல்ல எங்கள் தாய்நில மக்களையும்கூட 7½ ஆட்டோ ஆட்டு என்று ஆட்டுகிறது.

சனி தோஷம் இலங்கையின் அரசியல் எதிர்காலத்தை எப்படியெல்லாம் மாற்றப்போகின்றதோ? என்ன செய்யப் போகின்றதோ? அந்தச் சனிபகவானுக்கே வெளிச்சம்.

பொதுத் தேர்தலில் மக்களால் தோற்கடிக்கப்பட்டாலும் மக்கள் தம் பக்கமே என்றும் மீண்டும் ஜனாதிபதியாக வரலாம் என்றும் மனப்பால் குடிக்கும் மஹிந்தர் ஒரு புறம் -

'அண்ணை எப்ப சாவான்? திண்ணை எப்ப காலியாகும்' என்ற போக்கில் நாளுக்கொரு செய்தி வெளியிடும் கோத்தபாயா பசில் சகோதரர்கள் மறு புறம்.

கரையான் புற்றெடுக்க அதில் புகுந்த பாம்பைப் போன்ற சிறிசேன அண்ணாச்சியோ-

"தமிழ் மக்களுக்கு எல்லா உரிமைகளையும் வழங்கவே நான் விரும்புகிறேன். ஆனால், பெரும்பான்மை சிங்கள சமூகத்தின் சம்மதத்துடன் மட்டுமே அவை வழங்கப்படவேண்டும்!" என்று பசப்பு மொழி பேசுகிறார்!

இந்த 40 திருடர்களுக்கு மத்தியில் ஒரு மிகப் பெரிய அலிபாபாவாக ரணில் விக்கிரமசிங்கம்! தமிழர்களுக்கு வாலையும் சிங்களவர்களுக்கு தலையையும் காட்டும் யு.என்.பி.கட்சி பிரதமர்.

கோத்தபாயா சகோதரர்கள் மீது வெளிப்படையாக பல கொலைகள், கொள்ளையடிப்பு, மோசடி குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டும் கூட, அவர்களைக் கைது செய்து சிறையில்தள்ளாமல் ரணில் காலம் தாழ்த்துவது ஏன்?

அலிபாபா குகையில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள ஏழைத் தமிழ் மக்களின் - விடுதலைப் புலிகளின் கோடானு கோடி பொன்னும் மணியும் மின்னும் வைரமும் பூதம்

கன்சர்வேடிவ் எம்.பி. Enoch pow

1970ல்நாஷனல் புரொண்ட் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

பிரதமர் ரணில் - ஜனாதிபதி மைத்திரி

M.A. மந்திரன்

R. சம்பந்தன்

ஒன்றினால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அந்தப் பூதத்தின் பெயர்தான் கே.பி. (கே.பத்மநாதன்)

திருப்பதி வேங்கடத்தானின் அடியையும் முடியையும் பக்தர்கள் கண்டு பிடிக்கலாம். ஆனால், இந்த இடியப்ப சிக்கலின் அடியையும் முடியையும் எமது வாழ்நாளில் காணத்தான் முடியுமா?

இது ஒரு புறமிருக்க, எங்கள் தரப்பில்:- ஒரு கடகத்தில் உள்ள நண்டுகளில் ஒன்று மேலே வர முயற்சிக்கும்போது, இன்னோர் நண்டு அதன் காலைப் பிடித்து இழுத்து கீழே விழுத்தி விடுமாம்! இப்படியாக யாரையும் முன்னேற விடாத - தாங்களும் முன்னேறாத தமிழ் உறவுகள்!

தமது தலைவர்களைக் கண்டனம் செய்வதில் - நக்கல் நையாண்டி செய்வதில் தமிழர்களுக்கு இணையே கிடையாது.

"முதல் அமைச்சர் விக்னேஸ்வரன் ஒரு கொழும்பு மனிதன், யாழ்ப்பாணத்தைப் பற்றி அவருக்கு என்ன தெரியும்? அவரது முதல் அமைச்சர் பதவி உண்மையில் எனக்குத்தான் தரப்பட்டிருக்க வேண்டும்!" -- இப்படி ஒருவர் புலம்பல்!

"சம்பந்தன் திருக்குணாமலையான்! சிங்கள அரசில் அமைச்சர் அதிகாரங்கள் கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிடைத்தவுடன் எங்கட தமிழ் ஈழக் கோரிக்கையை அவர் கைவிட்டிட்டார்!" -- இப்படி சில முட்டாள்களின் வாதம்.

"அது சரி, சுமந்திரன் எண்டவர் ஆர்? இவ்வளவு நாளும் எங்கேயோ இருந்திட்டு இப்ப வந்து நடுவில குதிச்சிருக்கிறார். சிங்களவன் போல நெருப்பா சிங்களம் பேசுறார்! மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் ஒரு மெதடிஸ்த கிறிஸ்தவன்! இவர் எப்படி தமிழ் ஈழத்தை வழிநடத்திறது!" -- இப்பிடியும் ஒரு மதத் துவேஷம்!

தொடர்ச்சி 28ம் பக்கத்தில்



சி.வி. விக்னேஸ்வரன்

ராஜகோபால்

திருக்குறளை வாழ்வோடு இணைத்து சாதனைப் பயணம் நடாத்தியவர்

திருக்குறள் செம்மல் மணிமொழியன் மறைவு நெஞ்சுக்கு வலியை தந்து கொண்டிருக்கிறது அந்தளவுக்கு அவர் என்ன செய்தார்?

பலரோடு பல காலம் பழகினாலும், ஒரு சிலர் மட்டும்தான் மனதிலே இடம் பிடித்து விடுகிறார்கள். அந்த உயர்ந்த மனிதர்களை நெஞ்சம் மறப்பதில்லை. அப்படித்தான் தமிழ்நாட்டில் சந்தித்துப் பழகிய ஒரு நல்ல உள்ளம் அம் மாமனிதர்!

மதுரை என்றாலே நியூ காலேஜ் ஹவுஸ் என்றளவு நிமிர்ந்து நிற்கும் அந்தப் பிரமாண்டமான பழம்பெரும் ஹோட்டலின் அதிபர் அவர். நேரம் போதாமல் ஓடுகின்ற தொழிலதிபர்களில் மணிமொழியன் ஒரு வித்தியாசமானவர்!

திருக்குறளை தன் வாழ்வோடு இணைத்துக் கொண்டு சாதனை பயணத்தை நடாத்தியவர். தமிழகத்தில் விநாயக மிஷன்ஸ் என்ற பல்கலைக்கழக சாம்ராஜ்யத்தை உருவாக்கிய அமரர் சண்முகசுந்தரத்தின் மகன் கணேசனை மணமுடித்தவர் மணிமொழியன் மகள் அனுராதா. அன்பான அக்குடும்பத்தோடு பல ஆண்டுகள் நெருக்கமாகப் பழகக் கிடைத்த வாய்ப்பும் நட்பும்தான் மணிமொழியன் பெருமைகளை முழுமையாக அறிய வைத்தது.

அன்பான மனைவி கமலாதேவி, அப்பளுக்கற்ற தங்கமான தந்தைக்குத் தப்பாமல் பிறந்த கவிதா, அனுராதா, கார்த்திகேயன், கல்யாணராஜன் ஆகிய நான்கு செல்வங்கள் குடும்பங்களோடு கிடைத்த உறவு எங்கள் பாக்கியம்.

1330 குறளையும் மனனம் செய்து வைத்திருக்கின்ற ஒரு தொழில் அதிபர் தமிழ்நாட்டில் இருக்கிறாரென்றால் அவர் ஒருவர்தான் என்பது மட்டுமல்ல, உலகத்திருக்குறள் பேரவை என்ற அமைப்பின் செயலாளராக பணி செய்து திருக்குறளை அவனியில் சிறப்போடு பவனி வரவைத்தவர்.

பொருளாதாரத்தில் முதுநிலைப் பட்டப்படிப்பை முடித்தவர்; ஆனால், திருக்குறள்தான் அவர் இரத்தத்தோடு இரண்டறக் கலந்தது. பத்தாம் வகுப்புப் போதே திருக்குறளை மனனம் செய்ய ஆரம்பித்து விட்டார்.

குன்றக்குடி அடிகளாரோடு ஏற்பட்ட நெருக்கத்தினால்



திருக்குறள் பேரவை என்ற அமைப்பை நிறுவி, அதன் ஊடாக தமிழிநாட்டில் மட்டுமல்ல, உலகமெங்கும் வள்ளுவத்தை மக்கள் மத்தியில் வளப்படுத்தும் லட்சியப் பணியில் ஈடுபட்டார்.

2012ம் ஆண்டு, லண்டனில் உலகத் திருக்குறள் பேரவையை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். அவரது பேச்சு அங்கு கூடியிருந்த நம்மவர்களை சிலிர்க்க வைத்தது. தமிழோடு வாழும் பற்றிமாகரன் தலைமையில் திருக்குறள் அபிமானிகள் கலந்து கொண்ட அந்த நிகழ்வில் தலைவராக பற்றிமாகரனும், செயலாளராக சிவ தம்புவம் தெரிவானார்கள். அந்நிகழ்வில் மணிமொழியன் எனக்கு நன்றி தெரிவித்து தன் உயர்ந்த பண்பால் நெகிழ வைத்தார்!

லண்டனில் நடந்த எனது துணைவியாரின் மாணவிகள் ஐவரின் பரத நிகழ்ச்சியில் சிறப்புரை நிகழ்த்துவதற்காக தனது மனைவி கமலா, மகள்கள் கவிதா, அனு, மருமகன் கணேசன் ஆகியோருடன் வந்திருந்தது மட்டுமல்ல, அந்த நிகழ்ச்சியில் பேசும்போது, ஒரு வேண்டுகோளையும் விடுத்தார்: "நடன ஆசிரியை ராகினி ராஜகோபால் குறளை பரதம் மூலம் நர்த்தனம் புரிய வைக்க வேண்டும்" என்ற அவரது ஆதங்கத்தைச் செயல்படுத்துகிற கைங்கரியம் நடந்து கொண்டிருக்கிறது. நேரில் அவர் பார்த்து மகிழ வேண்டும் என்ற விருப்பத்தை அவருக்குத் தெரிவித்து, அழைப்பு விடுத்தோம். மறுக்கவில்லை. மீண்டும் வரவேண்டும் என்று விரும்பினேன்.

ஒருவரிடம் பணம் இருந்தால் குணம் இருக்காது; குணம் இருப்பவரிடம் பணம் சேர்ந்திராது. இரண்டுமே இணைந்திருப்பது பெரியதொரு வாழ்க்கை நலம். அன்பும் பண்பும் இணைந்தவராக இருப்பதால் அவரிடம் திருக்குறள் உணர்வு மேலோங்கி இருக்கிறது. அவர் உயிரினும் மேலாக திருக்குறள் அவர் இதயத்தில் வாழ்ந்தது. பல ஆண்டு காலமாக அந்த மாமனிதருடன் அன்பாகப் பழகி வந்திருக்கிறோம். ஒவ்வொரு வருடமும் தமிழகத்துக்கு செல்லுகின்றபோது அவரைச் சந்திக்கத் தவறுவதில்லை. சென்னையில் அவர் மகள் வீட்டில் சந்திப்போம். பேசுவோம். சேர்ந்து விருந்துண்போம். பல குடும்ப நிகழ்வுகளிலும் அவர்களோடு உறவுகளாக பங்கு கொள்வோம். தங்களில் ஒருவராக பழகுவார். மதுரைக்கு அவர் இல்லத்துக்கும் போயிருக்கிறோம். நெஞ்சம் மறவாத அந்த நினைவுகள்...

ஒரு தடவை அவர் தனது மனைவி பிள்ளைகளுடன் திருப்பதிக்கு எங்களையும் கூட்டிச் சென்றார். வழியில் காளகஸ்தி ஆலயத்துக்குச் சென்று வழிபட்டு விட்டு இரவானதும் திருப்பதி அடிவாரத்தில் வசதியான ஹோட்டலில் தங்க வைத்தார். மிக அன்பாக மனம் விட்டுப் பேசினார். "எனது மாமா வி.கே. கல்யாணசுந்தரச்செட்டியார் அவர்களிடம் நான் கற்றுக்கொண்ட பாடங்கள் ஏராளம். ஒரு நல்ல தொழில் அதிபராவதற்கு கடுமையான உழைப்பு, புத்திக் கூர்மை, நல்ல உறவு, சான்றோருடைய ஆசி ஆகியவை முக்கியம். இவற்றை எல்லாம் கற்றுக் கொடுத்தவர் அவர்!" என்று தன் உள்ளத்து உணர்வுகளைச் சொன்னார். அப்படி என்னுடன் நிறையவே பேசியிருக்கிறார்.

அவர் இன்று நம்மோடு இல்லை; ஆனால், அவர் நினைவுகள் நெஞ்சோடு வாழ்கிறது!

மறைந்தும் மறையாத மாமனிதர் அவர்.

அவர் பிரிவால் சொல்லொணாத்துயருறும் குடும்பத்தாரின் துயரில் பங்கு கொள்கிறோம். அவர் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

திருக்குறள் கோபுரம் மதுரையில் சாய்ந்துவிட்டது!

மதுரையைச் சேர்ந்த உலகத் திருக்குறள் பேரவைப் பொதுச்செயலரும், பிரபல தொழிலதிபருமான (காலேஜ்ஹவுஸ்), ந.மணிமொழியன் (71) சென்னையில் 13.11.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர், மதுரையில் உலகத் திருக்குறள் பேரவையை தொடங்கி 38 ஆண்டுகளாக நடத்தி வந்துள்ளார். மலேசியா, கனடா, லண்டன் உள்ளிட்ட வெளிநாடுகளிலும் உலகத் திருக்குறள் பேரவையை தொடங்கியுள்ளார்.

திருக்குறள் மீது பற்றுக்கொண்ட அவர், திருக்குறள் பயணம் உள்ளிட்ட நான்கு இலக்கிய நூல்களை எழுதியுள்ளார். மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் தமிழ்ச்செம்மல் விருது, சுவாமி கிருபானந்த வாரியார் விருதுகள் உள்ளிட்ட 14 விருதுகளையும் பெற்றுள்ளார்.

மதுரை மீனாட்சிசுந்தரேசுவரர் திருக்கோயிலின் மேற்கு கோபுரத் திருப்பணியை அவர் மேற்கொண்டிருந்தார். உலகத் திருக்குறள் பேரவைப் பொதுச்செயலர், தமிழ்நாடு ஆயிரவைசியர் சங்க மாநிலத் தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளையும் வகித்தார். அண்மையில் அவரது "அகவை 70" என்ற இலக்கிய விழா மதுரையில் நடைபெற்றது. அவரது இறுதிச்சடங்கு மதுரை சொக்கிகுளம் புலபாய் தேசாய் தெருவில் உள்ள அவரது இல்லத்தில் மறுநாள் பகலில் நடைபெற்றது. அவருக்கு



கமலாதேவி என்ற மனைவியும், 2 மகன்கள், 2 மகள்கள் உள்ளனர். தொடர்புக்கு 98430 53550.

குன்றக்குடி அடிகளார் இரங்கல்:

குன்றக்குடி பொன்னம்பல தேசிகர் விடுத்துள்ள இரங்கல் செய்தி "உலகத் திருக்குறள் பேரவையின் பொதுச்செயலர் ந.மணிமொழியனார் மறைவு திருக்குறள் அறிஞர்களுக்கும், தொண்டர்களுக்கும், மாணவர்களுக்கும், தமிழ் உணர்வாளர்களுக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்".

கவிஞர் வைரமுத்து விடுத்துள்ள இரங்கல் செய்தி

திருக்குறள் மணிமொழியன் காலமானார் என்ற செய்தி அறிந்து கலங்கிப் போனேன். மதுரை மாநகரின் மாமனிதர் மறைந்து போனார். புலவர்க்குப் புலவராகவும், புரவலர்க்குப் புரவலராகவும் திகழ்ந்த ஒரு தமிழ்க் கொடையாளரை இழந்துவிட்டோமே என இலக்கிய இதயம் சிதறி நிற்கிறது. குறளுக்கு பொருள் தந்தார், தான் ஈட்டிய பொருள் தந்தும் குறள் வளர்த்தார். அவர் குறளைக் கற்றவர் மட்டும் அல்லர். கற்றபின் அதற்குத் தக நின்றவரும் அவரேதான். திருக்குறள் கோபுரம் சாய்ந்துவிட்டது.

எங்கள் தமிழ் உலகம் தோள்கொடுக்கும் ஒரு தோழமையை இழந்துவிட்டது. மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்கு நான்கு கோபுரங்கள். ஆனால், மதுரையில் திருக்குறளுக்கு ஒரே ஒரு கோபுரம்தான். அது மணிமொழியன்தான். அதுவும் சாய்ந்துவிட்டதே என்று ஓய்ந்து நிற்கிறோம்".

நன்றி: தினமலர்

குறளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்த 'திருக்குறள் செம்மல்' மணிமொழியனார்!

கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

எனும் வள்ளுவர் அறிவுரைக்கேற்ப திருக்குறளையே கசடறக்கற்று அதற்குத்தக வாழ்ந்தவர் மணிமொழியனார். மதுரையின் பெருமைகளுள் ஒன்றானவர் மணிமொழியனார். 'தோன்றின் புகழோடு தோன்றுக' என்ற குறளுக்கு இலக்கணமானவர். இலக்கிய மேடைகளில் எந்த விழாவாக இருந்தாலும் அந்த விழாவிற்கு பொருத்தமான திருக்குறளை மேற்கோள்காட்டிப் பேசுவதில் வல்லவர். 1330 திருக்குறளையும் முழுமையாக அறிந்த தொழிலதிபர் மணிமொழியனார் ஒருவராகத்தான் இருப்பார். இவருடன் ஒருமுறை பழகி உரையாடியவர்கள் வாழ்நாள் முழுவதும் அவரை மறக்கமாட்டார்கள். கணக்கின்றி திருக்குறளுக்காக பொருட்செலவு செய்தவர் மணிமொழியனார்.

மணிமொழியனார் இந்தியா மட்டுமல்லாமல் சிங்கப்பூர், மலேசியா இங்கிலாந்து ஆகிய நாடுகளிலும் இலக்கியத்தொடர்பு கொண்டவர். இலண்டனில் உலகத்திருக்குறள் பேரவை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றிய பெருமை இவருக்குண்டு. இலண்டன் வாழ் தமிழர்களின் உள்ளங்களை தனது உயர்ந்த பண்பால் கொள்ளை கொண்டவர் மணிமொழியனார். இயந்திரமயமான உலகில் மனிதர்களும் இயந்திரமாகவே மாறி வரும் காலத்தில் மாமனிதராக விளங்கிய மணிமொழியனாரை மதுரை மாநகரம் பெற்றிருந்தது பெருமைக்குரிய விஷயமாகும்.

'நியூகாலேஜ் ஹவுஸ்' வளாகத்தில் பல படைப்பாளிகளின் நூல் வெளியீட்டிற்கும் இலக்கிய அரங்கேற்றத்திற்கும் இடமும் உணவும் இலவசமாக அளித்து இலக்கியப்பறவைகளுக்கு வேடந்தாங்கலாக விளங்கியவர் மணிமொழியனார். மதுரையில் உலகத்திருக்குறள் பேரவை தொடங்கிய நாள் முதல் அதன் செயலாளராகவும் புரவலராகவும் இருந்து திருக்குறள் கருத்தரங்குகளையும், மூன்று நாள் மாநாடுகளையும் நடத்தி உலகத்திருக்குறள் அறிஞர்களை உரையாற்றச் செய்தவர். ஆண்டு தோறும் பேச்சு, கட்டுரைப் போட்டிகள் நடத்தி பள்ளி, கல்லூரி மாணவர்கள் திருக்குறளை மேலும் துய்க்கும் வாய்ப்பளித்தவர் மணிமொழியனார்.

உலகப்பொதுமறையான திருக்குறளை இவர் அளவிற்கு வேறு யாரும் நேசிக்கவில்லை என்றே சொல்ல வேண்டும். திருக்குறள் திருப்பயணம் மேற்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் தருண் விஜய் அவர்கள் மதுரைக்கு வந்த போது நடத்தப்பட்ட பாராட்டுவிழாவில் திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க ஆவன செய்யுமாறு கோரிக்கை விடுத்தார்.

ரோட்டரி எனும் உலகளாவிய தொண்டு நிறுவனத்தின் பெருங்கொடையாளராகிய இவர், மதுரை மேற்கு ரோட்டரி சங்கத்தின் தலைவராகப் பணியாற்றி பல பொதுச்சேவைகள் செய்து பரிசுகள் பலப்பெற்றவர். V.K.K அறக்கட்டளை நடத்தி வரும் V.K.K மேனிலைப்பள்ளியின் தலைவராக சிறந்த கல்விப் பணியாற்றியவர். மதுரை மாநகருக்கு மத்தியில் அமைந்துள்ள மதுரை நியூகாலேஜ் ஹவுஸ் விடுதி மற்றும் உணவகத்தின் பொறுப்பிலிருந்து மணிமொழியனார் தனது துணைவியார் திருமதி. கமலா மற்றும் இருமகன்கள், இருமகள்கள் பேரக்குழந்தைகளோடு இனிய இல்லறம் பேணியவர்.

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்தவர்க்கு

எனும் வள்ளுவர் வாக்கிற்கேற்ப வாழ்ந்து காட்டிய 'நடையின் நின்றுயர் நாயகர்' விருந்தோம்பல் செம்மல் மணிமொழியனார் நம்மிடமிருந்து மறைந்துவானுலகத்தவருக்கு நல்ல விருந்தினராய் உயர்ந்துள்ளார். அவரது ஆன்மா அமைதி கொள்க.

'திருக்குறளை தேசியநூலாக்கியே தீருவோம் என உறுதி ஏற்போம்!

மணிமொழியனார் கனவை நனவாக்குவோம்

இரா.இரவி (மதுரை)

மதுரையின் பெருமைகளில் ஒன்றானவர் மணிமொழியனார். உலகப் பொதுமறையான திருக்குறளை மனப்பாடம் செய்ததோடு நின்று விடாமல் வாழ்விலும் கடைபிடித்து வரும் மாமனிதர். 'தோன்றின்புகழோடு தோன்றுக' என்ற திருக்குறளுக்கு இலக்கணமானவர். இலக்கிய மேடைகளில் எந்த விழாவாக இருந்தாலும் அந்த விழாவிற்கு பொருத்தமான திருக்குறளை மேற்கோள் காட்டி பேசுவதில் வல்லவர். 1330 திருக்குறளும் மனப்பாடமாக அறிந்த தொழில் அதிபர் மணிமொழியன் ஒருவராகத் தான் இருப்பார். இவருடன் ஒருமுறை உரையாடி விட்டால் உரையாடியவர்கள் வாழ்நாள் முழுவதும் அவரை மறக்க மாட்டார்கள். கணக்கின்றி திருக்குறளுக்காக செலவு செய்து வரும் புரவலர், நல்லவர்.

மணிமொழியனார் மதுரை மட்டுமல்ல, உலகளாவிய இலக்கியத் தொடர்பு உள்ளவர். சிங்கப்பூர்,மலேசியா மட்டுமல்ல லண்டன் புதினம் இதழின் ஆசிரியர் இனிய நண்பர் அவர்களுடன் குடும்ப நட்புஉள்ளவர். ராஜகோபால் அவர்களின் மனைவி திருமதி ராகினி லண்டனில் நடனப்பள்ளி ஆசிரியராக இருந்து கலை வளர்த்து வருபவர். ராஜகோபால் அவர்கள் எப்போது மதுரைக்கு வந்தாலும் நியூ காலேஜ் ஹவுஸ் விடுதியில்தான் தங்குவார். வரும் போது தகவல் தந்து விடுவார். நான் சென்று வரவேற்று மகிழ்வேன். அவருடன் பேசும் போது மணிமொழியனார் பற்றி மிக உயர்வாக எடுத்து இயம்புவார். இப்படி ஒரு மனிதரை, ஒரு புரவலரை எங்கும் பார்க்க முடியாது. இயந்திரமயமான உலகில் மனிதர்களும் இயந்திரமாகவே மாறி வரும் காலத்தில் மாமனிதராக விளங்குகிறார் மணிமொழியனார் என்பார்.

இலண்டன் புதினம் ராஜகோபால் அவர்களுக்கு

தொடர்ச்சி 30ம் பக்கம்

இதழுரவை ச.சிறீரங்கன்

தாயக தரிசனம்

இரண்டு வருடங்களுக்கு முன்னர் சைவத்திருக்கோயில் ஒன்றிய மகாநாட்டுக்காக, லண்டனுக்கு வந்திருந்த பேராசிரியர் வேதநாதன் அவர்கள் உரையாற்றும் போது, பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார். "யாழ்ப்பாணத்தில், வறுமை காரணமாகப் பலர் மேற்படிப்பினைத் தொடரமுடியாதிருக்கின்றனர். மாணவர்கள் சிலர், வறுமை காரணமாகத் தமது உயர்கல்வியைத் தொடர முடியாதுள்ளனர். சிலர் பல்கலைக்கழகப் படிப்பைக் கைவிட்டுள்ளனர். இந்த நிலையை மாற்றி, மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்கு, வெளிநாட்டிலுள்ள அறப்பணி ஆலயங்களும், தர்ம நிறுவனங்களும் முன்வர வேண்டும்". பேராசிரியரின் உரையை செவிமடுத்த எமது ஆலயத்தைச் சேர்ந்த இரண்டு சபைகளுமாகத் திடீர் முடிவொன்றினை மேற்கொண்டோம். 'அறிவுச்சுடர்' என்ற திட்டத்தின்கீழ், கனகதுர்க்கை அம்மன் ஆலயம், பொதுமக்களாகிய அடியார்கள் காணிக்கையைச் சேர்த்து, சேமித்து வரும் பணத்தில், ஒரு தொகையை அனுப்புவது என்று முடிவு செய்தோம். இதன் பிரகாரம் இப்பணியை மேற்கொள்ளுமாறு என்னை ஆலயம் பணித்தது. ஏற்கெனவே எம்மால் திரட்டி, வைக்கப்பட்டிருந்த விபரத்திலிருந்து, பன்னிரண்டு மாணவர்களுக்கு தலா 200 பவுண்ஸ் வழங்குவதென்றும், இந்த மாணவர்கள் கல்வியறிவைத் தொடர, தொடர்ந்து வாய்ப்பை அளிப்பது என்ற தீர்மானத்துடனும் பயணத்தை மேற்கொண்டோம். வறுமைக்கோட்டின்கீழே, படிப்பைத் தொடர முடியாது, வறுமையின் கோரப்பிடியில் தினறும் மாணவர்களின் கல்விக்கு எமது ஆலயம் கைகொடுக்கும் இப்புனிதப் பணியைச் செய்வதற்கு, ஓர் கருவியாகக் கிடைத்திருக்கும் வாய்ப்பை எண்ணியும், பரம்பொருளின் அருளை நினைத்தும் மனம் புளகாங்கிதப்பட்டது. 'பிச்சைபுகினும், கற்கை நன்றே' என்ற ஔவையின் கூற்றையும் எண்ணிக் கொண்டேன். கூடவே,

"கண்ணுடையர் என்பவர் கற்றோர்,
முகத்து இரண்டு புண்ணுடையர் கல்லாதவர்"

என்ற திருக்குறளும் நினைவுக்கு வந்தது. எமது நலிந்த மக்களின் கல்வித்தரத்தை உயர்த்தி வைக்கப் பாடுபட வேண்டும் என்று மனம் கட்டியம் கூறிக் கொண்டே இருந்தது.

கொழும்பை அடைந்ததும், உடனடியாக யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டோம். மறுநாள் காலை பேராசிரியர் வேதநாதனை, அவரது இல்லத்தில் சந்தித்து, எவ்வாறு இக்கைங்கரியத்தைச் செய்வதென்று கலந்தாலோசித்தோம். ஆலயம் தெரிவு செய்த மாணவர்களின் பெயர்ப்பட்டியலை அவரிடம் காண்பித்தோம். "நவராத்திரிக் காலத்தில் இப்பணியைச் செய்ய இங்கு வந்திருக்கிறீர்கள். இது ஓர் நல்ல வாய்ப்பாகும்" என்று பேராசிரியர் குறிப்பிட்டார். யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து ஒருவரும், வன்னி மாவட்டத்தில் இருந்து பதினொரு பேரையும் ஆலயம் தெரிவு செய்திருந்தது. அனைத்துப் பிள்ளைகளுடனும் தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டு, விபரத்தைக் கூறினோம். முள்ளியவளைக்கு, தன்வீட்டுக்குச் சென்றிருந்த ஒருபிள்ளையுடன் மட்டும் தொடர்பு கொள்ள முடியவில்லை. அவரது விபரத்தை எடுத்துக் கொண்டு, முள்ளியவளைக்குச் சென்றேன். அந்த மாணவி வன்னிப்போரில் தனது இரண்டு கண்களை இழந்திருந்ததாகவும் தனது இரண்டாம் வருடப் படிப்பின் போதே இச்சம்பவம் நடந்ததாகவும், உதவிகோரிய கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருந்தார். இதனாலேதான் அவரைத் தவறவிட்க்கூடாதென்று நினைத்து, அவரது வீட்டைத் தேடிப் பிடித்தேன். எங்களை அறிமுகம் செய்த போது, இரண்டு மாதங்களுக்கு முன்னர், அப்பிள்ளையின் தாயார் இறந்துவிட்ட சோக சம்பவத்தை தந்தையார் குறிப்பிட்ட போது, 'பட்ட காலில் படும்' என்ற வார்த்தையே தோன்றியது. "மிகப்பெரிய உதவி- எனது அப்பாவுடன் நாளையே யாழ்ப்பாணம் வருகின்றேன்" என்றார். அவர் முகத்தில் எவ்வித பிரதிபலிப்பும் தெரியவில்லை. 'எப்படிப் பிரதிபலிப்போ அல்லது மகிழ்ச்சியோ வரும். கண் பார்வையுடன் முதலாம் வருடப் பட்டப்படிப்பை முடித்தவர், கண்களை இழந்தும் இரண்டாம் வருட படிப்பைத் தொடர்கின்றார் என்றால், அது எப்படியிருக்கும்? கண்களை மறைத்திருக்கும் கறுப்புக்கண்ணாடியை அகற்றி தனது முகத்தைக் காட்டியபோது, எனது கண்களில் நீர்த்துளிகள் அரும்பின.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மண்டபத்தே பட்டப்படிப்பு மாணவர்கள் ஒரு புறம், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் இன்னொருபுறமாக ஒருங்கு கூடியிருக்க, (CHEQUE) காசோலைகள் வழங்கும் நிகழ்வானது சிறப்பாக நடைபெற்றது. இதற்குத் தலைமை தாங்கி பேராசிரியர் வேதநாதன் உரையாற்றுகையில், "வறுமை காரணமாகப் பட்டப்படிப்பைத் தொடர இயலாத மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களைத் தேடிவந்து, பண உதவி செய்யும் கனகதுர்க்கை அம்மன் அடியார்கள் பாராட்டுக்கு உரியவராகின்றனர். இது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றில் ஓர் முக்கிய, சரித்திரமாகும்" என்று சுட்டிக் காட்டினார். காசோலைகளைப் பெற்றுக் கொண்டோரிடையே, ஓர்வித மகிழ்ச்சியை இனம் கண்டு கொண்டோம். என்னைப் பேசுமாறு பணித்தபோது, "இது எனது சொந்தப் பணம் அல்ல. இப்பணத்தை அன்பளிப்பாகத் தந்தவர்கள் அடியார்கள். நாங்கள் இதனை வழங்கும் ஓர் கருவியாகச் செயற்பட்டுள்ளோம்" என்று குறிப்பிட்டேன்.

இதனை முடித்துக் கொண்டு, எமது ஆலயம் முன்னெடுத்த இன்னொரு பணியைப் பூர்த்தி செய்யப் புறப்பட்டோம்

யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட, உடல் ஊனமுற்ற மக்களுக்கு, சக்கரநாற்காலிகள் வழங்கும் தொண்டிற்காக, தொண்டு நிறுவனமான 'ஜெய்பூர்' அலுவலகத்தை அடைந்தோம். அங்கே பணி செய்பவர்கள் பலர் ஊதியம் பெறாது, சேவை செய்யும் உளப்பாங்கையும், திருமூலர் குறிப்பிட்ட 'யாவர்க்குமாம் இன்னுரைதானே' என்று சேவை செய்யும் முகமலர்ச்சியையும் நாங்கள் தரிசித்தோம். யாவரும் அறிந்த 'ஜெய்பூர்' நிறுவனம் செய்யும் பாரியபணி, மிகவும் போற்றுதலுக்குரியது. கனகதுர்க்கை அம்மன் ஆலயம் அன்பளிப்புச் செய்த, சக்கர நாற்காலிகள், வண்டிகளை, ஊனமுற்றோருக்கு வழங்கும் போது, அடியேன் அடைந்த மகிழ்வை விபரிக்க முடியாது. ஏற்கெனவே எமது ஆலய நிர்வாக உறுப்பினர்களும், அறங்காவலர்களும் இப்புனித கைங்கரியத்தைக் கட்டம், கட்டமாகச் செய்துள்ளனர். இந்த முறை இப்பணியை நானும், எனது மனைவியும் முன்னெடுத்தோம். அங்கு ஒழுங்கு செய்யப்பட்ட வாணிவிழாவில் பங்குபற்றியதுடன், வண்டில்களையும் கையளிக்கும் நிகழ்வையும் நிறைவேற்றினோம். 'ஜெய்பூர்' தொண்டுநிறுவனம் பற்றியும், அவர்கள் செய்யும் தொண்டுகள் பற்றியும் இன்னொரு கட்டுரையில் விரிவாகப் பார்க்கலாம்.

'NGO'-எனப்படும் தொண்டு நிறுவனத்தில், பணி செய்த பல வெளிநாட்டவர் அரச நிர்வாக இயந்திரத்தின் நெருக்கடியால், தாயகத்தை விட்டு வெளியேறிவிட்டனர். அவர்களால் பயிற்சியளிக்கப்பட்ட, எம்மவர்கள் பலர் தமது கடமையுடன், சேவையும் செய்கின்றனர். இவர்களில் சிலர் எதியோப்பியா, வியட்னாம் ஆகிய நாடுகளில் பயிற்சி பெற்றுத் திரும்பி உள்ளனர். 'ஜெய்பூர் நிறுவனம் செய்கின்ற பொய்க்கால், கைகளையும் எமக்குக் காண்பித்தனர். 'ஜெய்பூர் அமைப்பின் வேலைத்தளத்தையும் WORKSHOP எம்மை அழைத்துச் சென்று, காண்பித்தனர். இந்தத் தொண்டர் அமைப்பைச் சேர்ந்த யாவருமே, மாற்றுத் திறனாளிகளை வாழவைக்கச் செய்யும் பணியைக் கண்டு வியந்தோம். உண்டு களித்து, தன் குடும்பம், தன்வேலை, தன் சம்பாத்தியம் என்று ஒதுங்கிக் கொள்ளும் சிலர், இப்படியான தொண்டர் அமைப்பைச் சென்று பார்க்க வேண்டும் என்பது எனது அடக்கமான கருத்தாகும். இந்த தொண்டு அமைப்புக்கு, எமது ஆலயத்தோடு, வெளிநாட்டுத் தமிழர்களின் பண உதவியும், 'மனித நேயம்' போன்ற அமைப்பின் தர்மப்பணியும் கிடைக்கின்றது. எனினும், 'ஜெய்பூர் செய்கின்ற பாரியபணிக்கு, புலம் பெயர் தமிழர்கள் எவ்வளவோ செய்ய வேண்டியுள்ளது. ஜெய்பூரின் பணிக்கு, தற்போது பணத்தட்டுப்பாடு மிக அதிகமென்று, அதன் தலைவியான, இளைப்பாறிய வைத்திய கலாநிதி திருமதி கணேசமூர்த்தி கவலையோடு தெரிவித்தார். இவருடன் பணியாற்றும் டாக்டர் திருமதி தெய்வேந்திரா, திரு.ஜேசுரட்ணம் ஆகியோரையும், ஏனைய தொண்டர்களையும் தரிசித்தோம்.

அடுத்த புதினம் இதழில் "நந்திக்கடல்" தரிசனம்

Money in Minutes to Sri Lanka Since 1999

Your money sent from the UK and not credited locally in Sri Lanka

The Official Way!

FAST CASH
SEND TODAY - COLLECT TODAY

Looking to Sponsor Your Family and Friends from Sri Lanka?

Open Days 7

WARNING!!

BE SAFE, NOT SORRY!!!

DON'T BE A VICTIM OF AN UNKNOWN AGENT!

KNOW YOUR UK TRANSFER COMPANY BEFORE PARTING WITH YOUR HARD EARNED MONEY.
A HIGHER EXCHANGE RATE DOES NOT MEAN A SAFE & SECURE TRANSFER TO SRI LANKA.

Send Fastcash from the UK and receive an official receipt for each transaction!

Wherever you are in the UK,
you don't have to come to us!
Credit our account online & call us.

BARCLAYS

A/C Name : C.E.C. LTD | A/C No : 70713945
Sort Code : 20-36-47

OUR PROMISE
YOUR MONEY HAS SENT FROM THE UK AND NOT CREDITED LOCALLY BY UNKNOWN SOURCES.
OFFICIAL TRANSFERS

020 8886 4488

48 Mitcham Road, Tooting SW17 9NA
2 minutes from Tooting Broadway close to McDonald and next to Gala Bingo

www.efastcash.co.uk

WISHING ALL OUR LOYAL CUSTOMERS A HAPPY CHRISTMAS AND PROSPEROUS 2017!

MCG

FASTCASH IS A FCA & HM CUSTOMS AND EXCISE / REGISTERED BUSINESS. MSB 12112819 / FCA -PI 540536

HNB · BOC · PEOPLE'S BANK · NSB · Sampath Bank · SEYLAN · NDB bank · Nations TrustBank · HSBC · PAN ASIA · Standard Chartered · DFCC Vardhana Bank · Amana Bank

CEC
SEN MONEY FROM 36 BRANCHES

OAKWOOD	0208 886 4488	CENTRAL LONDON	0207 355 3800	EDMONTON	0208 884 4646	WOOD GREEN	0208 889 6464	BARNET	0208 449 4033	ST ALBANS	01727 861 111
GOLDERS GREEN	0208 455 0099	FINCHLEY	0208 343 3737	CAMDEN	0207 284 1415	SWISS COTTAGE	0207 722 6767	ILFORD	0208 553 5300	CHISWICK	0208 995 9585
ROMFORD	0170 873 3633	LONDON BRIDGE	0207 407 5717	FLEET STREET	0207 936 4646	WELWYN G.CITY	0170 733 3883	ROYAL DOCKS	0207 474 4700	WALTHAMSTOW	0208 521 5252
HENDON	0208 202 4300	BRICK LANE	0207 033 4600	GREEN STREET	0208 552 5100	HOLLOWAY RD	0207 700 7575	CAMDEN NW1	0203 437 1200	TOTTENHAM COURT RD	0203 437 1212
TOOTING	0203 437 1220	HARROW	0203 437 1221	DALSTON	0203 437 1222	FULHAM	0203 437 1223	BAKER STREET	0203 437 1225	WEMBLEY LDO	0203 437 1226
HATFIELD	0203 437 1227	STRATFORD	0203 437 1228	ERITH	0203 437 1229	EASTHAM	0203 437 1230	FOREST HILL	0203 437 1231	KENTISH TOWN	0203 437 1232

Clean, Modern Family Accommodation in SRI LANKA

Quality 1,2,3 Bed Apartments in Mt. Lavinia

Close to St. Thomas Collage and Mt.Lavinia Hotel
3min to Galle Rd, 5min to Beach

Sea Side
Fully Furnished
AC & Lift
with Parking



Rent from
£25
per day*

For Bookings Contact Mike
07733 261 999
Visit our website
www.stayatmount.com

BEST DEALS TO SRI LANKA

HolidayAir
A Travel Experience to Remember

DO NOT BOOK YOUR AIR TICKET WITH ANY OTHER TRAVEL AGENT UNTIL YOU SPEAK TO US!

KUWAIT AIRWAYS	QATAR AIRWAYS	OMAN AIR	Emirates	ETIHAD AIRWAYS
FROM £415 INCL. TAXES	FROM £429 INCL. TAXES	FROM £405 INCL. TAXES	FROM £405 INCL. TAXES	FROM £449 INCL. TAXES
46+7kg	30+7kg	30+7kg	40+7kg	23+7kg

WE SPECIALISE IN TAILOR MADE HOLIDAY PACKAGES TO SRI LANKA TO SUIT TO ALL BUDGETS. BOOK ANY HOTEL / ANY ROOM TYPE IN SRI LANKA, BEST PRICE GUARANTEED!

WORLDWIDE SPECIALS

TORONTO	NEW YORK	MELBOURNE/ SYDNEY
FROM £400	FROM £350	FROM £610

FOR MORE OFFERS AND OPTIONS VISIT
www.holidayair.com
130 HIGH STREET, BARNET, EN5 5XQ

0208 440 0770
OPEN 6 DAYS - MON - FRI 9.00 AM - 6.00 PM/ SATURDAY 9.30 AM - 5.30 PM

*All advertised fares are of real time itineraries during the issue of publication. Fares include taxes and are subjected to availability and change without any prior notice. Terms and conditions apply.

சிவ தியாகராஜா

பூதத்தம்பி கோட்டை

காதல் வேதனை

அத்தியாயம் 6

குணகடலின் நீர்ப்பரப்பைக் கிழித்துக் கொண்டு கோமளக் கதிரவன் மேலே எழுந்து கொண்டிருந்த நேரம். காரிருள் படர்ந்து கிடந்த வையம் கனகச் சுடர் பரந்து புலர்ந்தது. தூங்கும் பனிநீரை வாங்கிய கதிரோனின் தயவால் மரங்களும், செடிகளும், புற்களும், கொடிகளும் மீண்டும் பச்சை நிறம் பெற்றுப் பொலிந்தன. புள்ளினங்கள் கலகலத்துத் தமது கூடுகளை விட்டுப் பறந்தன. அம்பை மீன்கள் நீரிலிருந்து மேலே எம்பிக் குதித்தன.

காரிருள் களைந்து புவியெங்கும் புத்தொளி பரந்தபோது பனங்காமத்தில் பாலியாற்றங்கரையிலிருந்த காவல் கோட்டையும், அதன் மத்தியிலிருந்த அரச மாளிகையும் பனிப்படலம் நீங்கி, கண்களுக்குப் புவனாயின. பனங்காம அரசன் கைலாய வன்னியனால் கட்டுவிக்கப்பட்ட அந்த மாளிகை அவனது மனைவி, மகன், மருமகள், பேத்தி அனைவரதும் வதிவிடமாக விளங்கியது.

அந்த மாளிகையின் மேல்மாடத்தில் அமைந்திருந்த சயன கூடத்தில், தேக்கு மரக்கட்டிலில், பஞ்சணை மெத்தையில் மென் பஞ்சுத் தலையணைகளை அணைத்தவாறு, உடலை விட்டு நழுவும் உடைகளைக்கூட கவனிக்காது, விடிந்த பின்னரும் படுக்கையை விட்டு எழும்ப மனமில்லாமல் அவள் படுத்துக் கிடந்தாள்.

அவள் என்ன மனிதப் பெண்ணா?

அல்லது கந்தர்வ தச்சன் விஸ்வகர்மா செதுக்கிக் கொடுத்த தங்கச் சிலையா?

பளபளத்து இடுப்புவரை தொங்கும் கருமை நிறம் செறிந்த சுரி குழல்; பிறை நிலா நெற்றி; நெற்றியின் நடுவே செந்நிறப் பொட்டு; வளைசிலைப் புருவங்கள்; கருமை நிற நீள்சேல் விழிகள்; நீண்டு நிமிர்ந்த நாசி; பவளக் காதணிகள் அணிந்த சிறிய செவிகள்; செங்கமல இதழ் வண்ணக் கன்னங்கள்; செம்பவளக் கனியிதழ்கள்; இளநுங்கு மோவாய்; வலம்புரிச் சங்குக் கழுத்து; வழவளப்பான வெண் மூங்கில் தோள்கள்; திரண்டுருண்ட செவ்விளநீர் நெஞ்சகங்கள்; தந்த வளையல்கள் அணிந்த வாளிப்பான நீண்ட கரங்கள்; உள்ளடங்கிக் குறுகிய மென்மையான வயிறு; இருக்கிறதா இல்லையா? என ஐயுறவைக்கும் மெல்லிடை; இடுப்பில் நழுவும் மென் சிவப்புக் கலிங்கத்தினூடே தோன்றும் செங்கதலித் தொடைகள்; நீண்டு வளர்ந்த கெண்டை மீன் கால்கள்; செம்பஞ்சுக் குழம்பேற்றிய செவ்வடிகள்.

இத்தகைய பேரெழிலான அங்க அமைப்புக்களுடன் பொன்னெழில் பூத்த மேனியளாக - பேரழகுப் பெட்டகமாக விளங்கிய அக்கன்னியின் வதனம் சோபை இழந்து- சுருதி இழந்து- சூம்பிக் கிடந்தது.

அந்தக் கன்னியின் ஆதங்கத்திற்குக் காரணமில்லாமல் இல்லை.

விடிந்து வெகுநேரமாகியும் அவன் பஞ்சணையை விட்டு எழுந்திராமல் விழித்துக் கொண்டே படுத்திருந்தான். அவள் வழமைபோல முந்தைய இரவிலும் சரியாகக் கண்ணுறங்கவில்லை. எதற்காக உறங்க வேண்டும்? எதற்காக விழித்தெழ வேண்டும்? அவளுக்கு எந்நேரமும் கட்டிலில் படுத்திருப்பதைத் தவிர வேறெதிலும் மனம் செல்லவில்லை!

அவளது சோகத்திற்கும், சந்தோஷமின்மைக்கும், அங்கலாய்ப்புக்கும், ஆதங்கத்திற்கும் காரணம் ஒரு வாலிபன்! கடந்த ஓராண்டுக் காலமாக ஒவ்வொரு மாதமும் குறைந்த பட்சம் இரு தடவையாவது அவளை வந்து பார்த்து - பேசி- சல்லாபித்து -சரசமாடிப் போன ஜோதிநாதன், இப்போது இரு மாதங்களாக அவளைச் சந்திக்க வரவேயில்லை. அது மட்டுமல்ல; அவனிடமிருந்து செய்தி ஏதும் வரவுமில்லை.

இவ்வாறு பிரிவுத் துயரால் அவதியுறும் அந்தப் பேரழகி வேறு யாருமல்ல; கைலாய வன்னியனின் பேத்தி- குமார வன்னியனின் புதல்வி - சந்திரவல்லியே தான்! இந்தச் சந்திரவல்லி- ஜோதியின் தாயார் அழகவல்லி இளமையில் எப்படி இருந்தாளோ, அப்படியே அவளின் பிரதிபிம்பமாகவே இருந்தாள். இது அவர்களது பாரம்பரியமான மரபணுக்கள் கொடுத்த கொடை போலும்!

சில சமயங்களில் தாத்தா கைலாய வன்னியர் அவளைப் பார்த்து "அழகு! அழகு" என அழைக்கும் வேளைகளில் இவர் தன்னைத் தனது மகளென நினைத்துத் தடுமாறுகிறார் என்றே அவளுக்குத் தோன்றும்.

சந்திரவல்லியின் தோழி அனுரதி திடுதிப்பென சயன அறைக்குள் நுழைந்தாள்.

"சந்திரா! எழுந்திரு. விடிந்து வெகு நேரமாகிவிட்டது. எழுந்து போய்க் காலைக் கடன்களை முடித்துவிட்டு வா. நாங்கள் வெளியே சென்று சிறிது நேரம் உலாவிவிட்டு வருவோம். உனது பிரச்சனைக்கு ஒரு தீர்வு வைத்திருக்கிறேன்"

"முதலிலை தீர்வைச் சொல்லு; அப்புறம் எழுந்திருக்கிறேன்."

"ஜோதி இங்கே உன்னைச் சந்திக்க வராததற்கு ஏதோ ஒரு முக்கிய காரணம் இருக்க வேண்டும். அவருக்கு சுகவீனமாகக் கூட இருக்கலாம். நாங்கள் உங்கள் தந்தையிடம் கூறி அவரது அனுமதி பெற்று ஒரு தடவை யாழ்ப்பாணத்துக்குப் போய்விட்டு வருவோம்.

"அது உடனடியாக ஒழுங்கு செய்யக்கூடிய காரியமல்ல. குதிரை வண்டிகள் ஒழுங்கு படுத்த வேண்டும் அவற்றோடு வர குதிரை வீரர்களை ஒழுங்கு செய்ய வேண்டும். நான் போக விரும்பினால் கட்டாயமாக அம்மாவும் அப்பாவும் என்னுடன் வரப்பார்ப்பார்கள்"

"பரவாயில்லை; ஒழுங்கு செய்தபின் போகலாம்"

"நல்ல யோசனை. நீயும் என்னுடன் வருவாயா? கட்டாயமாக"

"அப்பாவிடம் எப்படிப் போய் அனுமதி கேட்பது?"

"அதை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்"

"நீதாண்டி ஆகுயிர்த் தோழி"

சந்திரவல்லி அனுரதியைக் கட்டித் தழுவிக்கொண்டாள்.

"அம்மா எழுந்துவிட்டாரா?"

"அவர் அதிகாலையிலேயே எழுந்து கோயிலுக்குப் போய்விட்டார்."

"சரி அனு; கீழே சாப்பாட்டு அறையில் எனக்காகக் காத்திரு. நான் குளித்து உடுப்பு மாற்றிக் கொண்டு கீழே வருகிறேன்"

சில வினாடிகள் சென்றிருக்கும்.

"இதென்ன விளையாட்டு அனு. எதற்காக என் கண்களைப் பின்னாலிருந்து பொத்துகிறாய். நான்தான் குளித்துவிட்டுக் கீழே வருகிறேன். என்றேனே" என்றாள் சந்திரவல்லி.

அனுரதியிடமிருந்து பதிலேதும் வராமற்போகவே கண்களைப் பொத்திய கரங்களைக் கரிசனையுடன் தடவிய சந்திரவல்லிக்கு, வலது கண்ணை மூடிய கரத்தின் நடுவிரலில் அணிந்திருந்த முத்திரை மோதிரம் தட்டுப்பட்டது.

"அடே ஜோதியா! வந்திட்டீங்களா?"

கண்களைப் பொத்திய கைகளை விலக்கிவிட்டு அவள் திரும்பிய போது அங்கே சிரித்த வண்ணம் ஜோதிநாதன் நின்று கொண்டிருந்தான்.

"இரண்டு மாதமாக என்னை ஏங்க வைத்துவிட்டீர்களே! ஏன் இப்படி என்னை வதைக்கிறீர்கள்? என்னிடம் உங்களுக்குக் கரிசனை ஏதுமில்லையா?" எனக் கோபமாகக் கேட்டாள்.

தனது தந்தை பூதத்தம்பியின் மேல் நடைபெற்ற கொலைமுயற்சி பற்றியும், அதன் காரணமாக தாயார் அழகவல்லி மிக அங்கலாய்ப்புடன் இருப்பதையும், அவரை அமைதிப்படுத்தி ஆறுதல் கொடுப்பதற்காகவுமே தான்



வீட்டில் தங்கியிருந்ததை விபரமாக எடுத்துச் சொன்னதன் பின்னரே சந்திரவல்லியின் கோபமும் ஆதங்கமும் அடங்கி அவள் அமைதியடைந்தாள்.

"நீ கோபிக்கும் போது மிக அழகாயிருக்கிறாய் சந்திரா."

"இன்றைக்கு என்ன திடீர் அழகு வந்துவிட்டது. எனக்கு? நீங்கள் ஏற்கனவே பார்த்து ரசித்து காதல் கொண்ட அழகு தானே?"

"ஒரு முறை பார்த்து அலுத்துப்போய் விடுவதல்ல அழகு சந்திரா. நாளுக்கு நாள், வினாடிக்கு வினாடி, கணத்திற்குக் கணம் புதுப்புதுத் தோற்றங்களை புதுப்புதுக் கற்பனைகளை - தருவதுதான் அழகு"

"இப்போது புதுப்புதுக் கற்பனைகள் தோன்றுகிறதாக்கும் உங்களுக்கு!"

மதிய உணவு உட்கொண்ட வேளையில் ஜோதிநாதனிடமிருந்து யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சம்பவங்கள் அனைத்தையும் கேட்டுத் தெரிந்த குமாரவன்னியன் கூறினார்.

"ஜோதி, உனது தந்தையார் பூதத்தம்பி மேல் கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கும் இந்த வேளையில் நீ இங்கே வந்திருக்கக் கூடாது. வீட்டில் உனது தாயாருக்கு நீ துணையாக இருந்திருக்க வேண்டும்.

இங்கே சந்திராவுக்கு ஒரு குறையுமில்லை. அவளை நாங்கள் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுவோம். அவளை ஒருத்தரும் கொத்திக்கொண்டு போய்விடமாட்டார்கள். அவள் உனக்குத்தான் என்பது என்றைக்கோ முடிவு செய்தாயிற்று."

"இன்று மட்டும்தான் மாமா நான் இங்கே இருப்பேன். நாளை அதிகாலை நான் திரும்பிப்போக இருக்கிறேன்."

"இம்மாதிரியான நேரங்களில் தனியாகப் பயணம் செய்ய வேண்டாம். உன்னோடு துணைக்கு வர எனது நண்பன் காங்கேயனை அனுப்பிவைக்கிறேன். மிகவும் விசுவாசமானவன். போரிலே தூரப்புலி, ஆபத்து நேரத்தில் உயிரையே கொடுப்பான்" என்றார் குமாரவன்னியன்.

பொன்னந்தி மாலைப் பொழுது.

அந்திச் சூரியன் அத்திப் பழமாகச் சிவந்து அடிவான் திரையில் சரிந்து கொண்டிருந்தான். அதன் கோமளவண்ண ஒளிப்புனலில் முக்குளித்த மேகக் கூட்டங்கள் வானப் பெருந்திரையில் கோடானுகோடி வர்ணக் காட்சிகளைக் கடை பரப்ப ஆரம்பித்திருந்தன.

இடுப்புவரை கதிர் முட்டக் கருகருவென வளர்ந்திருந்த நெற்பயிர்கள் கண்ணுக்கெட்டிய தூரம் வரை கரும்பச்சைப்பாயை விரித்தாற்போல் காட்சியளித்த வயல்களை ஊடுருவிச் சென்ற அகன்ற வரப்பின் மீது ஜோதிநாதன் தன் காதலி- பனங்காம இளவரசி சந்திரவல்லியோடு சாவகாசமாக நடந்து கொண்டிருந்தான். வயல்களும், வரப்புக்களும், வாய்க்கால்களும் முடிவுக்கு வந்த போது அவர்களின் எதிரே பாலியாறு நுப்பும் நுரையுமாக ஓடிக்கொண்டிருந்தது.

வன்னிப் பெருநிலப் பரப்பில் ஒமந்தையின் பாலமோட்டைப் பகுதியில் ஊற்றெடுக்கின்ற பாலியாறு பனங்காமம் ஊடாக மேற்கு நோக்கிப் பாய்ந்து வெள்ளாங்குளம் என்னுமிடத்தில் மன்னார்க் கடலுடன் சங்கமமாகிறது. பாலி என்றால் வெண்மை என்றும் பொருள்படும். இதன் காரணமாகவே இந்த ஆறு 'பாலியாறு' எனப் பெயர் கொண்டதாயும், இது கடலுடன் சங்கமமாகும் இடம் வெள்ளாங்குளம் எனப் பெயர் பெற்றதாயும் கற்றோர் சிலர் கருதுவர். மாரி காலத்தில்- வருடத்தில் ஆறு மாதங்கள் துப்பும் நுரையுமாகப் பெருகியோடும் பாலியாறு, கோடைகாலத்தில் நீர்வற்றி சிற்றோடையாக ஓடும். கிறிஸ்தாப்த காலத்திற்கு முன்னே நீர்ப்பாசன வசதிக்காக இப்பாலியாற்றின் குறுக்கே அணைகட்டி 'பாலிக்குளம்' என்ற பெயரால் ஒரு நீர்த்தேக்கத்தை ஏற்படுத்தியிருந்தார்கள். (இன்று அந்தக் குளம் 'வவுனிக்குளம்' என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.)

வயல் வெளிகளுக்கு அப்பால் ஆற்றோரமாக கிழக்குத் திசையில், அரைக்காத தூரத்தில், ஆற்றிலிருந்து பிரியும் பாலிக்குளம் காணப்பட்டது. மேற்குத் திசையில் பாலியாறு அடர்ந்து வளர்ந்திருந்த காட்டு மரங்களினூடே ஓடிச் சென்றது. ஆற்றின் இடது பக்கக் கரையோரமாக அந்தக் காட்டுப் பாதையில் ஓர் ஒற்றையடிப் பாதை சென்றது. அந்த ஒற்றையடிப் பாதையில் ஜோதிநாதனின் கையைப் பற்றிய வண்ணம் அவனை அழைத்துச் சென்றாள் சந்திரவல்லி.

"இது மனித நடமாட்டமில்லாத காட்டுப்பாதை போல் தோன்றுகிறது. இந்த வழியாக எங்கே என்னை அழைத்துப் போகிறாய்? இதற்கு முன்னர் இந்தப் பாதை வழியே வந்த ஞாபகம் இல்லையே" என்றான் ஜோதிநாதன்.



"போகிற இடத்தை வந்து பார்த்தால் தானே உங்களுக்குப் புரியும்" என்றான் அவள்.

சிறிது தூரம் சென்றதும் அந்த ஒற்றையடிப் பாதையின் அருகே ஒரு பெரிய யானை படுத்திருந்தாற் போன்ற அமைப்பில் ஒரு கற்பாறை காணப்பட்டது. அதன் மேலே உச்சிக்கு ஏறுவதற்காகப் படிகள் வெட்டப்பட்டிருந்தன.

"இதன் மேலே ஏறிப்பாருங்கள்; வெகு தொலைவில் இருக்கும் இடங்களெல்லாம் துல்லியமாகத் தெரியும்"

'ஆனைக்குன்று' என்ற பெயர் கொண்ட அப்பாறையில் ஏறிப்பார்த்த ஜோதிநாதன்-

"சுற்றவர ஒரே காடாகத்தான் இருக்கிறது. சற்று தொலைவில் மரத்தால் அமைக்கப்பட்ட ஒரு கொட்டில் தெரிகிறது" என்றான்.

"அந்த மரக் கொட்டிலுக்குத்தான் நாம் போகிறோம்"

"அங்கே எதற்காகப் போகிறோம்"

"தனிமையில், அந்தரங்கமாகப் பேசுவதற்குத்தான்."

"தனிமையில் பேசுவதற்கு மரக்கொட்டில் எதற்கு? மாளிகையிலிருந்தே பேசியிருக்கலாமே!"

"மாளிகையில் நாம் என்ன செய்கிறோம்? என்ன பேசுகிறோம்? என்பதையெல்லாம் கழுகு மாதிரிக் கவனித்துக் கொண்டிருப்பார்கள். இங்கே எவரும் இருக்கமாட்டார்கள். நாங்கள் தனிமையில் அந்தரங்கமாக விரும்பியதைப் பேசலாம்; விரும்பியதைச் செய்யலாம்"

சிறிது நேரத்திற்கெல்லாம் காட்டின் நடுவே அந்த ஆற்றங்கரையில் அமைந்திருந்த அந்த மரக்குடிசையை அவர்கள் அடைந்தார்கள். நாற்புறமும் மரக்குத்திகளால் சுவர் அமைத்து, மரக்குத்திகளால் கூரை அமைத்து, இடையில் காணப்படும் நீக்கல்களை சுண்ணாம்பும் களிமண்ணும் கலந்த கலவை கொண்டடைத்த அந்த மரக் கொட்டிலின் கதவைத் திறந்த போது - பல மாதங்களாகப் பாவனையின்றி தூசி படிந்த அக் கொட்டிலின் நடுவே ஒரு மரக்கட்டிலும், தட்டு முட்டுச் சாமான்களும், ஒரு மூலையில் அடுப்பும் காணப்பட்டன.

"இந்தக் கொட்டிலை யார்தான் உபயோகிப்பார்கள்?"

இது காட்டில் மான், மரை வேட்டையாட வருவோர் தங்குவதற்காகக் கட்டப்பட்ட கொட்டில். இம்மிருங்களை நள்ளிரவில், நடு நிசியின் பின்பே வேட்டையாடுவார்கள். இரவில் வழிகண்டு பிடித்து வீடு திரும்ப இயலாமையால் இந்தக் கொட்டிலில் இரவு தங்கிவிட்டு விடிந்தபின் வேட்டையாடிய மிருகத்தோடு வீடுதிரும்புவார்கள்"

"இங்கே நாம் யாரை வேட்டையாடப் போகிறோம்?"

"உங்களைத்தான் வேட்டையாடப் போகிறேன்"

"என்னையா?"

"இன்று காலையில் உங்களுக்குப் புதுப்புதுக் கற்பனைகள் தோன்றுவதாகக் கூறியிருந்தீர்களே- ஞாபகமிருக்கிறதா?

உங்களுக்கு மட்டும்தானா புதுப்புதுக் கற்பனைகள் தோன்றும்?

இன்று மாலை எனக்கும் புதுப்புதுக் கற்பனைகள் தோன்ற ஆரம்பித்திருக்கிறது. அதற்கு ஒரு வடிகால் வேண்டித்தான் உங்களை இங்கே அழைத்து வந்திருக்கிறேன்" என்றாள் அவள்.

அந்த நேரம் வீரனான ஜோதிநாதன் முகத்தில் ஒரு வகையான தயக்கம் தோன்றியது. அவள் மனம் முற்றாக தன்மீது லயித்திருப்பதை அவனால் உணர முடிந்தது. அந்தக் காட்டுக் கொட்டகையிலிருந்த தனிமை கிடைத்தற்கரிய ஒருவாய்ப்பை அளித்திருந்த போதிலும் விவரிக்க இயலாத ஒரு கவலை அவனை ஆட்கொண்டது. அக்கவலைக்கான காரணம் அவனது கல்வியும், நீண்ட பாரம்பரியம் கொண்ட தனது சமுதாயம் வளர்த்த பண்பாடும் தாம் என்பதை அவன் உள்ளம் எடுத்துரைத்தது.

அவனுடைய இந்த நினைப்பை அக்கட்டிலின் மேல் மல்லாந்து கிடந்த அந்த எழில் மங்கையின் ஏக்கமும், தாபமும், எழுச்சிகளும் வினாடிக்கு வினாடி சுக்கு நூறாக உடைக்க முயன்று கொண்டிருந்தன. அவன் கண்முன்னே வருந்தி அழைக்கும் அவளது யௌவனமும், துடிக்கும் உதடுகளும், நாணப் பார்வை பார்க்கும் அவளது கண்களும்-அவனது உணர்ச்சிகளைத் தூண்டி எழுப்பிக் கொண்டிருந்த அந்த வேளையில் - அக்கட்டிலில் சாய்ந்திருந்த சந்திரவல்லி அவனைத் தன்னோடு இழுத்து அரவணைத்த போது அவனால் தன்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

'சந்திரா' என்று அழைத்த ஜோதிநாதனுக்கு உடலெல்லாம் மயிர்க்கால்கள் குத்திட்டு நின்று புல்லரித்தது. அவளது வதனத்தை மெதுவாகத் திருப்பி, தனது இரு கரங்களாலும் அந்த மதிமுகத்தை ஏந்தி அதன் பசுமையைப் பருகிக்கொண்டேயிருந்தான். சந்திரவல்லி வஞ்சிக்கொடிபோலத் துவண்டு கொண்டே மெல்லக் கண்ணிமைகளைத் திறந்து அவனை ஏக்கத்தோடு பார்த்தாள். ஆசையால் கிறங்கிய ஆடவனது போதை விழிகள் பெண்மையின் நாணச் சிரிப்பில் மயங்கிக் கிடந்தன.

போதையேறிய அவனது வாள் விழிகளும், கூர்மையான அவளது வேல் விழிகளும் சந்தித்த போது, அவ்விழிகள் ஒன்றை யொன்று கல்வி, உண்ணவும் நிலை பெறாது உணர்வும் ஒன்றிட நிலை தடுமாறி நின்றன.

அந்த வாலிபனின் முகத்திலும், சிவந்த உதடுகளிலும் பொங்கிப் பெருகும் உணர்ச்சிகளைக் கண்டதும் அவளுக்கு உடலெல்லாம் அனலாக எரிந்தது. அவனது சுவாசத்தில் வெளிவரும் உஷ்ணமான மூச்சுக்கள் அவளது கன்னக் கதுப்புக்களில் மோதி அவள் பேச்சு மூச்சற்று, சிந்தையும் செயலும் மரத்துப்போக, சித்திரப் பதுமை போலச் செயலற்றுக் கிடந்தாள்.

அவனால் தன்னைக் கட்டுப்படுத்த முடியாத அந்த ஒரு கணத்தில்- அவளை அணைத்து அவனது அத்திப்பழ உதடுகளில் - உணர்வுகளை வேரோடு பறிப்பது போல முத்தமிட்டான்.

ஆனால், அடுத்த கணம்-

அவளது உள்ளத்து உணர்வுகளை வேரோடு களைந்துவிட்ட அம்முத்த மயக்கத்தில் அவள் கிறங்கிக் கிடந்தபோது அவன் தன்னைச் சுதாரித்துக் கொண்டு, அக்கொட்டிலை விட்டு வெளியே வந்து ஆற்றங்கரையை நோக்கி நடந்தான்.

சிறிது நேரம் கழித்து அவனைத் தொடர்ந்து வெளியே வந்த சந்திரவல்லி கேட்டாள்.

"ஏன் ஜோதி, சடுதியாக வெளியே வந்து விட்டீர்கள்; என்னுடன் இணையப் பிடிக்கவில்லையா?

"உன்னை எனக்கு அளவுக்கு அதிகமாகப் பிடித்திருக்கிறது; அதுதான் பிரச்சனை. உனக்கு அருகே இருக்கும் போது எனது ஆசாதாபங்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அதற்கும் மேலே அங்கே இருந்திருந்தால் உன்னைக் கெடுத்து விட்டிருப்பேன். அந்த உண்மை சம்மட்டி அறைவதுபோல உள்ளத்தில் உறைய வெளியே வந்து விட்டேன்"

"இதில் என்ன கட்டுப்பாடு வேண்டியிருக்கிறது? நாம் தாம் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறோமே?"

"இதுதான் எங்கள் நாட்டுப் பண்பாடு; சம்பிரதாயம், போர்த்துக்கீசரும், டச்சுக்காரகும் வேண்டுமானால் தமது இஷ்டப்படி நடந்து கொள்ளட்டும். நாம் எமது பண்பாடு, பாரம்பரியம், வாழ்க்கைப் பெறுமானங்களைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். கல்யாணம் செய்து கொள்ளும் வரையும் வரம்பு மீறாமல் இருக்க வேண்டியது தான், நாங்கள் அவசரப்பட்டு தாத்தாவுக்கு விஷயம் தெரிய வந்தால் திமிலத்தேவன் போல நானும் எனது கண்களை இழக்க வேண்டி வரலாம்"

"ஓ! அந்தச் சம்பவத்தை ஏன் இப்போது ஞாபகம் படுத்துகிறீர்கள்?" என்றாள் அவள்.

தொடரும்...

பிருந்தா சீனிவாசன்

காதலின் பெயரால் பெண்கள் மீது நிகழ்த்தப்படும் குற்றங்களில் திரைப்படங்களுக்கு முக்கிய பங்கு!

காதலின் பெயரால் பெண்கள் மீது நிகழ்த்தப்படும் வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. சமூகத்தில் அரங்கேறும் படுகொலைகள் அதை உறுதிச்செய்கின்றன. சென்னை நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்தில் படுகொலை செய்யப்பட்ட சுவாதியும், தன்னைத்தானே கொலை செய்து கொண்ட சேலம் வினுப்ரியாவும், பலர் பார்க்க நடுரோட்டில் வெட்டிச் சாய்க்கப்பட்ட தெலுங்கானாவைச் சேர்ந்த சந்தியாவும் சமீப்திய உதாரணங்கள். இது போன்ற குற்றங்கள் நிகழ ஆயிரம் காரணங்கள் இருந்தாலும், திரைப்படங்களுக்கும் இதில் முக்கியப் பங்கு இருக்கிறது.

எப்போதும் கதாநாயக பிம்பங்களோடு தங்களைப் பொருத்திப் பார்க்கும் மனிதர்களால் நிறைந்தது நம் சமூகம். நூறாண்டு வரலாறு கொண்ட தமிழ்த் திரைப்படங்கள் பெண்களை எப்படிச் சித்தரிக்கின்றன? தன்னைக் காதலித்த ஒரு பெண், வேறொருவரை மணந்த பிறகும், 'தாயவளே நீ வாழ்க' என்று வாழ்த்திய திரைப்படங்களுக்கு மத்தியில்தான், 'பொண்ணா பொறந்தா ஆம்பளைகிட்டே கழுத்தை நீட்டிக்கணும், அவன் ஒண்ணு, ரெண்டு, மூணு மூடிச்சு போட்டா மாட்டிக்கணும்' என்ற குரலும் ஒலிக்கத் தொடங்கியது.

ஆணும் பெண்ணும் எதில் சமம்?

பெரும்பாலான பெண் பாத்திரங்களுக்குச் சொற்பமான பங்களிப்பு மட்டும்தான். அம்மாவாக இருந்தால் சமையலறையே கதி. கதாநாயகியாக இருந்தால் கதாநாயகனின் ஒற்றைப் பார்வையிலோ சொல்லிலோ மயங்கி, பனிபடர்ந்த சிகரங்களில் அரைகுறை ஆடையுடன் ஆடிப்பாட வேண்டும். அக்கா, தங்கைகளாக இருந்தால் அயோக்கியனுக்கு வாழ்க்கைப்பட்டுக் கண்ணீர் சிந்த வேண்டும்.

திரையில் பெண்களை அவமானப்படுத்தும் போக்கு நீண்ட காலமாகத் தொடர்வது. ஒரு படத்தில் அம்மாவைத் தெய்வமாக வணங்கும் நடிகர் இன்னொரு படத்தில் 'பொண்ணுன்னா பொறுமையாக இருக்கணும். இப்படி பஜாரித்தனம் பண்ணக் கூடாது' என்று பாடம் நடத்துவார். தன்னுடன் நடனப் போட்டிக்கு வந்திருக்கும் நடிகையின் முன்னால் சட்டையைக் கழற்றி எறிந்துவிட்டு, 'உன்னால் இப்படி ஆட முடியுமா?' என்று கேட்டு, அந்தப் பெண்ணைச் சபை நடுவே கூனிகுறுகச் செய்வார். 'தலைவர் பின்னிட்டார்ப' என்று கைதட்டும் ரசிகர்களில் சிலராவது தங்களுக்குத் தெரிந்த பெண்ணிடம் இதே உத்தியைக் கையாள மாட்டார்கள் என்பதற்கு உத்தரவாதம் உண்டா?

'நான் ஆம்பிளை, வேர்க்குதேன்னு எல்லா டிரெஸ்ஸையும் கழட்டிப் போட்டுட்டு நடப்பேன். உன்னால் அப்படி நடக்க முடியுமா?' என்று கதாநாயகியைப் பார்த்துக் கேட்பதுதான் ஆண்மை என்பதைத்தான் பெரும்பாலான படங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றன. அதனால் தான் குளியலறையில் தன்னைப் பார்த்துவிடுகிற கதாநாயகனிடம் நீ என்னை முழுசா பார்த்துட்டியா, அப்படின்னா நீதான் என் புருஷன் என்று கதாநாயகியால் சொல்ல முடிகிறது. பெண்ணின் உடல் சார்ந்தே எடுக்கப்படும் இதுபோன்ற காட்சிகள் பெண் என்றால் உடல் மட்டும்தான் என்பதை வலியுறுத்துகின்றன.

வீட்ல போட்டுக்கற பனியனையும் டிரவுசரையும் வெளியில் போட்டுக்கிட்டு வந்தா ஒரு பையனுக்கு ஆசை வரத்தான் செய்யும்' என்று பெண்ணின் உடையணியும்

விதத்தைக் கேலி பேசுகிறான் கதாநாயகன். உடனே அவளும் நாணமுற்று, புடவையைக் கட்டிக்கொண்டு வெட்கத்துடன் தலை குனிவாள். இதுபோன்ற வசனங்களைக் கேட்டுவளர்கிற இளைஞர்கள், தாங்கள் செய்கிற தவறுகளுக்கும் பெண்களின் உடையணியும் பாங்கைத்தானே காரணமாகக் காட்டுவார்கள்?

தொட்டவுடன் மலர்ந்துவிடுமா காதல்?

கதாநாயகன் தன் காதலைச் சொன்ன அடுத்த கணமே கதாநாயகி அவனுடைய காதலை ஏற்றுக் கொள்ள வேண்டும். முடியாது. இல்லை என்ற பேச்சுக்கே அங்கே இடமில்லை. அப்படி ஏற்கவில்லை என்றால் துரத்தித் துரத்தியே உயிரை வாங்குவார்கள். கையைத் தொடுவதால், கண்ணில் விழுந்த தூசியை ஊதுவதால், தடுக்கி விழுந்தால் தாங்குவதால் எல்லாம் ஒரு பெண்ணுக்குக் காதல் வந்து விடாது. நம் செயல்கள் அனைத்துக்கும் இவன் பக்கபலமாக இருப்பான் என்ற நம்பிக்கையே ஒரு ஆண் மேல் பெண்ணுக்குக் காதலை ஏற்படுத்தும் என்ற புரிதல் இல்லாமல் சித்தரிக்கப்படுகிறது திரைக் காதல்.

வேலை வெட்டி இல்லாமல் சுற்றிக் கொண்டிருக்கும் கதாநாயகனை ஏன் ஒரு பெண் காதலிக்க வேண்டும்? உதவாக்கரையைக் கூடக் கரை சேர்க்கும் வல்லமை பெண்களுக்கு உண்டுதான். ஆனால், அந்த உதவாக்கரைகூட அவளுடைய தேர்வாக இருக்க வேண்டுமே தவிர துரத்தித் துரத்திக் கொல்லக் கூடாது பல படங்கள் இப்படியான கதைப்போக்கில் அமைகின்றன.

பகிரங்கப் பாட்டு

கதாநாயகனை வேண்டாம் என மறுத்துவிட்டு தனக்குப் பிடித்த வாழ்க்கையை வாழ்கிற பெண்ணைப் பற்றி ஏதாவது படம் வந்திருக்கிறதா? அப்படியே புறக்கணித்தாலும் வக்கிர புத்தி கொண்ட ஒருவனுக்கு மனைவியாகி அவள் சீரழிந்து போவதாகத்தான் படம் நகரும்.

'குத்துங்க எசமான் குத்துங்க. இந்தப் பொண்ணுங்களே இப்படித்தான்' என்ற வசனம் இளைஞர்களிடத்தில் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் என்ன? ஒரு பெண் காதலை மறுத்துவிட்டால், 'வெட்றா அவளை, அடிடா அவளை' என்று பகிரங்கமாகப் பாடுவதன் மூலம், காதலை ஏற்றுக் கொள்ளாத பெண்ணைக் கொலை செய்வதில் எந்தத் தவறும் இல்லை என்பது உணர்த்தப்படுகிறது. நாங்க எல்லாம் முடிவு பண்ணிட்டா உலக அழகியையே ஒரே வாரத்தில் மடக்கிடுவோம் என்று உபநடிகர்கள் கூடத் தங்கள் பங்குக்கு இளைஞர்களைத் தூண்டுவிடுகிறார்கள். செம கட்டை, ஃபிகரு, மேட்டரு போன்ற வார்த்தைகளால் கேவலப்படுத்துவது போதாதென்று கரெக்ட் பண்ணிடுவேன், ஈஸியா மடிஞ்சிரும் என்பது போன்ற வார்த்தைகளின் மூலம் பெண்களின் தேர்வு என்பது சிறுமைப்படுத்தப்படுகிறது. 'இளைஞர்களுக்கான படம்' என்று சொல்லப்படும் படங்கள், இளைஞர்களின் மன வக்கிரங்களைக் காட்சிப் படுத்துவதாகத்தான் அமைந்திருக்கின்றன.

காதலின் பெயரால்....

ஒரு ஆணின் துயரங்களுக்கெல்லாம் பெண்ணே காரணம் என்ற செய்தியும் பெரும்பாலான படங்களில் முன்வைக்கப்படுகிறது. ஒருவன் குடித்தால், இரண்டாவது திருமணம் செய்து கொண்டால், குடும்பம் உடைந்தால் என்று அனைத்துக்கும் பெண்ணே காரணமாம். யார் வேண்டுமானாலும் ஒரு பெண்ணை பகிரங்கமாக அவமானப்படுத்தலாம். நடத்தையைக் கேள்விக்குள்ளாக்கலாம். காதலிக்க மறுத்தால் கொலையும் செய்யலாம். இதுதான் நம் திரைப்படங்கள் உணர்த்தும் செய்தி.

காதலின் பெயரால் பெண்கள் மீது நிகழ்த்தப்படும் வன்முறைகளைப் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கும் இந்த வேளையில் 'என்னைத் தவிர வேற யாரு உன்னைத் தொட்டுடறான்னு பார்க்கிறேன்' என்ற தூரத்தோடு தோள் பையில் அரிவாளுடன் யாரேனும் நடந்து சென்று கொண்டிருக்கலாம். அவர் மனதில் பெண்ணைத் துரத்தும், மறுத்தால் அவளை 'வெட்டுடா' என்று சொல்லும் நம் கதாநாயகனின் பிம்பம் அழுத்தமாக உட்கார்ந்திருக்கலாம். நாட்டில் நடக்கும் பெண் சீண்டல்களுக்கும், பாலியல் வன்முறைகளுக்கும், பெண்ணுக்கு எதிரான குற்றங்களுக்கும் இந்த பிம்பத்துக்கும் தொடர்பு இல்லை என்று சொல்லிவிட முடியுமா? இந்தப் பிம்பத்தைக் கட்டமைக்கும் படைப்பாளிகளும் கலைஞர்களும் இதை உணர்வார்களா? மக்கள் மனங்களில் மாற்றத்தை ஏற்படுத்தும் வல்லமை கொண்ட திரைப்படம் என்னும் அற்புதமான கலைக்குப் பின்னால் இருக்க வேண்டிய பொறுப்பைத் திரைப் படைப்பாளிகள் புரிந்து கொண்டு செயல்படுவார்களா?

ஹீரோயின் சப்ஜெக்ட்

சில படங்களை 'ஹீரோயின் சப்ஜெக்ட்' என்பார்கள். இந்த முத்திரையே ஆணாதிக்கத்தை உணர்த்துகிறது. ஆண்கள் நிறைந்திருக்கிற, ஆண்கள் மட்டுமே அனைத்தையும் தீர்மானிக்கிற ஒரு துறையாக திரைப்படத் துறை இருக்கிறது. காலங்காலமாக ஆண்களை மையப்படுத்தி மட்டுமே படங்கள் வெளிவருகிற ஒரு துறையில் பெண்களை மையப்படுத்தி மிக அரிதாகவே படங்கள் வெளியாகின்றன என்பதையே இந்த முத்திரை காட்டுகிறது. இப்படிப்பட்ட படங்களிலும் பெண்களைப் புனிதப்படுத்துகிறோம் என்று சொல்லிக் கொண்டு ஆவணப்படம் போல எதையாவது எடுத்து வைப்பார்கள். உப்புச் சப்பற்ற அந்தப் படம் விரைவில் திரையரங்கிலிருந்து வெளியேறும்.

நம் இயக்குநர்கள் பலரும் கல்வி, வேலை, நிர்வாகம், சாதனை, ஆளுமை இவை எதுவுமே பெண் முன்னேற்றம் இல்லை என்றே கருதுவதாகத் தெரிகிறது. சுதந்திரமான பாலியல் தேர்வு கொண்டவளாகப் பெண்ணைச் சித்தரிப்பதுதான் முற்போக்கு என்றே பெரும்பாலும் புரிந்துகொள்ளப்படுகிறது.

ஏன் பெண்களுக்கென்று தனியாகப் படம் எடுக்க வேண்டும்? எடுக்கிற படங்களிலேயே ஆணுக்கு நிகராகப் பெண் கதாபாத்திரங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்தால் என்ன? சமையலறை, டூயட், படுக்கையறைக் காட்சிகளோடு மட்டும் பெண்களை முடக்காமல் அவர்களின் ஆளுமையைப் பற்றிச் சொல்லலாமே. ஹாலிவுட்டை முன்னுதாரணமாகக் கொண்டிருக்கிற இயக்குநர்கள் பலருடைய கண்களுக்கும் அங்கே பெண்களை மையமாக வைத்தே பல படங்கள் வெளிவருவது தெரியாதா?

லேடி சூப்பர் ஸ்டார் நயனுக்கு 'ஹப்பி பேர்த்டே'

நயன்தாரா அளவுக்கு உயரத்துக்குப் போன நடிகையோ, சம்பளம் வாங்கின நடிகையோ இல்லை. அதேபோல மீடியாக்களுக்கு தீனி போட்டவர்களும் இல்லை! அவரது ஒவ்வொரு காதல் பிரிவுகளும் அவருக்குப் பக்குவத்தைத் தந்தது. தமிழ் குடும்பங்களிடம் அய்யோ பாவம் இந்தப் பொண்ணு என்று பேச வைத்தது. இதுவரை அரசியல்வாதிகளுக்கு மட்டும்தான் இது போன்று 'நெகட்டிவ்' நியூஸ் அனுதாபமாவது நடக்கும். நயன் விஷயத்தில் அப்படி நடந்தது ஆச்சரியம்தான்!

நயனைச் சந்தித்த இயக்குனர் பாண்டியராஜ் 'பாலிவுட்டில் பிரிந்த காதலர்கள் சினிமாவில் இணைந்து நடிக்கும் போது நீங்கள் நடித்தால் என்ன?' என்று கேட்டிருக்கிறார். நயனும் துணிந்து ஒப்புக் கொண்டார். அதுதான் நயன். தன் மனதுக்கு எதுசரி என்றுபடுகிறதோ, அதைச் செய்ய ஒரு நொடி கூடத் தாமதிக்கமாட்டார்.

ரஜினியுடன் படம் 'புக்'கான போது, நயன் இருந்த வீடு எத்தனை சிறியது? ஆனால், இன்று நயனின் சம்பளம் 3கோடி. இன்றைய தமிழ் சினிமாவின் டாப் ஹீரோக்கள் யாராக இருந்தாலும் அவருடன் அட்லீஸ்ட் ஒரு படமாவது நடித்திருப்பார் நயன்தாரா. நயன் நடிக்க வந்து 13 வருடங்களாகிவிட்டன. சிவகார்த்திகேயன், விஜய்சேதுபதி ஆகியோரும் விருப்பப்பட்டபடி நயனுடன் நடித்துவிட்டனர்.

தமிழகத்தில் தனக்கென ஒரு பெரிய ரசிகவட்டத்தையே நயன் வைத்திருக்கிறார்.

32 வயதைத் தொடப்போகும் 'லேடி சூப்பர் ஸ்டார்' நயனுக்கு ஹப்பி பேர்த்டே!

'தனுஷ் ஒரு பச்சோந்தி சிம்பு ஒரு சோம்பேறி'

நடிப்பு என்று வந்துவிட்டால் தனுஷ் ஒரு பச்சோந்தி, சிம்பு ஒரு சோம்பேறி என்று இயக்குனர் கவுதம் மேனன் தெரிவித்துள்ளார். சிம்புவை வைத்து இயக்கிய 'அச்சம் என்பது மடமையடா' ஹிட்டாகியுள்ள மகிழ்ச்சியில் இருக்கிறார் அவர். "மாஸ்" படத்தை அனைவரும் எதிர்பார்த்தனர். அதை தன்னால் 'அச்சம் என்பது மடமையடா' மூலம் கொடுக்க முடிந்தது. முதல் பாதி கவுதம்மேனன் படமாகவும், இரண்டாம் பாதி கமர்ஷியலாகவும் இருந்தது" என்று அவர் கூறி சந்தோஷப்பட்டார்.

"தனுஷ் ஒரு பச்சோந்தி" என்று கூறுவதற்கு விளக்கமும் கூறினார் கவுதம். "தனுஷ் கதாபாத்திரத்துக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்வார். சிம்புவும்

அப்படித்தான். ஆனால் அவருக்கு கவனச்சிதறல் உள்ளது" என்றார்.

"சூப்பர் ஸ்டார் ஆகும் அனைத்து குணங்களும் சிம்புவுக்கு உள்ளது. ஆனால், கூடவே சோம்பேறித்தனமும் உள்ளது. சிறு வயதிலிருந்தே செய்ததையே திரும்பத்திரும்ப செய்வதில் அவருக்கு போர் அடித்துவிட்டது. அவரது நடிப்புத் திறமைக்கு ஏற்ப தீனி தேவை" என்று கூறினார் கவுதம்.

ஜி.வி.பிரகாஷ் நடிக்கும் முதல் இசைப்படம்

இசையமைப்பாளராக இருந்து ஹீரோவானவர்களில் தற்போது வெற்றியடைந்தவர் ஜி.வி.பிரகாஷ்குமார்தான்! இசையமைப்பாளராக இருந்த இவருக்கு நடிக்கும் ஆசைகாட்டியதோடு, அவரை வைத்து சொந்தப்படம் தயாரிப்பதாகவும் வாக்குக் கொடுத்தார் ஏ.ஆர்.முருகதாஸ்.

பின்னர் என்ன காரணத்தினாலோ அந்தப் படத்தை ஆரம்பிக்கும் எண்ணத்தைக் கைவிட்டார். அதனால் வெறுத்துப்போன ஜி.வி.பிரகாஷ்குமார் தன்னை ஏ.ஆர்.முருகதாஸ் அவமானப்படுத்திவிட்டதாக எண்ணி புலம்பியதோடு, ஹீரோவாக நடித்தே தீருவதென்று 'பென்சில்' படத்தில் நடித்தார். பின்னர் 'டார்லிங்' படம் நடித்ததைத் தொடர்ந்து இப்போது 'பிசி' யான ஹீரோவாகிவிட்டார். தற்போது ஒரு 'டன்' படங்களில் நடிக்க காத்திருக்கிறார். பிரபல இயக்குநர் ராஜிவ் மேனன் இயக்கும் படத்தில் நாயகனாக நடிக்க இருக்கிறார். இசை சப்ஜெக்டாக இப்படம் உருவாகிறது. மொத்தம் ஒன்பது பாடல்கள். 'சர்வம் தாள மயம்' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. ஏ.ஆர்.ரஹ்மான் இசை அமைக்கிறார்.

குருவின் மகனுக்கு வாய்ப்பு தந்த பார்த்திபன்!

'கதை, திரைக்கதை, வசனம், இயக்கம்' படத்திற்குப் பிறகு பார்த்திபன் இயக்கிவரும் படம் 'கோடிட்ட இடங்களை நிரப்புக!' இந்தப் படத்தில் நாயகனாக பார்த்திபனின் குருவான பாக்கியராஜின் மகன் சாந்தனு நடிக்கிறார். பார்த்திபன் முக்கிய பாத்திரத்தில் நடிக்கிறார். மற்றும் தம்பி ராமையா, சிங்கம் புலி இவர்களுடன் சிறப்புத் தோற்றத்தில் சிம்ரன், அருண்விஜய் நடிக்கிறார்கள். இந்தப்படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து தற்போது இறுதிக் கட்டப் பணிகள் நடந்து வருகின்றன.

பாக்கியராஜின் மகனான சாந்தனு பல படங்களில் நாயகனாக நடித்தாலும் அவருக்கு இன்னும் பெரிய திருப்புமுனையான படங்கள் எதுவும் வரவில்லை. அப்படிப்பட்ட ஒரு சூழலில்தான் சாந்தனுவுக்கு தன் படத்தில் நாயகனாக நடிக்கும் வாய்ப்பு வழங்கியிருக்கிறார் பார்த்திபன்.

மதுபோதையில் ஆண்களை திட்டிய நடிகை ஊர்வசி!

நடிகை ஊர்வசி தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் குடித்துவிட்டு ஆண்களைத் தாறுமாறாகத் திட்டித் தீர்த்தாராம்!

தமிழ் மற்றும் மலையாளத்தில் பிரபலமான நடிகையாக விளங்குபவர் ஊர்வசி. இவர் மலையாள தொலைக்காட்சியில் 'ஜீவிதம் சாட்சி' என்ற நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கி வருகிறார்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்வோரிடம், அவர்களது குடும்பத்தில் உள்ள பிரச்சினைகளை கேட்டு அதைத் தீர்ப்பதற்கு ஆலோசனை வழங்குவது ஊர்வசி வழக்கம். சமீபத்தில் இந்த நிகழ்ச்சியில் ஒரு குடும்பம் கலந்து கொண்டது. அந்தக் குடும்பத்தினரை அவர் மிகவும் அசிங்கமாகவும் தரக்குறைவாகவும் பேசியதால் பரபரப்பு ஏற்பட்டது. அந்த நேரம் அவர் மதுபோதையில் உளறியதை நேயர்கள் உட்பட தொலைக்காட்சி ஒளிபரப்பாளர்கள் கவனத்தில் எடுத்துள்ளனர். திருவனந்தபுரத்தை சேர்ந்த ஒருவர் இது தொடர்பாக மனித உரிமை ஆணையத்துக்கு மனு அனுப்பி உள்ளார்.

மகளை ஹீரோயினாக்க கவுதமி தனுஷுடன் பேச்சு



கமல்ஹாசனை விட்டுப் பிரிந்த நடிகை கவுதமி தனது மகளை நடிகையாக்க தனுஷ், சிவகார்த்திகேயன் உள்ளிட்ட ஹீரோக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்.

நடிகை கவுதமி சந்திப்பாட்டியா என்பவரை திருமணம் செய்து ஓராண்டில் பிரிந்துவிட்டார். சந்தீப் கவுதமிக்கு சுப்புலட்சுமி என்ற மகள் உள்ளார். சுப்புலட்சுமிக்கு தாய் வழியில் நடிகையாக ஆசையாக உள்ளதாம். மகளின் ஆசையை நிறைவேற்றி வைக்க முடிவு செய்துள்ளாராம் கவுதமி.

சுப்புலட்சுமியை ஹீரோயனாக்க முன்னணி இயக்குனர்கள், தயாரிப்பாளர்களுடன் கவுதமி பேச்சு நடத்தி வருகிறார். அவரது மகள் நடிப்பு, மற்றும் நடனப் பயிற்சி எடுத்துள்ளார். "நான் முதலில் ஒரு தாய். என் மகளுக்கு நல்ல தாயாக இருக்க விரும்புகிறேன். அதற்கு நான் மிக மன அமைதியுடன் இருக்க வேண்டும்" என கமலைப் பிரிந்தபோது கவுதமி தெரிவித்தார்.

செல்வராகவனுடன் சூர்யா கூட்டணி

சூர்யாவின் 36வது படத்தை இயக்க ஒப்பந்தமாகியுள்ளார் இயக்குனர் செல்வராகவன்.

இயக்குனர் செல்வராகவன் சில ஆண்டுகளுக்கு முன்புவரை தமிழ்சினிமாவின் வெற்றிப்பட இயக்குனராக அறியப்பட்டவர். ஆனால், தொடர்ந்து சில படங்கள், குறிப்பாக 'இரண்டாம் உலகம்' சொதப்பியதால் மிகுந்த நெருக்கடிக்குள்ளானார்.

அவர் இயக்குவதாக இருந்த மூன்று படங்கள் அடுத்தடுத்து நின்றுபோயின. இப்போது 'நெஞ்சம் மறப்பதில்லை' படத்தை இயக்கி வருகிறார்.

இந்நிலையில் சூர்யாவுடன் சேர்ந்துள்ளார். திரைக்கதை சூர்யாவுக்கு பிடித்துவிட்டது. சூர்யாவின் 'தானாகச் சேர்ந்த கூட்டம்' முடிந்த கையோடு புதிய படத்தை செல்வராகவன் தொடங்கிவிடுவார்.

பிறந்தது முதல் 20 வயது வரை

மருத்துவம் எனும் மாயவலை

ஹோமியோபதி டாக்டர்
ஆர்.தியாகராஜன்
பேசுகிறார்

'பிறக்கும் போதும் அழுகின்றாய்
இறக்கும் போதும் அழுகின்றாய்
ஒரு நாளேனும் கவலையில்லாமல் சிரிக்க
மறந்தாய் மானிடனே!....'

இந்த வரிகள் தற்கால மருத்துவ சிகிச்சைக்கு மிகவும் பொருத்தமாக இருக்கின்றது. ஏராளமான சுகப் பிரசவங்கள் வீடுகளிலும், கிராமங்களிலும் நடைபெற்ற காலங்கள் கனவாகிப் போயின. கருவில் உள்ள குழந்தைக்கு மருத்துவ சிகிச்சை கொடுக்கப்படுவதே தற்கால நவீனம் - நிதர்சனமான உண்மை.

எந்தவொரு மிருகத்தையும் மனிதன் உட்பட எந்த விஷயத்துக்கும் பயிற்சிகள் கொடுத்து பழக்கி அடிமைப்படுத்தி விடலாம். நாய்களின் பயிற்சியாளர் (DOG TRAINER) தொடர் பயிற்சியின் மூலம் அதனுடைய மோப்ப சக்தியைப் பயன்படுத்தி (SNIFFER DOGS) போதைப் பொருட்களையும் வெடிகுண்டுகளையும், கண்டுபிடிக்கும் திறமை மிகுந்தவைகளாக உருவாக்கி, பழக்கப்படுத்தி, அடிமைப்படுத்தி பாதுகாப்புப் படையினர் பயன்படுத்தி வருவது நாம் அனைவரும் அறிந்ததே. இதுபோலவே பெற்றோர்களும் பிள்ளைகளும் பிறந்தது முதலே தொடர் மருத்துவ சிகிச்சை அவசியம் என்று நம்பிக்கையூட்டப்பட்டு மருத்துவ மாயவலையில் சிக்கி அடிமைப்பட்டுக் கிடக்கும் நவீன காலமிது.

ஏன் இந்தப் பிரச்சினை?

அறியாமையே மக்களின் துன்பத்துக்கு எல்லாம் காரணம் என்றார் சுவாமி விவேகானந்தர்.

நம் உடல் நமக்கு கிடைத்த பெரும் பொக்கிஷம் இயற்கையும் இறைவனும் கொடுத்த வரம். இதனை நாம் ஒவ்வொருவரும் சரியாக விளங்கிக் கொண்டு வாழ வேண்டும். அப்படியில்லாமல், நோய்களையும் பிரச்சினைகளையும் தவறாகப் புரிந்து கொண்டு மருந்துகள் மட்டுமே தீர்வு என்று நம்புவது சரியான வழியல்ல.

நவீன விலை உயர்ந்த சொகுசுக் கார்களை வாங்குபவர்கள் அந்த கார்களில் பொருத்தப்பட்டிருக்கும் ஏயர் பாக்ஸ் (AIR BAGS) ABS BREAKS போன்ற பாதுகாப்பு அம்சங்களை முக்கியமாகக் கருதி, அதற்காக பல மடங்கு அதிக பணம் கொடுத்து வாங்கிப் பயன்படுத்துவது நம் எல்லோருக்கும் தெரியும். AIR BAG விபத்து ஏற்பட்டால் மட்டுமே விரிவடைந்து பாதுகாப்புக் கொடுக்கும். அதுவரை அது உள்ளே இருப்பது தெரியாது. கம்பனிக்காரர்கள் சொல்வதை நம்பித்தான் பணம் கொடுத்து வாங்கி நம்பிக்கையுடன் பயணம் செய்கிறோம்.

மனிதனால் உருவாக்கப்பட்ட வாகனங்களுக்கே இவ்வளவு பாதுகாப்பு அம்சங்கள் நிறைந்திருந்தால், இறைவனாலும், இயற்கையாலும் உருவாக்கப்பட்ட மனித உடலில் எவ்வளவு சிறப்பான பாதுகாப்பு அம்சம் (IMMUNE SYSTEM) நிறைந்திருக்கும் என்பதை நாம் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும்; உணரவேண்டும்; நம்ப வேண்டும். நோய் தாக்கிவிடுமோ என்ற பயமின்றி வாழப் பழக வேண்டும். வியாதி தாக்கம் வருமுன்பே மருந்துகள் உட்கொண்டு வரும் அனைவரும் இதனை கவனத்துடன் பரிசீலிக்க வேண்டும்.

சமீபகாலமாக ஏராளமாக மருத்துவர்கள் காச்சல் போன்ற சிறு சிறு பிரச்சினைகளுக்கு நாம் எவ்வளவு அவசரப்பட்டாலும், வீரிய மிக Antibyotic போன்ற மருந்துகளை பரிந்துரைப்பதில்லை. என்ன காரணம்? நம் உடலின் உள்ள நோய் எதிர்ப்பு ஆற்றலை (IMMUNITY) வியாதியை விரட்டியடிக்கும் வீரியமும் நிறைந்தது. சும்மா இருந்தாலே சுகம் கிடைக்கும்: எல்லாமே உள்ளே இருக்கிறது! நாம் பொறுமையுடன் போதிய அவகாசம் கொடுத்தால், மருந்துகளின் தேவையின்றி, நோய் நீங்கி, சுகம் பெறலாம்.

குழந்தை பிறந்து பேசத் தொடங்குவது வரை தன்னுடைய அனைத்து உணர்வுகளையும் சிரிப்பு, அழுகை மூலமே வெளிப்படுத்தும். பசி முதல் வலி வரை குழந்தைக்கு அழுகையே வடிகாலாக அமைகின்றது. அழுகைக்கான காரணத்தை விளங்கிக் கொள்ள நுண் உணர்வும், தொடர் கண்காணிப்பும் மிகவும் முக்கியம். அனேகமாக தாய்மார்கள் தங்கள் குழந்தையுடன் இரவும் பகலும் அருகிலேயே இருப்பதனால், அவர்களால் அழுகையின் காரணத்தை ஓரளவு புரிந்து கொள்ள முடியும். தக்க பரிகாரம் - பசி இருந்தால், உணவு ஊட்டவும், வருத்தமிருந்தால் அரவணைக்கவும் செய்து, குழந்தையை அமைதிப்படுத்த முடியும். குழந்தை நோயுற்று இருந்தால், நல்ல கைதேர்ந்த மருத்துவரிடம் தாய்மார்கள் குழந்தை குறித்த சரியான தகவல்களை கொடுப்பதன் மூலம் நோய்க்கான காரணத்தை மருத்துவர்கள் சரியாகக் கண்டுபிடித்து சிகிச்சை அளிக்க முடியும். விவரங்கள் தவறாகக் கொடுக்கப்பட்டாலோ, அல்லது தவறாக புரிந்து கொள்ளப்பட்டாலோ குழந்தையின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காது. குழந்தைகளுக்கு வரும் பெரும்பாலான பிரச்சினைகளுக்குச் சரியான காரணத்தைக் கண்டுபிடித்து, அதனை அப்புறப்படுத்தி விட்டாலே சுகமாகிவிடும். எல்லாக் குழந்தைக்கும் எல்லாம் ஒத்துக் கொள்ள மாட்டாது.

பெரும்பாலான சிறுவர்களுக்கும், சிறுமிகளுக்கும் சளி, இருமல், காச்சல் மற்றும் வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளே அதிகமாகத் தாக்கும். இந்த உபாதைகளுக்கு வீரியமிக்க மருந்துகளைவிட ஓய்வும் சரியான உணவுத் திட்டமும் (REST AND DIET PLAN) பெரும்பலன் அளிக்கும். பத்து வயது தாண்டிய இருபது வயதுக்குட்பட்ட இளம் பிராயத்தினர் சந்திக்கும் பெருவாரியான பிரச்சினைகளுக்கு மனமே பிரதான காரணமாக இருக்கின்றது. இந்த வயதில் இயற்கையாக ஏற்படும் ஹோர்மோன் (HORMONE) சுரப்புகளால் மனதிலும் உடலிலும் ஏற்படும் மாற்றங்கள் குறித்த தவறான புரிதலே பெரும் பிரச்சினைகளாக மாறிவிடுகின்றது. இந்த வயது மனமும் உடலும் தீவிரமாக வளர்ந்து வரும் பருவமாகும். இதனால் ஏற்படும் சிரமங்களை வியாதியாக நினைத்து சிகிச்சை செய்வதைத் தவிர்த்து அறிவுபூர்வமாக அணுக வேண்டியது அவசியம். மருந்து தீர்வல்ல! ஆரோக்கியமான பழக்க வழக்கங்கள் பெரும்பாலான பிரச்சினைகளை தீர்க்க வல்லது.

மருத்துவத்துறைக்கு இருபதாம் நூற்றாண்டில் பெரும் சவாலாக இருப்பது, நம் உடலின் உள்ளே இருந்து உண்டாகும் வியாதிகள்தான். வெளியில் இருந்து வரும் கிருமி தொற்றுதலுக்கு மிகச் சிறந்த மருந்துகள் நடைமுறையில் உள்ளன. ஆனால், நம் உடலில் ஏற்படும் ஆரோக்கிய சீர்கேடு, (AUTO IMMUNE DISORDER) அதிகப்படியான ரசாயன நச்சுப் பொருள்களே (CHEMICAL TOXINS) காரணமாகின்றன. தண்ணீரைச் சுத்தப்படுத்தும் வேதி பொருட்கள், உணவை பாதுகாக்க மற்றும் பதப்படுத்த பயன்படுத்தும் வேதிப் பொருட்கள், காய்கறிகள், பழங்கள், ஆடு, மாடு, கோழி போன்றவைகளுக்கு உபயோகப்படுத்தும் மருந்துப் பொருட்கள் எல்லாமே மறைமுகமாக மனித உடலில் மாபெரும் வேதியல் நச்சுத் தன்மையை (CHEMICAL TOXINS) உண்டாக்கி பெரும் ஆரோக்கிய சீர்கேடை உருவாக்குகிறது. இதன் தாக்கமே நாம் தற்போது பெருவாரியாகக் காணும் உடல் பருமன், தயிரோயிட் (THYROID) பிரச்சினை, மாதவிடாய் பிரச்சினை, டயபற்றிக் (DIABETIC) போன்ற பல பல பெயர்களில் வலம் வருகின்றன. வீரிய மிக்க மருந்துகளின் உபயோகத்தினை எல்லா வகையிலும் குறைக்க வேண்டியது மிக மிக அவசியம். ஆரோக்கியமான பழக்க வழக்கங்களும் அறிவுபூர்வமான சிந்தனையும் நோய் எதிர்ப்பாற்றலைத் தூண்டி ஆரோக்கியத்தினை மீட்டெடுக்கும் பக்க விளைவில்லாத ஹோமியோபதி மருத்துவம் எல்லா வயதினருக்கும் சிறந்த பலனளிக்கும். மாய உலகிலிருந்து வெளியேறி ஆரோக்கிய உலகில் ஆனந்தமாக வாழ்வோம். அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

இலவச ஆலோசனைகளுக்கு:
020 8144 1553

ஆஸ்துமா

ஹோமியோபதி மருத்துவம்
+
உங்கள் ஒத்துழைப்பு
100% தீர்வு

ஆஸ்துமா நோயாளிகள் ஏற்கனவே உட்கொள்ளும் ஆங்கில மருந்துகளுடன் ஹோமியோபதி மருந்துகளையும் உட்கொண்டால் கண்பாதிப்பு, தோல் மற்றும் பிறப்பு உறுப்பு அரிப்பு, நரம்புகள் பாதிப்பு, ஆண்மை குறைபாடு, கிட்னி பாதிப்பு போன்றவைகளை தவிர்க்கலாம்.

உயர்தர மருத்துவம் ▪ பாதுகாப்பான மருந்துகள் ▪ விரைவான சேவை

சிறப்பு சிகிச்சைகள்

- உயர் இரத்த அழுத்தம் (B.P/Hyper Tension)
- கொலஸ்ட்ரால் (Cholesterol)
- சிறுநீரக கோளாறுகள் (Kidney Diseases)
- மூட்டு வலி (Arthritis)
- தோல் வியாதிகள் (Skin Diseases)
- ஹார்மோன் பிரச்சனைகள் (Hormone Disorders)
- மாதவிடாய் கோளாறுகள் (Menses Disorders)
- செக்ஸ் பிரச்சனைகள் (Sex Disorders)
- குழந்தையின்மை (Infertility)
- டயாபட்டிஸ் (Diabetes)

இலவச மருத்துவ ஆலோசனைக்கு
0208 144 1553

HOMOEO CARE

30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்

போன்: 0208 144 1553

வெப்சைட்: www.homoeocare.com

இமெயில்: homoeocare@rediffmail.com

"Ammanai Saran Addainthal Athika Varamperalam"

SHRI KANAGA THURRKAI AMMAN (HINDU) TEMPLE TRUST

Founded on 10.08.1991 Charity No:1014409

5 CHAPEL ROAD LONDON W13 9AE TEL: 020 8810 0835 020 8840 0485

www.ammanealing.com Email: info@ammanealing.org

காக்கும் கரங்கள் SAVE A CHILD

ஒரு குழந்தையை பொறுப்பெடுங்கள் பராமரிப்புக்கு மாதம் £15 மட்டுமே! இலங்கை தமிழ்பகுதியில் பெற்றோர் என்ற பந்தமிழந்து உற்றார் உறவினர்கள் என்ற சொந்தமிழந்து தவிக்கின்ற ஆதரவற்ற பிள்ளைகளுக்கு உதவும் நோக்குடன் காக்கும் கரங்கள் என்ற நற்பணியை ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம் நடத்திவருகின்றது. ஆண்டுக்கு £80,000.00 அனுப்படுகின்றது. உங்கள் பேராதரவை நாடுகின்றோம்.

You magnanimity to sponsor an orphan child will enhance the opportunity to brighten his or her future and offer them a sense of security and hope. These children will get the exposure for an education and healthy life which is deprived to them since they are orphans. Your timely help will alleviate their vulnerability and raise their prospect of a new life. We aim to ease the harsh reality of being orphaned and we currently sponsor over 450 children a month at the cost of £80,000.00 per year (no admin charge are deducted). Please support to us and join today...

"Ammanai Saran Addainthal Athika Varamperalam"

SHRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST

Founded on 10.08.1991 Charity No:1014409

5 CHAPEL ROAD LONDON W13 9AE TEL: 020 8810 0835/020 8840 0485

www.ammanealing.com Email: info@ammanealing.org

ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய பல்கலைக்கழக உயர்கல்வித் திட்டம்

இன்று நீங்கள் உயர்கல்வி
கற்க மாணவர்களுக்கு வழங்கும்
பண உதவி எமது தாயகத்தின்
எதிர்கால சுபிட்சத்திற்கு வழிவகுக்கும்

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"
-பாரதியார்-

உங்கள் பேராதரவை வழங்கி உதவுங்கள்

HAIR LOSS ? NOT ANYMORE !

Are you suffering with the following conditions?

- Thinning Hair
- Male Pattern Balding
- Receding hair line
- Alopecia
- All forms of hair loss conditions are solvable

FREE CONSULTATIONS

LANDMARK
HAIR REPLACEMENT STUDIO OF LONDON
www.landmarkhair.com

STOP HAIR LOSS NOW!

HARLEY STREET TREATMENTS

MedContour

CHANGING LIVES IN OVER 50 COUNTRIES

After 1hr Treatment

Left side treated after 30mins, Right side untreated

After 4 treatments

Voted Best Non-Surgical Body Shaping device in the world 2012

www.med-contour.co.uk

Daily Mail
'No.1 Flab Zapper'

STUBBORN FAT ? NOT ANYMORE !

LONDON
32 - 34 Great Marlborough Street,
London. W1F 7JB
Tel : + 44 (0)20 7734 7113

BRISTOL
21 St Georges Rd.
Bristol. BS1 5UU
Tel: + 44(0) 117 302 0129

TAMIL No
Please call
தமிழில் பேச
07958 670476

LANDMARK

Puthinam 808457 இந்த விபரங்களை கொண்டு வருபவருக்கு 10% வீதம் சலுகை

'பிசி' என்ற போர்வைக்குள் பழைய மாவையே அரைப்பதா?

2016 வருடம் எங்களை விட்டுப் பிரியும் நேரம் நெருங்க 2017 வருடமோ நான் இதோ வருகிறேன் என்று ஆசை காட்டியபடியே இருக்க - வருடங்கள் உருண்டோடும் வேகத்தைப் பார்த்தல் சற்று நடுக்கமாகவே இருக்கிறது.

புதிய வருடம் ஆரம்பமாகும் போது அநேகர் தீர்மானங்கள் எடுத்திருப்பார்கள்/எடுப்பார்கள் - நான் இந்த வருடம் குடிக்க மாட்டேன், புகை பிடிப்பதை நிறுத்தப் போகிறேன், உடல்பயிற்சி தவறாமால் செய்வேன், டிவி நாடகம் பார்ப்பதை விடப் போகிறேன்.....இப்படி விதம்விதமான தீர்மானங்கள். புதிய வருடத்தில் தீர்மானங்கள் எடுப்பது ஒரு நல்ல விடயமே. ஆனால், இதைப் பற்றி ஆராய்ச்சியாளர்கள் என்ன கூறுகிறார்கள் என்றால் இந்த தீர்மானங்கள் எல்லாம் தை மாதத்தோடே அநேகர் காற்றில் பறக்க விட்டு விடுகிறார்களாம்.

உலகின் எந்த மூலையில் பார்த்தாலும் எல்லோருமே கூறும் வார்த்தைகள் என்ன தெரியுமா? நான் பிசி! நீண்ட நாட்கள் கழித்து என்ன உன் சத்தத்தையே காணோம் என்று நண்பருக்கு தொலைபேசி போட்டுப் பேசினால் அவர் கூறும் முதல் வார்த்தை நான் ரொம்ப பிசியாய் இருந்தேன் என்பதுதான். நாங்கள் பிசியாய் அப்படி என்னதான் செய்கிறோம் என்று சற்று ஆற அமர்ந்து நிதானமாய் சிந்திப்பதற்கு கூட எங்களுக்கு நேரம் கிடையாது. அவ்வளவு பிசி!

ஆனால், வருடத்தின் இறுதி ஒரு நல்ல தருணம். ஒரு அரை மணி நேரம் ஒதுக்கி கடந்து வந்த இந்த ஆண்டை கொஞ்சம் எடை போட்டால்தான் என்ன?

ஒரு சின்ன மளிகை கடையில் இருந்து பெரிய தூப்பர் மார்க்கெட் வரை எல்லோருமே அடிக்கடி தவறாமல் செய்யும் ஒரு விடயம் என்ன தெரியுமா? கடையில் உள்ள பொருட்களின் கணக்கு எடுப்பார்கள். வரவு செலவு ஒருபுறம் இருக்க அவர்கள் கடையில் உள்ள பொருட்களை எண்ணி கணக்கெடுப்பார்கள். இதை *stock taking* என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள்.

அதேபோல் நாங்களும் எங்களின் வாழ்கையை குறித்து அடிக்கடி கணக்கு எடுக்க வேண்டும். நாங்கள் நிறைய சமயங்களில் எங்களின் வாழ்க்கை எந்த இலக்கை நோக்கிச் சென்று கொண்டு இருக்கிறது என்று அறியாமலே வாழ்க்கையை ஏனோதானோ என்று வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். மனதில் வைராக்கியமாய் வைத்திருந்த இலட்சியங்கள் எல்லாம் தூசிபடிய, பழைய மாவையே வைத்து அரைத்துக் கொண்டு இருப்பது போல் அதே வேலை, அதே மேசை, அதே கதிரை, அதே சோறு கறி.....இப்படியே வாழ்க்கை ஓடி விட.....முதுமைக் கோலத்தைக் கண்ட பின்பு பெருமூச்சு விட்டுக் கொண்டு அடே நான் அந்தக் காலத்தில் இதை செய்திருக்கலாமே

என்று நினைத்து அங்கலாய்த்துக் கொண்டு இருப்பதில் ஒரு பயனுமே கிடையாது.

ஒரு அரைமணி நேரம் அமர்ந்து யோசிக்கும் போது புரியும் - நாங்கள் எதை சரியாய்ச் செய்கிறோம். எங்கே தவறுகள் செய்கிறோம். எங்கெங்கே மாற்றங்கள் தேவைப்படுகிறது என்று. நாங்கள் சரியாக செய்யும் காரியங்களுக்கு நாங்கள் நிச்சயமாகவே மார்தட்டிக் கொள்ளலாம். குறைகளைக் கண்டறியும் போது இதுவே தருணம் - மாற்றிக் கொள்வதற்கு.

நாங்கள் பிசி என்று கூறி உண்மையிலேயே பிசியாகத்தான் இருந்தாலும்எங்களிடம் நிறைய சோம்பேறித்தனமும் உண்டு. உதாரணத்துக்கு மாடு மாதிரிவேலை செய்வோம். வீட்டில் இருக்கும் நேரத்தை விட வேலையில் இருக்கும்நேரமே அதிகம். ஆனாலும் வேலையில் சந்தோசம் இல்லை. இதை எப்படி நிர்வர்த்தி செய்யலாம்? வேறு வேலை முழுமூச்சாய் தேடலாம். அல்லது வேலையில் உள்ள சில நிலைமைகளை மாற்றி அமைக்கலாம். இப்படி எத்தனையோ தீர்வுகள் உண்டு. ஆனால், என்ன - ஒரு வழக்கத்துக்கு பழகிப்போன எங்களால் அதை விட முடியவில்லை. பிசி என்ற போர்வைக்குள் சோம்பேறிகள் ஆகவே இருந்து விடுகிறோம்.

இரண்டு வாரங்களுக்கு முன்னால் புதிதாய் தொழில் ஆரம்பித்த ஒரு நபரோடு பேசினேன். அந்த நபர் தொழில் ஆரம்பித்து ஆறு மாதங்களுக்கு மேலாகி விட்டது. தொழில் ஓரளவு நல்ல விதமாய்ப் போய்கொண்டு இருக்கிறது என்று இந்த நபர் கூறவும் நான் அந்த நபரிடம் சரி மேற்கொண்டு நீங்கள் எப்படி உங்களின் தொழிலை வளர்க்கப் போகிறீர்கள், ஏதாவது வித்தியாசமாய் செய்து இன்னும் முன்னோக்கி வருவதற்கு யோசனைகள் அல்லது திட்டங்கள் உண்டா என்று கேட்டேன். அதற்கு அந்த நபர் - ஐயோ நான் இப்போ ரொம்ப பிசி - அதற்கு எனக்கு நேரமே கிடையாது என்று கூறினார். அதுபற்றி பிறகு யோசிப்போம் என்று முடித்தார். பிறகு என்றால் எப்போது? நாளையா? அடுத்த மாதமா? அடுத்த வருடமா? அல்லது ஓய்வு பெற்ற பிறகா? நாங்கள் செய்யும் பெரிய தவறு என்ன தெரியுமா - பிறகு பார்ப்போம் என்பதுதான்.

எங்களுக்கு கிடைத்திருக்கும் இந்த ஒரு நாள்தான் நிஜம். நாளை எங்களுக்கு கிடைக்குமா என்று எங்களால் உறுதியாக கூற முடியாது.

கிடைத்திருக்கும் இந்த நாளை கைகளில் ஏந்திக் கொண்டு கொஞ்சம் கணக்கெடுத்தால்தான் என்ன? கடந்து செல்லும் இந்த ஆண்டு கடந்ததாகவே இருக்கட்டும். புதிய ஆண்டிலாவது கொஞ்சம் சீர்படுத்தி வாழ்க்கைப் பாதையை மாற்றி அமைக்கலாம் அல்லவா? பயணமாகிக் கொண்டு இருக்கும் வாழ்க்கைப் பாதையில், களை எடுத்து, முற்க்களைப் பிடுங்கி ஏறிந்து, எங்களுக்குப் பிடித்த பூஞ்செடிகளை நட்டு.....கொஞ்சம் அழகாகிக் கொள்வேமே?

குறமகள்
நினைவழியா நினைவுகள்

கனடாவில் நீண்டகாலம் வாழ்ந்து மறைந்த ஈழத்தின் மூத்த இலக்கிய படைப்பாளியான குறமகள் என்ற வள்ளிநாயகி இராமலிங்கம் அவர்களின் மறைவின் முதல் மாத முடிவில், 'குறமகள்: நினைவழியா நினைவுகள்' எனும் மலர் அன்னாரது குடும்பத்தாரால் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. ''இம்மலரைத் தொகுத்து வெளியிடும் பணியைத் 'தமிழர் தகவல்' வெளியீட்டகத்திடம் அவரது பிள்ளைகள் ஒப்படைத்தபோது, அதனைக் கடமையாகக் கருதி, விருப்புடன் ஏற்றுக் கொண்டோம்" என்று தொகுப்பு ஆசிரியரும், கனடா தமிழர் தகவல் முதன்மை ஆசிரியருமான எஸ். திருச்செல்வம் தமது பதிப்புரையில் குறிப்பிட்டு, 'ஈழத்தமிழிலக்கிய உலகின் முதல் மகள் குறமகள்' என்று பெருமைப்படுத்தியிருக்கிறார்.

"தமிழிலக்கிய உலகில் அதிமூத்த படைப்பாளியாக அறுபதாண்டுகளுக்கும் மேலாக கோலோச்சி வந்த குறமகள் அவர்கள் சிறுகதை, தொடர்கதை, நாவல், கவிதை, கட்டுரை, ஆய்வு, விமர்சனம், நாடகம், திரைக்கலை, மேடைப் பேச்சு, வானொலி - தொலைக்காட்சி உரையாடல், அரசியல் கருத்தாடல், ஆன்மீக விளக்கவுரை என்று அகண்ட தமிழ் பரப்பின் சகல துறைகளிலும் வேர்விட்டு விழுதெறிந்த பன்முக ஆளுமையாளர். 1970ம் ஆண்டிலிருந்து அவருடன் உறவாகவும், நட்பாகவும் நான் நெருங்கிப் பழகி வந்தமையைப் பெரும் வரமாக இப்போது கருதுகிறேன். அக்கா - தம்பி பாசமுடன் நீண்டு வந்த நட்புக்கு விடை கொடுக்க நேர்ந்தது காலத்தின் நியதியாயிற்று" என்ற எஸ். திருச்செல்வத்தின் குறமகள் பற்றிய வரிகள் உறவோடு கலந்த உணர்வு பூர்வமானவை.

இச்சிறு நூலில் வெளி வந்துள்ள குறமகள் பற்றிய ஆக்கங்கள் அவரது பெருமைகளை அழகாகச் சொல்கிறது. அட்டை முதல் கடைசிப் பக்கம் வரை ஒரு தொகுப்பாளரின் அனுபவ முத்திரை பளிச்சிடுகிறது.

'குறமகள் மறைவு இலகுவாக ஈடுசெய்ய முடியாதது' என்ற தொகுப்பாசிரியரின் கருத்து மறுக்க முடியாதது.

- ரா

டாக்டர் ஸ்ரீதரன்

ஏன் சிரித்தான் பரமசிவன்?

'சிரிப்பு வருது - சிரிப்பு வருது - சிரிக்கச் சிரிக்க சிரிப்பு வருது மனித மனத்தை - மனித குணத்தை - நினைக்க நினைக்கச் சிரிப்பு வருது...'

-ஹா-ஹா-ஹா- உடல் குலுங்க உள்ளம் மலர - முப்பது கோடி தேவர்களும் மலைக்கும் வண்ணம் - ஈரேழு உலகங்களும் பிரமிக்கும் வண்ணம் தன்னை மறந்து கைலைநாதன் குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கிறான்.

யுக யுகாந்திரமாக காலம் காலமாக - ஜீவாத்மாக்களின் இசைக்கு இசைந்த - அவர்களின் பாட்டுக்குப் பணிந்த - அந்தப் பரமாத்மாவான பரமசிவன் - கைலையில் உறையும் அந்தக் கைலைநாதன் - முதன் முறையாக இன்று - அந்த வெள்ளி மலையில் தனிமையில் அமர்ந்து- பூமியைப் பார்த்த வண்ணம்- அண்ட சராசரங்களும் அதிரும்படியாக - வாய்விட்டுச் சிரித்தபடியே பாடிக்கொண்டிருக்கிறான்.

"சிரிப்பு வருது - சிரிப்பு வருது - சிரிக்கக் சிரிக்க சிரிப்பு வருது. மனித மனத்தை - மனித குணத்தை - நினைக்க நினைக்கச் சிரிப்பு வருது."

ஹா - ஹா - ஹா --- ஹா - ஹா - ஹா---ஹா -ஹா- ஹா- உடல் குலுங்க - உள்ளம் மலர- முப்பது முக்கோடி தேவர்களும் மலைக்கும் வண்ணம் - ஈரேழு உலகங்களும் பிரமிக்கும் வண்ணம் தன்னை மறந்து கைலைநாதன் குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கிறான்.

இப்பொழுது - இந்த நேரத்தில் - பூலோகத்தில் அவனுக்கு யாரைப் பார்த்தாலும் - எதைப் பார்த்தாலும் - எதைக் கேட்டாலும் சிரிப்பு வருகிறது.

பரமசிவனின் சிரிப்பு இது; படைத்தவனின் சிரிப்பு இது. சரியான காரணமில்லாமல் - ஆழமான அர்த்தமில்லாமல் உதயமாகியிருக்க முடியாது இந்தச் சிரிப்பு.

எதற்காகச் சிரித்தான் அந்தப் பரமசிவன்? எதைப் பார்த்துச் சிரித்தான் அந்தப் பரமசிவன்?

நாமோ வெறும் மனிதர்கள் -ஜீவாத்மாக்கள் கேட்டுத் தெரிந்து கொள்ளும் நிலை நமக்கில்லை - அந்த நிலையிலும் நாமில்லை. ஆனால், நம்மைப் படைத்தவனைப் புரிந்து கொண்டால் - அவனின் போதனைகளை அறிந்து கொண்டால் - மானிட வடிவில் அவ்வப்போது தோன்றி நமக்கெல்லாம் அவன் கூறியவற்றை கவனித்தால் அவன் சிரிப்பின் காரணத்தை ஊகிக்கலாம்.

ஊகம் என்று வந்து விட்டால் - ஊகிப்போம் என்று புறப்பட்டு விட்டால் - கற்பனை களைக்கும் வரை ஊகித்துக் கொண்டே போகலாம். அந்த ஸ்ரீ ரங்கநாதன் பாற்கடலில் பள்ளி கொண்டதற்கே அத்தனை அத்தனை காரணங்கள் ஊகிக்கப் பட்டிருக்கும் போது- பரமசிவன் சிரிக்கும்படியாக நாம் இங்கு நடத்தும் திருவிளையாடல்கள் - கோமாளித்தனங்கள்- பித்துக்குளித்தனங்கள் ஒன்றா? இரண்டா? ஊகிப்பதற்கு!

இருந்தாலும் ஊகிப்போம் அவற்றில் சிலவற்றை!

அடுத்த நொடியில் நமது இருதயம் துடிக்குமா? துடிக்காதா? என்பதற்கு எது வித உத்தரவாதமுமில்லாத போது-இந்த நொடியில் நாம் வெளியில் விட்ட மூச்சு அடுத்த தடவை உள்ளே வருமா? வராதா? என்பதற்கு எதுவித உத்தரவாதமுமில்லாத போது- இந்தக் கணத்தில் நாம் வாயில் போட்ட உணவு வயிற்றைச் சென்றடையுமா? சென்றடையாதா? என்பதற்கு எது வித உத்தரவாதமுமில்லாத போது..... இந்த மனிதர்கள்..... "அப்பனே! கைலைநாதா? எங்களைப் பொறுத்த வரையில் எல்லாமே சரியாகத்தான் இருக்கின்றன- எல்லாமே உத்தரவாதத்துடன்தான் இருக்கின்றன- அதைப்பற்றி நீ ஒன்றும் கவலைப்பட வேண்டாம். ஆனால், நான் வாங்கிய இந்தக் கார் மட்டும் ஒழுங்காக வேலை செய்வதற்கு உத்தரவாதம் தா-மிகுதியை நாம் பார்த்துக் கொள்கிறோம்"- என்ற மனப்பாங்குடன் புதிதாக வாங்கிய காரின் திறப்பை குருக்களிடம் கொடுத்து - தீபாராதனை காட்டி- காருக்கு முன்னால் தேங்காய் உடைக்கும் தனது பக்தர்களையும் "கைலைநாதனின் ஆசீர்வாதம் கிடைத்துவிட்டது உங்களுக்கு- இனி ஒரு கவலையுமில்லை"- என்று பக்தர்களுக்கு உறுதி வழங்கும் வேதியர்களையும் பார்த்துத்தான் சிரித்தானோ அந்தப் பரமசிவன்?

கடந்த பதினைந்து வருடங்களாக - உறவினர்களை நண்பர்களை பொது இடங்களில் சந்திக்கும் போதெல்லாம்- "என்ன இருந்தாலும் நமது நாடு மாதிரி ஒரு நாடும் அமையாது - சொந்த நாடு என்றாலே சொர்க்கம்தான் - இந்த நாட்டிற்கு வந்தது நாம் போன பிறவியில் செய்த பாவம் -யாழ்ப்பாணத்தில் ஒரு கஞ்சியைக் காய்ச்சிக் குடிப்பதில் உள்ள சுகம் இங்கு கிடைக்காது- ஊர் நிலைமைகள் மட்டும் சரியாக வந்தால் எப்படியாவது மூட்டை கட்டி விட வேண்டும்"- என்று வாய்க்கு வாய்-பேச்சுக்குப் பேச்சு கூறி வந்த நம்மில் பலர்- கடந்த சில மாதங்களாக - சமாதானப் பேச்சுகள் சாதகமாகத் திரும்பியிருக்கும் இந்த வேளையில்- ராகத்தை மாற்றி - தாளத்தை மாற்றி - "என்னுடைய கடைசி மகள் இன்னும் ஆறு வருடத்தில் சோதனை எடுக்கப் போகிறான் - அவளைக் குழப்பக் கூடாது" என்றும் - "வீட்டை இன்னும் நாலு வருடங்களுக்கு நல்ல விலைக்கு விற்க முடியாது- அது தான் கொஞ்சம் யோசனையாக இருக்கிறது" என்றும்- "எனது மூத்த மகளின் பிரசவத்திற்கு இன்னும் இரண்டு வருடங்கள் இருக்கின்றன" என்றும் "எனது நாய் இன்னும் போகிறது" என்றும் பிதற்றித் திரியும் நம்மில் சிலரைப் பார்த்துத் தான் சிரித்தானோ அந்தப் பரமசிவன்?

பிறந்து வளர்ந்த நாட்டைத் துறந்து நாடு நகரங்களைத் தாண்டி - சமுத்திரங்களைத் தாண்டி- ஆயிரமாயிரம் மைல்களுக்கப்பாலுள்ள அந்நிய நாடு ஒன்றில் வாழும் நாம் - அந்நியன் போட்ட கால அட்டவணையின்படி இயங்கும் புகையிரதத்தில்- பஸ்ஸில் பயணம் செய்து - அந்நியன் வகுத்த கால அட்டவணையின்படி இயங்கும் அலுவலகங்களில் வேலை செய்து விட்டு- மலையில் வீட்டிற்கு வரும் வழியில் - அந்நியன் திட்டமிட்ட கால அட்டவணையின்படி இயங்கும் பாடசாலைகளில் கற்கும் நம் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்து- வயிறு புடைக்க உண்ட பின் கால் மேல் கால் போட்ட வண்ணம்- இரவு பத்து மணிக்கு பி.பி.ஸி தொலைக்காட்சியில் காலநிலை பற்றிய அறிவிப்புகள் முடிந்ததும் - தொலைபேசியில் குருக்களை அழைத்து "ஐயா! இந்த முறை எங்கடை புது வருஷம் எப்ப ஐயா பிறக்குது" என்று கேட்கும் நமது கேள்வியையும்- "சாவகச்சேரி பஞ்சாங்கத்தின்படி திங்கட்கிழமையும் கொக்குவில் பஞ்சாங்கத்தின்படி செவ்வாய்கிழமையும்- எனது விஷேட கணிப்பின்படி இவை இரண்டுக்கும் நடுவிலும் நமது வருஷம் பிறக்கிறது" - என்று கூறும் குருக்களின் பதிலையும்- நினைத்து நினைத்துச் சிரித்தானோ அந்தப் பரமசிவன்?



பிறந்ததிலிருந்து இறக்கும் வரை - காலையிலிருந்து மாலை வரை- ஒவ்வொரு நாளும் - ஒவ்வொரு பொழுதும் -வீட்டில் ஒரு வேடம்- அலுவலகத்தில் ஒரு வேடம்-அலுவலக நண்பனிடம் ஒரு வேடம்- நண்பியிடம் வேறொரு வேடம் -வீட்டில் மனைவியிடம் ஒரு வேடம் - பிள்ளைகளிடம் இன்னொரு வேடம்- இறைவனுக்கு ஒரு வேடம் - நமக்கு நாமே ஒவ்வொரு வேடம்-இப்படி இப்படியே -ஒத்திகை பாராமல்-வசனங்கள் எதுவும் மனப்பாடம் செய்யாமல் - ஆளுக்கேற்ப - இடத்திற்கேற்ப கச்சிதமாக நடித்து வெற்றிகரமாக வாழ்க்கை நடாத்தும் நாம் - யாரோ ஒரு கூத்தாடி-வயிற்றை நிரப்புவதற்காக - வேடம் போட்டு- வசனங்களை மனப்பாடம் செய்து ஒத்திகைகள் பல பார்த்து- சினிமாவில் நடித்து அதி சிறந்த நடிகன் அல்லது நடிகையாகத் தெரிந்தெடுக்கப்பட்டதும்- தொலைக்காட்சியில் - நேரில் - அவர்களைப் பார்த்ததும்- 'ஆ' - என்று வாயைத் திறக்கும் நம்மைப் பார்த்துத் தான் சிரித்தானோ அந்தப் பரமசிவன்?

பிரித்தானிய அரசியாரின் தலையில் இருக்கும் கிரீடத்தில் எத்தனை வைரங்கள் இருக்கின்றன? அமெரிக்க ஜனாதிபதியிடம் எத்தனை செருப்புகள் உள்ளன? தமிழ்கத்தின் முதல்வரின் காரின் நிறம் என்ன? இது போன்ற கேள்விகளைக் கேட்டு-அதி சிறந்த அறிவாளியைத் தேர்ந்தெடுக்கும் தொலைபேசி-வானொலி நிகழ்ச்சிகளைப் பார்த்து விட்டு -கேட்டு விட்ட- இதுதான் அறிவு என்று எண்ணி - வென்றவர்களின் அறிவுத்திறமையை மெச்சி -அந்த அறிவாளியைப் போலவே நாமும் வர வேண்டும் - தமது பிள்ளைகளும் வர வேண்டும் என்று முட்டாள் தனமான முயற்சி எடுப்பவர்களைப் பார்த்துத்தான் சிரித்தானோ அந்தப் பரமசிவன்?

பதினெட்டு வயதில் க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் தோல்வியடைந்ததும் உனக்கு இனிவாழ்வே இல்லை - உனது பிறவியே வீணாகி விட்டது - என நண்பர்கள் - உற்றார்கள் - உறவினர்கள் - ஆசிரியர்கள் - கூறியதை அப்படியே நம்பி - வாழ்க்கையில் விரக்தியடையும் மாணவர்கள் பரீட்சையில் சித்தியடையாத இப்படியொரு உதவாக்கரை மகனைப் பெற்று விட்டேனே- நாலு பேர் முகத்தில் இனி எப்படி முழிக்கப் போகிறேன்- சமூகத்தில் எப்படித் தலை நிமிர்ந்து நடக்கப் போகிறேன் என்று விசனப்பட்டு - கவலைப்பட்டு - மார்பு நோயால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் அப்பாக்கள். இப்படியான மாணவர்களுக்கு - பரீட்சையில் தோல்வியடையும் மாணவர்களுக்கு - இனி எதிர்காலம் என்ன என்பதை திட்டமிடும் அயலவர்கள் - ஊர்ப்பெரியவர் இவர்களையெல்லாம் பார்த்துத்தான் சிரித்தானோ அந்தப் பரமசிவன்?

அவன் சிரித்த காரணங்களை ஊகிப்பதற்கு நாம் படும் கஷ்டத்தைப் புரிந்து கொண்டு அவனே அசரீரியாக ஒலிக்கிறான். கேட்கிறதா உங்களுக்கு?

"பக்தி என்ற பெயரில் - இறைவழிபாடு என்ற பெயரில்- தேச பக்தி என்ற போர்வையில் - சாத்திரங்கள் என்ற பெயரில்- கல்வி என்ற பெயரில் - கலை கலாச்சாரம் என்ற பெயரில்- நீங்கள் செய்யும் கோமாளித்தனங்களை - பித்துக்குளித்தனங்களை பார்த்து இன்று நான் மட்டுமே சிரித்தேன். ஆனால், இப்படியே நீங்கள் தொடர்ந்தால் - நாளை உங்களைப் பார்த்து நீங்கள் வளர்க்கும் நாயும் சிரிக்கும் - மயானத்தில் திரியும் பேயும் சிரிக்கும்".

போர்வைகளற்ற நிர்வாணம் இந்த அவதானம்.

அகத்தே மாசில்லாதவனுக்கு நிர்வாணம் ஒரு புனிதம்.

அது ஒரு சத்தியம். ●

பசுந்திரா சசி

நாமிருக்கும் நாடு நமதே!

கதவை அடைத்து வைத்து விட்டு பூனையை தாக்கினாலும் அது திருப்பி தாக்கும் என்பது ஓர் நாட்டுப்புற பேச்சு. ஓர் அரசோ அல்லது எந்த அதிகார சக்தியோ பலத்தை பயன்படுத்தி ஓர் இனத்தை-காலம்காலமாக வாழ்ந்த மண்ணை விட்டு அகற்றவும் அதன் பெரும்பான்மை பரம்பலை சிதைக்க ஊடே தன் இனத்தை குடியேற்றியும் , மண்பறிப்பு , மொழிச்சிதைப்பு , கலாச்சார சீர்கேடு , மதச்சின்னம்- மதபீடம் அமைப்பு என இன சுத்திகரிப்பை மேற்கொள்ளும் போது எந்த இனமானாலும் அதனை நெடுநாள் பொறுத்துக்கொள்ளாது. ஒடுக்குமுறைக்கு எதிராக கொதித்து குரல் எழுப்புவதை எந்த சக்தியாலும் நீண்டகாலத்திற்கு தடுக்க முடியாது. குரல்வளையை நசுக்கும் போது பொறுப்பதும் பின் மீண்டெழுவதும் வரலாறு கண்ட உண்மை .

இதுவே இன்று இலங்கைத் தீவிலும் நடந்தேறுகின்றது. பிரித்தானிய சாம்ராஜ்ஜிய ஆளுகைக்குட்பட்டு பின் சுதந்திரம் பெற்ற பல நாடுகளில் இன்னமும் காஷ்மீர் போன்ற தீர்க்கப்படாத நீண்ட கால எல்லை சச்சரவுகளும் இலங்கை போன்ற பெரும்பான்மை சிறுபான்மை கொடுமைகளும் தொடர்ந்தபடியே உள்ளது. (பிரித்தானியரால் ஆளப்பட்ட தென்னாப்பிரிக்க நிறவெறிச் சச்சரவுகளும் சமீபத்திலேயே முடிவுக்கு வந்தது)

இங்கே நாம் பிரான்ஸ் காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்டு பின் விடுபட்ட ஆபிரிக்க கண்டத்தின் வரைபடத்தை பார்த்தாலே ஒரு உண்மை புலப்படும். நூல் பிடித்து கோடு போட்டது போல எல்லைகள் அமைக்கப்பட்டுள்ளது. அதாவது நிதானமாக நாட்டின் எல்லைகள் பிரிக்கப்பட்டு எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் சுகந்திரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் ஆங்கில ஏகாதிபத்தியமோ தாம்வெளியேறுவது என தீர்மானித்தார்களே அன்றி தமக்கு பின் அவ் நாடுகள் என்னவாகும் என எண்ணியிருக்க வில்லை . பிரித்தானிய வெளியேற்றத்தின் பின் சுமார் 60 ஆண்டுகளுக்கும் மேலாக பெரும்பான்மை சிங்கள பௌத்த அரச கட்டிலில் எந்த கட்சி ஆட்சி ஏறினாலும் தமிழன் தாக்கப்பட்டதே வரலாறு.

இன்று என்றுமில்லாதவாறு ஒருவித நரித்தன நிலையை இருபெரும் கட்சிகளும் சேர்ந்து உருவாக்கி உள்ளது . இந்த திரையின் பின்னும் பழைய நாடகமே தயாராகிறது என்பதை விரைவில் சமாதான பார்வையாளராக அமர்ந்திருக்கும் உலகும் சில உய்தறித் தன்மை அற்ற தமிழ் உயர்பீடங்களும் அறியும் காலம் தொலைவில் இல்லை.



இன்றைய கால ஓட்டத்தில் வாழும் மக்களில் பெரும்பான்மையானோர் பொது நலன் அற்றவர்களாகவே இருக்கிறார்கள் என்பதை,

பிரான்சின் சுதேசக்கட்சியின் அதீத வளர்ச்சி

பிரித்தானியாவின் ஐரோப்பிய ஒன்றிய வெளியேற்றம்

அமெரிக்க தேர்தலில் கில்லாறி கிலிங்டன் தோல்வி

இஸ்லாமிய தீவிரவாதிகளின் வளர்ச்சி

போன்ற விடயங்கள் உறுதி செய்கின்றன . ஆனால் உண்மைகள் மயிர் சிலிர்ப்பூட்டும் காலங்கள் உயிர் வாழும். பிரபாகரன் , புலிவீரம் , திலீபனின் ஈகை என நம் மனதில் பதிந்த எண்ணக்கருக்கள் மறைய நூயுகங்கள் போதாது.

மறுபக்கம் - இனி ஒரு போராட்டம் சாத்தியமில்லை என்றும், இனியும் இறக்க யார்தான் இருக்கிறார்கள் என்றும், நாடு மக்கள் வாழவே - மக்கள் இல்லாத நாட்டை யாருக்கு வேண்டும் - என்றும் நினைப்பதற்கான காரணம் . இன்றைய தமிழ் மக்கள் மனநிலை சுதந்திரத்தை விட வலிகளையே எண்ணிக்கொண்டு இருப்பதனால் ஆகும்.. ஆனால்" நாம் எந்த ஆயுதத்தை எடுக்க வேண்டும் என எதிரியே தீர்மானிக்கிறான் என்ற சீன புரட்சியாளர் மாவோ சேதுங் Mao Zedong கூற்றுப் போல . இழப்புகள் பற்றிய வலி தானாக மறையு முன்னரே சிங்கள பேரினவாத சக்திகளின் செயற்பாடுகள் சுதந்திர சிந்தனையை மீண்டும் தூண்டும் வகையிலும் போராட்ட உணர்வை மீண்டெழவும் செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

தடை செய்த ஆயுத பிரபோகம், போர் விதி மீறல்கள், இன சுத்திகரிப்பு என்பன நடந்தும் ஐநாவும், அயல் தேசமும், உலக வல்லரசுகளும் கண்டு கொள்ளாமையின் ஆற்றாமை மக்களை கோபமடைய வைத்திருக்கும் அதே வேளை அறம், பொதுநலன், நீதி: இவை நோக்கி சிந்திக்க தடையாகவும் இருக்கின்றது.' பலசாலிகள் செய்வதே இறுதியாக வெல்லும்' என்றும்' நீதி என்று பலத்தின் முன் எதுவும் இல்லை' என்றும்' வீதியில் இறங்கி நீதி கேட்டாலும் அரசுகள் கண்டு கொள்ளாது' என எண்ணி வெம்புவதை விட மக்களால் வேறெதுவும் செய்ய முடிவதில்லை. ஆனால், வரலாறுக்கு உரியவன் மனிதன் வரலாறு அவனை பற்றியே பேசிவருகிறது . வரலாற்றில் இருந்து மனிதன் கற்றுக்கொண்டதும் வரலாறு மனிதனிடம் இருந்து கற்றுக்கொண்டதும் இதுதான் . வரலாற்றில் எங்கும் ஒரு சுதந்திர தாகம் முறியடிக்கப்பட்டது என்ற வசனங்கள் இல்லை. மாறாக சர்வாதிகாரம் ஒழிக்கப்பட்டது ஓர் இனத்திற்கு எதிரான கொடுமை நீங்கி அந்த இனம் சுதந்திரம் அடைந்தது. அடுக்குமுறை ஒடுக்கப்பட்டு நாடு விடுதலை அடைந்தது என்ற வாக்கியங்களுடனேயே வரலாறு நீண்டு செல்கிறது.

ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் ஒடுக்கப்பட்ட மக்கள் அரசியல், ஜனநாயக போராட்டங்களை கையில் எடுக்க வேண்டும் . நீதி கேட்டு ஆர்ப்பாட்டங்கள் செய்ய முன்வர வேண்டும். அரசியல் உயர் பீட ஆதரவுகளை திரட்டவும் பிரச்சாரங்களை முன்னெடுத்துச் செல்லவும் முன்வர வேண்டும். ஐநாவின் சட்ட திட்டங்களை நுணுக்கமாக கற்றுணர்ந்து செயல் வடிவங்களை திட்டமிட்டு நான் நீ எனபோட்டி போடாமல் ஒற்றுமையாக இயங்க வேண்டும். இலங்கையில் அமைதி நிலவ இரண்டு நாடுகள் அமைவதே சரியான தீர்வு.

எம்மை விடுதலை அடைய வைக்க நாமே பாடுபட வேண்டும் .

" ஒரு நாடு நாடாக இருக்க அதனை இன்னொரு நாடு அங்கீகரிக்க வேண்டும் என்று இல்லை " .

" ஒரு நாடு தன்னை ஒரு நாடாக பிரகடனம் செய்ய இன்னொரு நாட்டின் அனுமதி தேவை இல்லை"

இவை சாதாரண வாக்கியங்கள் அல்ல-ஐநாவின் சட்ட வரைவுகள் .

இன்றும்கூட எல்லா நாடும் ஏற்றுக்கொள்ளாத பல நாடுகள் உண்டு . உதாரணம் பாக்கிஸ்தானை இஸ்ரேல் ஒரு நாடாக இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை . அதேபோல் இஸ்ரேலை குவைத் உட்பட 31நாடுகள் நாடாக ஏற்கவில்லை .

இரண்டாம் உலக மகாயுத்தத்தில் ஒரு நாடு தன் எல்லையை விட்டு வெளியேறி இன்னொரு நாட்டில் இயங்கிய வரலாறும் உண்டு. இதனையே government in exile என அழைப்பர்.

இது போன்ற அடிப்படை விடயங்கள் சாதாரண மக்களும் அறியும் வகையில் செய்தல் வேண்டும்.

'நாமிருக்கும் நாடு நமதே' என்ற பாரதியின் கூற்றை நினைவில் கொள்ள வேண்டும். ●

பிரதியின் விலை
(தபால் செலவு உட்பட)
10 பவுண்கள்
மட்டுமே.

வெளிவந்து விட்டது

ஈழநாடு: ஒரு ஆலமரத்தின் கதை

ஈழத்தின் முதலாவது பிராந்தியத் தமிழ் தினசரியான ஈழநாடுவின் வரலாற்றை அந்த ஆலமரத்தின் விழுதுகளின் வாயிலாகவே நூலகவியலாளர் என். செல்வராஜா பதிவு செய்திருக்கின்றார். ஈழத்தமிழரின் மனதில் மட்டும் வாழ்ந்துவந்த ஒரு பத்திரிகையின் வரலாற்றை அதன் உருவாக்கம், வளர்ச்சி, மௌனிக்கப்பட்ட வரலாறு அனைத்தையும் தனியொரு ஆவணத் தொகுப்பாக உலகத் தமிழரின் பார்வைக்குக் கொண்டுசென்று சேர்த்திருப்பதுடன் அதனை ஒரு வரலாற்றுப் பதிவாக்கும் பணியையும் மேற்கொண்டிருக்கிறார்.

வெளியீடு: லண்டன்: அயோத்தி நூலக சேவைகள்-ஐக்கிய இராச்சியம், 1வது பதிப்பு,2016. (அச்சகம்- குமரன் புத்தக இல்லம், 39,36 ஆவது ஒழுங்கை, கொழும்பு 6). XV, 256 பக்கம், புகைப்படங்கள், அளவு: 21X14.5 சமீ., ISBN: 978-0-9930143-0-7.

லண்டனின் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள:

N. Selvarajah என்ற பெயருக்கு எழுதப்பட்ட 10 பௌமதியான காசோலையுடன் உங்கள் தபால் முகவரியையும் N. Selvarajah, 48, Hallwicks Road, Luton LU2 9 BH என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கவும்.

E-mail: Noolthettam.ns@gmail.com Telephone : 07817402704

காவலூர் ஞானா

அமெரிக்க புதிய ஜனாதிபதி:
இந்த மாற்றம் இனி தருமா ஏற்றம்?

பெரும் பணத்தில் புரளும் ஒரு கோடீஸ்வரராகத்தான் அவர் பலராலும் அறியப்பட்டார். ஒரு 70 வயதுக் கோடீஸ்வரன், பல ஹாலிவுட் நட்சத்திரப் பிரபல்யங்கள், அரசியல் பிரமுகர்கள் என்றும் மல்லுக்கட்டிக் கொண்டு வந்த ஜாம்பவான்களையெல்லாம் ஒதுக்கி விட்டு, பலரையும் மிரள வைக்கும் விதத்தில், உலகின் அதிசக்தி வாய்ந்த நாடான அமெரிக்காவின் அதிபர் பதவியைத் தனதாக்கி இருக்கின்றார்.

டிரம்பின் ஜனாதிபதி தெரிவு அசாத்தியமான ஒன்றாகவே தெரிகின்றது.

இராணுவச் சேவை, அரசில் பெரிய பதவி என்று எதுவுமே இல்லாமல் அமெரிக்காவின் 45வது ஜனாதிபதியாக வந்தவர்தான் டொனால்ட் டிரம்ப். இது அமெரிக்க ஜனாதிபதி சரித்திரத்தில் ஒரு சாதனை.

அமெரிக்காவை மீண்டும் உன்னத நிலைக்கு கொணர்வோம் என்னும் சர்ச்சைக்குரிய பிரச்சாரத்தில் குதித்த டிரம்ப், மெக்ஸிக்கோ- அமெரிக்க எல்லையில் ஒரு சுவர் எழுப்புவோம், முஸ்லீம்கள் அமெரிக்கா வந்து குடியேறுவதை தற்காலிகமாக நிறுத்துவோம் என்ற பிரச்சாரங்கள்தான் இவரது வாக்கு வேட்டையில் வெற்றி வாக்குகளை அள்ளித் தந்தனவோ என்று பலரை நினைக்க வைத்துள்ளது.

குடியிருப்பு திட்டங்களை நிர்வகிக்கும் வர்த்தகத்துறையில் ஈடுபட்டிருந்த டிரம்பின் தந்தையும் பணத்தில் புரண்டவர்தான்.

நிறுவனத்தை நிர்வகிக்க அப்பாவுக்கு உதவிய மகன் டிரம்ப், நியூயோர் நகரமெங்கும் தன் ஆதிக்கத்தைச் செலுத்தி 1971இல் டிரம்ப் நிறுவனமாக அப்பாவின் நிறுவனங்களை பெயர் மாற்றமும் செய்து கொண்டார். 1999 இல் இவர் அப்பா உயிர்நீத்த போது, எல்லாம் என் அப்பாவின் ஊக்குவிப்புத்தான் என்று அப்பாவைச் சொல்லிப் பெருமைப்பட்டார் இந்தத் தனவந்தன்.

விமான ஒட்டியாக இருந்த சகோதரன் குடித்து குடித்து 43 வயதிலேயே மரணித்தவர். இதுவே டிரம்ப் வாழ்வின் எச்சரிக்கை மணியாயிற்று. மதுவையோ சிகரெட்டையோ தொடுவதை அறவே வெறுத்தவர் டிரம்ப்.

இவருடைய பெயரில் நியூயோர்க் நகரிலுள்ள 68 மாடிக் கட்டடம் போல இந்த நகரெங்கும் பல ஹோட்டல்களும், கட்டடங்களும் இருப்பதோடு மும்பாய், இஸ்தான்புல் நகரங்களிலும் பிலிப்பைன்ஸ் நாட்டிலும் டிரம்ப் கோபுரங்கள் எழுப்பப்பட்டுள்ளன. 1996 தொடக்கம் 2015 வரை உலக அழகிப் போட்டிகள், மிஸ் அமெரிக்கா, மிஸ் பதின்ம வயதழகிப் போட்டிகள் எல்லாவற்றையும் நடத்தியவர் இந்த டொனால்ட். நெடுங்காலம் ஒளிபரப்பாகிய ஒரு பிரபல்ய தொடர்காட்சிக்காக 213 மில்லியன் டாலர் தொகை பெற்றவர் இந்த வர்த்தகப் பிரமுகர்.

பல நூல்களையும் எழுதியுள்ள இவர் அமெரிக்க போர்ப்ஸ் சஞ்சிகையின் கணிப்பின்படி 3.7 பில்லியன் டாலர் சொத்து மதிப்புடையவரென்று சொல்லப்பட்டது. ஆனால், இவரோ தன் சொத்து மதிப்பு 10 பில்லியன் டாலரை எட்டும் என்று சொல்லி வந்தவர்.

இவர் மூன்று தடவைகள் திருமணஞ் செய்திருந்தாலும், செக் நாட்டின் விளையாட்டு வீராங்கனையும் ஒரு விளம்பர மொடலுமாகத் திகழ்ந்த இவானாதான் இவர்களில் பிரபல்யமானவர். 1990 இல் இவரை விவாகரத்து செய்துவிட்டு, 1993 இல் மீண்டும் இவர் திருமணஞ் செய்தது ஒரு நடிகையைத்தான்! 1999இல் மீண்டும் விவாகரத்து. 2005இல் இவர் மனைவியாகியவர் மெலானியா என்பவர்.

1987இல் அமெரிக்க அதிபராகும் கனவு இவரிடம் தொற்றிக் கொண்டிருந்துள்ளது. 2000மாவது ஆண்டில் ஒரு அபேட்சகராக போட்டியிட்டுள்ளார் இவர்.

தன் பிரச்சாரத்தில் டிரம்ப் வாக்களித்ததுபோல் இனியும் இவர் செயற்படுவாரா என்பது பலரின் கேள்விகளாக இருக்கின்றன.

மெக்ஸிக்கோவிற்கும், அமெரிக்காவிற்கும் இடையில் இவர் ஒரு பெருஞ்சுவரை எழுப்புவாரா? ஹிட்லருக்கு கெட்டபெயர் வாங்கித் தந்த பேர்லின் பெருஞ்சுவர்போல இவர் எழுப்ப நினைக்கும் மெக்ஸிக்கோ-அமெரிக்க எல்லைச் சுவர் இவருக்கு அபகீர்த்தியை உண்டாக்குமா? இப்படி ஒரு பெயரைச் சம்பாதிக்க முதல், இந்த நீண்ட எல்லைச் சுவரை எழுப்ப தேவையான பணத்தை வழங்க அமெரிக்க காங்கிரஸ் அங்கீகாரம் கொடுக்குமா?

அமெரிக்காவிற்குள் நுழையும் அனைத்து முஸ்லீம்களையும் தடுக்கும் சட்டம் கொண்டுவருவேன். என்பது டிரம்பின் இன்னொரு தீவிர பிரச்சாரம்.

முஸ்லீம் மதத்தைத் தழுவிய அமெரிக்கர்களை முதலில் பார்ப்போம். எந்த ஜனாதிபதியாலும் இவர்கள் நாட்டுக்குள் நுழைவதைத் தடுக்க முடியாது.. மதச் சுதந்திரத்தை அனுபவிக்கும் இந்த நாட்டில் தடை என்பது அசாத்தியமான ஒன்று. அமெரிக்கர்கள் அல்லாத முஸ்லீம்களை அமெரிக்காவிற்குள் வருவதை தடுத்து நிறுத்துகிறேன் என்று ஒரு ஜனாதிபதியால் எப்படிச் செய்யமுடியுமா? நீதிமன்ற விவகாரமாகி இறுதியில் பெரும் இழுபறிதான் ஏற்படும்.

அமெரிக்காவை மீண்டும் உன்னத நிலைக்கு **கொணர்வோம் என்னும் சர்ச்சைக்குரிய** பிரச்சாரத்தில் குதித்த டிரம்ப், மெக்ஸிக்கோ- **அமெரிக்க எல்லையில் ஒரு சுவர்** எழுப்புவோம், முஸ்லீம்கள் அமெரிக்கா **வந்து குடியேறுவதை தற்காலிகமாக** நிறுத்துவோம் என்ற பிரச்சாரங்கள்தான் **இவரது வாக்கு வேட்டையில் வெற்றி** வாக்குகளை அள்ளித் தந்தனவோ என்று **பலரை நினைக்க வைத்துள்ளது.**

பக்தர்களை மகிழ்வித்த நடன நிகழ்ச்சி

குறொய்டன் தோட்டன்கீத்தில் அமைந்த கருணாலயா அருள்மிகு சிவஸ்கந்தகிரி ஸ்ரீமுருகன் திருக்கோயிலில் கந்தசஸ்டி பெருவிழாவின் சூரன் போர் நிகழ்வு சமீபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. முருகன் திருக்கோயில் மண்டபத்தில் பிரதம குருக்கள் வாமதேவ சிவம், வேதாகம வித்தகர் சிவஸ்ரீ நாகேந்திர முரளிதரக்குருக்கள் தலைமையில் நடந்த லண்டனில் பிரபலமான ராகினி ராஜகோபாலின் 'நாட்டியாலயா' நடன ஆசிரியை ஷர்மினி கண்ணனின் மாணவிகளின் அற்புதமான முருகன் நாட்டியம் நூற்றுக்கணக்கான பக்தர்களை மகிழ்வித்தது. முருகப் பெருமானின் கும்பாபிஷேக, மண்டாபிஷேக நவராத்திரி விழா போன்றவற்றின் பின் மிகச் சிறப்பாகவும், பக்தி மயமானதாகவும் இந்த விழா நிறைவு பெற்றது.

லண்டனில் அகஸ்தியரின் 20ம் ஆண்டு நவஜோதி நூல் வெளியீடு

மறைந்த பிரபல ஈழத்து முற்போக்கு எழுத்தாளர் எஸ்.அகஸ்த்தியரின் 20வது ஆண்டு நிறைவும், அவரது மகள் நவஜோதி ஜோகரட்ணத்தின் 'மகரந்தச் சிதறல்' நூல் வெளியீடும் HARROW COUNCIL CIVIC CENTRE (STATION ROAD, HARROW HAI 2XY மண்டபத்தில் d03.12.2016 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. அனைவரையும் அன்போடு அழைக்கிறார்கள். தொடர்புகளுக்கு:

நவஜோதி- 07454 307439, ஜோகரட்ணம் - 07956 939874 மீனா 020 8420 6440 கே.கே.ராஜா 07736 908421

வியா வரதராஜன்

லண்டனில் நிறைவுகள் நிறைந்த இரணையர் அரங்கேற்றம்

சென்ற அக்.29ம் நாள் தீபாவளி தினத்தில் தாயகன்- ஜெயனி இரணைச் சகோதரர்களின் அரங்கேற்ற நிகழ்வு "லெதகெட்" திரைஅரங்கில் நடைபெற்றது. தாயகனின் மிருதங்கத் திறனும், ஜெயனியின் பரத நாட்டிய எழிலும் அரங்கில் ஒளிர்ந்தன. இருவரும் சட்டன் தமிழ்ப்பள்ளி மாணவர்கள். மிருதங்கம், பரதம் என்பனவற்றோடு வாய்பாட்டிலும் இருவரும் கலைமாமணி பட்டப்படிப்பை விசேட சித்திகளுடன் நிறைவு செய்தவர்கள். ஜெயனி ஜெயபாலன் நடன ஆசிரியை மேனகா ரவிராஜ் மற்றும் சாம்பவி ரவிராஜ் வரதராஜன் ஆகியோரின் மாணவி. தாயகன் ஜெயபாலன் பெங்களூர் RR பிரதாபின் மாணவன். இருவரும் தமிழ்ச்சமூகத்திற்கு நன்கு அறிமுகமான ப.வை.ஜெயபாலன்-கமலா தம்பதிகளின் செல்வங்கள்.

வரவேற்பு உபசாரம், நிகழ்வு நிரல் கையேடு, சிறப்பான மண்டப அலங்காரம், மேடை அமைப்பு ஆரம்ப பூசையின்போதே குழுமிய சனத்திரள் என்பன நிகழ்ச்சி ஏற்பாட்டின் சிறப்புக்கு முன்கூட்டியே கட்டியம் கூறின. நேரம் தவறாத ஆரம்பம், தொய்வில்லாத நிகழ்வு ஓட்டம்,

இடைவேளைக்கு சுவை தந்த சிற்றுண்டி, துல்லியமும் ஒளிர்வும் நிறைந்த ஒலி, ஒளி அமைப்பு என்பன ஐந்து மணி நேரம் தொடர்ந்த இரு அரங்கேற்றங்களுடனும் மண்டபம் நிறைந்த சனத்திரள் சலிப்பின்றி நிகழ்வில் ஐக்கியமாகி சுவைக்க காரணமாய் அமைந்தன.

ஆரம்பம் தாயகனின் மிருதங்க அரங்கேற்றம். குரு பிரதாப் அருகிருந்து நெறிப்படுத்த சுற்றிலும் வயலினுடன் வித்துவான் துரை பாலசுப்பிரமணியம், கடம் வாத்தியத்துடன் RM பிரகாஷ், மோர்சிங் தபேலாவுடன் பிரசன்னா, தம்புராவுடன் மதுரா திருவேல், பக்கவாத்தியம் இசைக்க புல்லாங்குழலுடன் நடுநாயகமாக இளம் வித்துவான் அமிர்தலிங்கம். பகீதரன் அரவிந்தன் அமர்ந்திருந்து தேன் ஓசையாக பாடல்களை இசைக்க தாயகனின் கைத்திறனை மிருதங்கம் தாளலயம் தவறாது சிறப்பாக வெளிப்படுத்தியது. தில்லானா உட்பட ஒன்பது பாடல்கள் ஒவ்வொன்றிலும் தாயகனின் கைப்பக்குவத்தை சபை கைதட்டிப் பாராட்டியது. நாற்பது நிமிடங்கள் தொடர்ந்த தனிஆவர்த்தனமும் கச்சேரியும்



சிறப்பின் உச்சத்தைத் தொட்டன. மிருதங்க வித்துவான் கலைமாமணி பத்மநாபன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மிருதங்க நிகழ்வை விமர்சித்தார். பதினாறு வயது நிறைந்த தாயகனின் திறன் வெளிப்பாடுகளை உதாரணங்களுடன் சுட்டிக்காட்டினார். இச்சிறப்புக்குக் காரணமான குரு பிரதாபை புகழ்ந்தார்.

இடைவேளையின் பின் ஜெயனி ஜெயபாலனின் பரதநாட்டிய அரங்கேற்றம் ஆரம்பமானது. நடன ஆசிரியைகள் மேனகா, சாம்பவி ஆகியோர் நட்டுவாங்கத்துடன் நெறிப்படுத்த பிரபல சங்கீத வித்துவான் அரவித்தம்சன் பாடல்களை நயம்படப் பாடினார். வித்துவான் துரைபால சுப்பிரமணியம், வயலின் வாசிக்க, மிருதங்கத்துடன் பத்மநாபன், மோர்சிங் தபேலாவுடன் பிரசன்னா தேவராஜன் ஆகியோர் பக்க வாத்தியங்களை இசைத்தனர். நிர்தாஞ்சலி, கணேசதுதி என ஆரம்பமே ஜெயனியின் அபிநயம், முகபர்வம், பாடல்களுடன் ஐக்கியமான நடன அசைவுகளின் வெளிப்பாடு என்பனவற்றோடு சபையை ரசனையுடன் ஒன்ற வைத்தன. நர்த்தகுறிஞ்சி ராகத்தில் ஆதிதாளத்தில் அமைந்த வர்ணம் 40 நிமிடங்கள் தொடர்ந்த நடனம். தெளிந்த நீரோடை போல் சிறந்த வர்ணநடன சிறப்புக்களை அவையின் கரகோஷம் அடிக்கடி ஆமோதித்தது. "மனதில் உறுதி வேண்டும்" என்ற பாரதியார் பாடலுக்கான நடனமும் சிறப்பை கூட்டின. இடை இடையே உரைகள் இடம் பெற்றன. ப.வை. ஜெயபாலனின் அறிவிப்புக்களில் வழிந்த தமிழ்ச்சுவையையும் சபை ரசித்தது. டாக்டர் மீரா தயாளன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். உதவியாக தேனுகா ஜெகதீஸ்வரம்பிள்ளை சிறப்பித்தார். கீர்த்தனம், தில்லானா, மங்களம் என நிறைவு கண்ட அரங்கேற்றத்தின் சிறப்புக்களை பிரதம விருந்தினரும் OFFAL பரீட்சை அமைப்பின் தலைவருமான உயர்திரு சுரேஷ் விமரிசித்து உரையாற்றினார். ஜெயனியின் உடலமைப்பும், அழகும் அவரின் முழுநிறைவு கொண்ட பரதநாட்டிய திறமைக்கு உறுதுணையாக உள்ளதையும் சுட்டிக்காட்டினார். நிறைவின் பின்பும் நீண்ட வரிசையில் இரணையர்களை ஆசீர்வதிப்போர் நின்றனர்.

அமைப்பாளர்களாக இயங்கிய கவுன்சிலர் தயாளன், டாக்டர் பகீரதன் ஆகியோர் அனைவரின் பாராட்டினைப் பெற்றனர். மொத்தம் ஐந்துமணி நேரம் நிறைவுகளால் நிறைந்த அரங்கேற்ற நிகழ்வாக அமைந்தது. ●

உலகளாவிய சிறுகதை போட்டியில்

கனடாவில் பரிசு

'புதினம்' உலகளாவிய சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெற்ற கனாடவைச் சேர்ந்த நிலானி சுதன், தனது பரிசுத் தொகையை கனடாவில் வாழும் 'புதினம்' ஆசிரியரின் கடைசித் தங்கை மாலினி (டொலி) வேலாயுதத்திடமிருந்து பெற்றுக் கொள்கிறார். 'மகளுக்கு மாத்திரை' என்ற இவரது பரிசுச் சிறுகதை மார்ச் 'புதினம்' இதழில் வெளிவரும்.

'தாயெனும் கோயில்': **முதல்பரிசு**

'புதினம்' 20வது ஆண்டில் பயணிக்கத் தொடங்கியதைக் குறிக்குமுகமாக உலகளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட 'தாயெனும் கோயில்' கட்டுரைப் போட்டியில் முதல்பரிசு பெற்ற கனடாவைச் சேர்ந்த எஸ்.பத்மநாதன் இல்லத்தில் அவர்களுக்கான பரிசுத் தொகையை 'புதினம்' ஆசிரியரின் மைத்துனரான, கனடா வீடுகள் விற்பனை முகாமையாளர் எழுத்தாளர் வேலா சுப்பிரமணியம் வழங்குகிறார். முதல் பரிசுக்குரிய கட்டுரை வெளியான 'புதினம் இளமை இருபது' 20வது ஆண்டு மலரும் அவருக்கு வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

ப.வை. ஜெயபாலன்

மரணம் நெருங்குவதை தெரிந்து வாழும் அந்த அவலமான வாழ்வு

அந்த கடைக்கு அடிக்கடி வரும் வெள்ளை இனமாது. அழகான, பண்பான நடுத்தர வயதுப் பெண். கண்டதும் சுகநலன் விசாரித்தேன். கண்கலங்க தனக்கு மார்பக புற்றுநோய் என்றார். சட்டையை உயர்த்தி மார்பை காட்டினார். வெள்ளை தோலில் ஸ்திரிகை போட்டு சுட்டது போல் சிகிச்சையின் வடுக்கள். விவாகரத்து செய்த தனிமை. வளர்ந்த ஆண் பெண் பிள்ளைகள். இரண்டும் ஜோடிகளைத் தேடிப்பிடித்து தனிவாழ்வு. வசதிகள் இருந்தும் நிம்மதி இல்லாத நிலைமை. வழமையாகவே வெவ்வேறு புதுரக மதுபானங்களைத் தேடிச் சுவைபார்க்கும் அந்தப் பெண் இப்பொழுது கூடுதலான உயர்ரக மதுவகைகளை கொள்வனவு செய்வது தெரிந்தது. மரணம் நெருங்குவதை தெரிந்து கொண்டவர். மதுவை மாற்றி நிம்மதியை நாடும் மாதுவாகிவிட்டார். எனக்கு தெரிந்தவர்கள் புற்றுநோயால் தேறி உள்ளதை சொல்லித் தேற்றினேன். ஆறுதல் மாற்றம் அவர் முகத்தில் அமையவே இல்லை.

நண்பர் சூரியும் இப்படித்தான். திடகாத்திரமான வடமராட்சி உடம்பு. தீர்க்கமாக தன்நோய் மாறாது என்று தெரிந்ததும் எல்லோருக்கும் விடைபெறப் போகிறேன் விரைவில் எனக்கூற ஆரம்பித்துவிட்டார். தன் இளம் குடும்பத்தையும் தான் இல்லாத வாழ்வுக்கு தயார்படுத்தினார். அந்த ஓயாத உழைப்பாளி தன் வியாபாரத்தையும் கைவிரித்து ஓய்வானார். அவருடைய மனத்திடம் மரணத்தை எதிர்கொள்ள தயாரான பலம் என்னை ஆச்சரியப்பட வைத்தது. ஆனால், அவரது உற்ற நண்பர்கள் அந்தரங்கமாக அவரது இதயம் ஓலமிட்ட கதைகளை கூறிய போது மரணம் எவருமே விரும்பாத எதிரிதான் என்பது புரிந்தது.

தனக்கு புற்றுநோய் என்பதும் இறுதிநாட்கள் அடுத்த எவருக்கும் தெரியாமல் இருக்கட்டும் என்று மறைத்தவர்கள் தொகையும் ஏராளம். அடுத்தவர் அனுதாபத்தை பெறுவதும் ஒரு அவஸ்தைதானே? தன் மரணம் என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்று தானே நேரில் அறிய விரும்பினார் கண்ணதாசன். திரைஉலக உறவுகளுக்கு ஒரு விடுதியில் இருந்து கொண்டு "கவிஞர் கண்ணதாசன் இறந்துவிட்டார்" என்ற செய்தியை தானே பரப்பினார். பதறி அடித்துக்கொண்டு கலங்கியவர்களை பாசச் சிரிப்புடன் நேரில் வரவேற்றார் அவர். "கணக்கு" என்ற தலைப்பில் கலைஞர் கருணாநிதி தலைமையில் தன் இறப்புக்கு பிறகு தன்னைப் பற்றிய பிறர் கணக்கு எப்படி இருக்கும் என்பதையும் அழகாக பாடியவரும் அந்தக் கவிஞர்தான். தன் கவிதா விலாச கெட்டித்தனங்கள் மெச்சப்படும் என்றும் எவ்வளவு பொருள் சேர்த்தான், அவ்வளவையும் மதுமாது என்று செலவு செய்துவிட்டு கடனோடு மாண்டான் என்றும் தன்னைப் பற்றி பேசப்படும் என்பதை மனக்கணக்காக பதிந்தார் அந்த கவிஞர்.

இந்தியாவிலோ எங்கள் நாட்டிலோ இவ்வாறு இறப்பை எதிர் நோயாளிகளுக்கு அதை அறிவிப்பதில்லை என்ற மருத்துவ விதி கடைப்பிடிக்கப்படுகிறது. இதையும் மீறி தமிழ்நாட்டில் புலம்பெயர்ந்து வாழ்ந்த என் சித்தி றோகிணி ரீச்சருக்கு ஒரு மருத்துவ தாதி அவர் இறக்கப் போவதை தெரிவித்துவிட்டார். தன் எஞ்சியுள்ள கடமைகளைப் பற்றி, கண்ணும் நோயால் மங்கலாகிப் போன, அவர் கலங்கிய கலக்கமும் கவலையும் மீதி நாட்களை நிம்மதி குலையச் செய்திருந்ததும் அவலம்தான். மரண பயம் ஒரு நோயாளிக்கு ஏற்ப்படக்கூடாது என்ற எங்கள் தாயக மருத்துவ மரபு சிறப்புத்தான்.

தன் பொறுப்பில் உள்ள பிரஜை அவசர மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர் என்பதை இரத்த பரிசோதனை மூலமோ பிறவகையிலோ தெரிந்து கொண்ட பிரித்தானிய மருத்துவ சேவை நிலையங்கள் அவரை இரு வாரத்துக்குள் அவசிய பரிசோதனைகள் அனைத்துக்கும் உட்படுத்தும் நடைமுறையை கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு மனித உயிரிலும் அரசு காட்டும் அக்கறை இது.

பிறப்பிலேயே அவலட்சணமான தோற்றத்தோடும், மாற்ற முடியாத அங்கஹீனத்தோடும் வாழ்வின் இனிமைகளையே நுகரமுடியாத மூளைகோளாறோடும் உள்ளவர்களுக்கும் பிரித்தானிய அரசு கோடிக்கணக்கில் செலவு செய்வதை பார்க்கிறோம். சிறுபராயத்தவர் என்றால் வாகன வசதியோடு பிரத்தியேக விசேட கல்விச்சேவை, பராமரிக்க நாளாந்த ஆள் உதவி நிரந்தர மருத்துவ சோதனை, பெற்றோருக்கு அல்லது வளர்ப்பாளர்களுக்கு "வாராந்த நிதி உதவி என மனிதநேயம்" பேணப்படும் நாட்டில் வாழ்ப்வர்கள் என்பதே எமக்கும் பெருமை தரும் விடயம்.

தாயகத்தில் தன் இறுதிநாட்களை நெருங்கும் ஒருவர் சேமம் இழக்கும் சங்கதி நினைவுக்கு வருகிறது. சேமம் இழப்பவரிடம் இருந்து சத்தமான நீண்ட மூச்சு தொடர்ந்து கிளம்பும். சிறிய வீடு என்றாலும் அவருக்கு தனிபடுக்கை வசதி செய்து தரப்பட்டிருக்கும். உறவினர்கள், ஊரார் அந்த வீட்டை இடைவிடாது மொய்த்துக் கொண்டிருப்பார்கள். அவருடைய நிம்மதியான இறப்பை வேண்டி குலதெய்வங்களுக்கு செய்த அர்ச்சனை விபூதி அவர் நெற்றியில் துலங்கும். பால் வார்ப்பு என்ற சடங்கும் ஆரம்பமாகும். உறவினர்கள் ஒவ்வொருவராக கரண்டியால் அவர் வாயில் பால் வார்ப்பார்கள். "ஆளுக்கு மண் ஆசை கூட. அதுதான் சீவன் போகுதில்லை" என்று ஒருவர் சொல்ல சிறிதாக மண்கலந்த நீரை வாயில் ஊற்றுபரும் உண்டு. பொன் ஆசைதான் வாட்டுகிறது என்று அடுத்தவர் செல்ல பொன் சிதைவு கரைசல் "வாயில் வார்க்கப்படும். கண்ணை முழிச்சால் அக்கம்பக்கம் தேடுறது தெரியேலையே. மூத்தமகனிலதானே இவர் பாசம். உடன வரச்சொல்லி தந்தி அடியுங்கோவன்" என்றும் ஒரு மூத்த பெண்குரல் முழங்கும். மூத்தவனும் வந்து இறங்குவான். ஆனாலும் சேமம் இழப்பு தொடரும்.

> இந்தியாவிலோ எங்கள் நாட்டிலோ இவ்வாறு இறப்பை எதிர் நோயாளிகளுக்கு அதை அறிவிப்பதில்லை என்ற மருத்துவவிதி கடைப்பிடிக்கப்படுகிறது. இதையும் மீறி தமிழ்நாட்டில் புலம்பெயர்ந்து வாழ்ந்த என் சித்தி றோகிணி ரீச்சருக்கு ஒரு மருத்துவ தாதி அவர் இறக்கப் போவதை தெரிவித்துவிட்டார்.

"கிறுக்கு செல்லத்துரை பரியாரியார்தான் சரி. கூட்டிக்கொண்டு வந்து காட்டுவம்" என்று கூறி ஒருவர் அவரை அழைத்துவருவார். செல்லத்துரைப் பரியாரியார் நாடித்துடிப்பறிவதில் பெயர் போன ஒரு சித்தவைத்தியர். காசு வாங்கி வைத்தியம் செய்யாதவர். "குடலிலிலை புழு பத்தியிட்டது" என்று அம்மா சனிக்கிழமை முழுசு வார்த்து அடுத்த நாள் பேதி மருந்து குடிக்க விடியற்காலை வெறும் வயிற்றுடன் செல்லத்துரை பரியாரியாரிடம் தான் அனுப்புவர். சர்க்கரையில் குழைத்து அவர் தரும் பேதிமருந்தில் குடல் அழுக்குகள் முழுதாக வெளியேறும்.

சேமம் இழப்பவர்களை செல்லத்துரை பரியாரியார் வந்து நாடிபிடித்துப் பார்ப்பார். புதன்கிழமை பின்நேரம் 5மணிக்கு சீவன் போகும். வெளியூர்காரரை வரச்சொல்லுங்கோ" என்று அவர் சொன்னால் சொன்னதுதான் இரண்டு காதும் கேளாத அவர் புகழை தெல்லிப்பளை முழுதும் தினமும் பேசும். தன் திறமைகளை அவர் ஒரு வாரிசுக்கு கற்று தராமல் போனது ஊருக்கு தூரதிர்ஷ்டம்தான்.

மாடுதானம் தருவது என்ற "கோதானம்" சடங்கும் நிறைவேறும். பறைமேளக்காரன், பாடை கட்டுகிறவர்கள், விறகுதறிக்கும் குடிமக்கள் என்று எல்லோருக்கும் செய்தி பறக்கும். சரியாக புதன்கிழமை 5 மணிக்கு அந்த வீட்டில் சேடம் இழப்பு நின்று உயிர்போய்விட்டதை குறிக்கும் பெரும் ஓலக்குரல் கேட்கும். ஊரே இழவு வீட்டில் கூடும். இழவு சொல்ல நாலு திசைக்கும் ஆட்கள் சைக்கிளில் போவார்கள். இரவு இரவாக வெள்ளைகட்டி, விடிய பறைமேடை அடிக்கத் தொடங்க அடுத்த நாளே சவம் எடுப்பு நடக்கும்.

"இறந்தவனைச் சுமந்தவனும் இறந்திட்டான். அதை இருப்பவனும் எண்ணிப்பார்க்க மறந்திட்டான்" என்ற

சுசிலா அரவிந்தன்

'புதினம்' உலகளாவிய 'தாயெனும் கோயில்' போட்டியில் 2ம் பரிசு பெற்ற கட்டுரை

நானும் என் அம்மாவும்

உயிரினுள் வாழும் என் அம்மாவின் நினைவுகள்....

தாய் - இறைமையின் இன்னொரு உருவம்,

தாய்- கடன் தீர்க்க இயலா இன் உறவு,

தாய்- மாசில்லா அன்பின் அட்சய பத்திரம்....

யாதுமாகி நின்றார் என் தாய். இன்று அவர் இறைமையுள் கலந்து ஈராண்டுகள் ஆகி விட்ட போதிலும் - இறைமையாய் நிற்கிறார். தாங்குகிறார், வழிநடத்துகிறார்....

எனக்கும் என் தாய்க்குமான உறவு வெறும் தொப்புள் கொடியுடனான உறவு மட்டுமல்ல. அதையும் தாண்டி இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கும் தெய்வீக உறவு. இனியும் ஜென்மங்கள் தாண்டி தொடரப் போகும் ஆத்மார்த்த உறவு. மனதினுள் ஓடும் ஒவ்வொரு எண்ண அலைகளையும், அவர் அளித்த, அவருள் உருக்கொண்ட இந்த உடலினுள் ஒவ்வொரு செல்களையும் நிறைத்துக் கொண்டிருப்பவர். பிரபஞ்ச வட்டங்களில் சுற்றிச் சுற்றி வந்து என்னை அரணாய் காத்துக் கொண்டு இருப்பவர்.

1967 ஆடி மாதம் 17-ஆம் நாள். விடியற்காலை நேரம். புதிதாய் பிறந்த பெண் சிசு ஒன்று அதன் தாயிடம் கொடுக்கப்பட்டது. 'மூன்றாவது "பெண் குழந்தை" அதுவும் இவ்வளவு "கருப்பாய்", கடவுளே... இந்தக் குழந்தையை எப்படி கரை சேர்க்கப் போறன்'-மனதினுள் எண்ணங்கள் ஓடிய வண்ணம் இருந்தாலும்,

பாசத்துடன் அந்தக் குழந்தையை தன் நெஞ்சோடு அணைத்து கொள்கிறார் அந்தத் தாய்.

மிகவும் பின் தங்கிய மாவட்டமான - பெண் சிசுக் கொலைகள் மிக சாதாரணமான செயலாக கருதப்பட்ட ஊர்களில் ஒன்றான தருமபுரி மாவட்டம்.

விடிந்தது. ஆடிப் பெருக்கு, ஊரெல்லாம் சந்தோஷப் பெருக்கு. "கடவுளே இன்று கங்கையும் காவிரியும் பொங்கும். நுரை பெருக்கி உற்சாகமாய் ஓடும் எனச் சொல்வார்களே. இதோ என் குழந்தை. அவள் வாழ்விலும் மகிழ்ச்சி பொங்கட்டும். இந்த ஆடிப் பெருக்கு போலவே என்றும் மகிழ்ச்சியும் இன்பமும் பெருகட்டும்" என மனதினுள் பிரார்த்தித்தபடியே அந்தக் குழந்தையையே பார்த்துக் கொண்டிருப்பாராம் என் தாய். அந்தக் குழந்தை நான்தான்.

எனது அம்மா-

காவிரித் தாயிடம் சொன்னாரா? காற்றை தூது அனுப்பினாரா? விளக்கொளியினூடே இறைமையிடம் மன்றாடினாரா? வானம் நோக்கி வரம் கேட்டாரா? மண்ணில் மண்டியிட்டு கடவுளை பிரார்த்தித்தாரா?... எனக்குத் தெரியாது! ஆனால், அத்தனை தெய்வங்களும் அருள் பொழிந்து விட்டனர் இந்த 50 வயதுக்குள்...

மன நிறைவான குடும்ப வாழ்வு - வரமாய் தரப்பட்ட மகள் - உயிரினில் கோர்த்து விட்ட நட்பு வட்டம் - எதிலும் என்னை முன்னிருத்தும் உறவுகள் - கருப்பா இருந்தாலும் களையான முகம் (ஹிஹி) பாராட்டுக்கள் - நல்ல கல்வி - நல்ல சூழ்நிலைகள் - நற்சிந்தனைகள் - நன்மை பயக்கும் செயல்கள்... என ஒவ்வொன்றும் வரமாய்... காரணம் என் தாய். என் தாய் மட்டுமே.

அன்றைய கால கட்டத்தில் (1960) விவரமறிவதற்குள் தன் தாய் மாமாவுடனான திருமணம். (எனது அப்பா ஓய்வு பெறு போது தாசில்தார். அம்மா தொடக்கப் பள்ளி ஆசிரியை). முத்தான 3 பிள்ளைகளுடன் அழகான குடும்ப வாழ்வு. குறைவான வருமானத்தில் நிறைவான வாழ்க்கை.

இன்று வசதிகள் மிகுந்திருந்தாலும் எங்கள் குடும்ப வாழ்வில் வரும் வாக்குவாதங்கள் போல என் தாய் தந்தையரிடம் நான் பார்த்ததில்லை.

இன்றைய கோபதாபங்களை அவர்களிடம் உணர்ந்ததில்லை.

இன்று எங்கள் குழந்தைகளிடம் நாங்கள் வெளிக்காட்டும் கஷ்ட நஷ்டங்களை அவர்கள் எங்களிடம் வெளிக் காட்டியதில்லை...

என் தாய் என்னிடம் கூறுவார் "குட்டி, அப்பா என்னிடம் கோபப்படும் போதெல்லாம் உங்களுக்கெல்லாம் தெரியாமல் விடிய விடிய தலையணை நனையும் படி அழுது விட்டு கண்களை துடைத்துக் கொண்டு காலைல என் வேலைகளை செய்ய ஆரம்பித்து விடுவேன். நம் குழந்தைகள் மனது பாதித்து விடக் கூடாது என..." என்பார். வெற்றி வாழ்வின் ரகசியம் அப்போது புரியவில்லை, இப்போது புரிகிறது.

மிக்சியும், கிரைண்டரும், டிவியும் இல்லாத நாட்கள் பள்ளி சென்று வந்து உரலில் மாவரைத்து, அம்மியில் சட்னி செய்து, கிணற்றில் தண்ணீர் இறைத்து.... என தோள் பட்டையும், கால் எலும்புகளும் தேய்வது கூட

நான் இன்று மிக நன்றாக இருக்கிறேன். எனது பணம், படிப்பு, பதவி, சொத்து, சொந்த பந்தம், நட்பு அனைத்தையும் விட்டு விடத் தயாராக இருக்கிறேன். ஆனால், என தாய் ஒரு இரண்டு நிமிடம் எனக்கு வேண்டும். அவரின் தலைகோதி, கன்னத்தில் ஒரே முத்தம். எனைப் பார்த்து அவர் ஒரே ஒரு முறை புன்னகைத்தால் போதும், அத்துடன் என்னுயிர் பிரிந்தாலும் பரவாயில்லை. அந்த வலி உயிரைக் குடைந்து இதயத்தை வேரோடு அறுக்கும் அந்த வலியை ஷணத்துக்கு ஷணம் உணர்ந்து மீள முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறேன்...

தெரியாமல் உழைத்துக் கொண்டே இருந்தவர். அத்துனை வேலைகளிலும் எங்களை ஒரு வேலைகூட செய்ய விட்டதில்லை அவரின் உடல் ரீதியான கஷ்டங்களை அப்போது உணரவில்லை. இப்போது உணர்கிறேன்.

தாய் மாமாவை திருமணம் செய்தவுடன் தனித்திருக்க ஆசைப்படாமல் வேலையின் பொருட்டு வெளியூர் செல்லும் போதே தன் 10 வயது தங்கையின் கரம் பிடித்து அழைத்துச் சென்றவர் என் தாய்.

தனது தம்பி தங்கைகளுடன் தன் சித்தி பிள்ளைகளையும் (அப்பாவின் அக்கா) படிக்க வைத்து அனைவரையும் அரசாங்க உத்யோகத்தில் அமர வைத்தவர்.

நன்மைகள் அதிகம் செய்தவர். அன்பு நிறைந்தவர். அன்பை மட்டுமே எங்களுக்கு கற்றுக் கொடுத்தவர்.

என் தாய் எனக்கு அடிக்கடி சொல்லிக் கொடுத்த பாடம்- "நம்மிடம் யார் வந்து உதவி கேட்டாலும் நம்மால் செய்ய முடியுமானால் மறுப்பு சொல்லாமல் செய்து விட வேண்டும். கடவுள் நம்மை கருவியாய் உபயோகப் படுத்த நினைக்கிறார்" என்பதுடன் அனைவரிடமும் அன்பும் இரக்கமும் காட்ட வேண்டும் என்பதே. அவரும் தன் வாழ்நாட்களில் இதையே கடைபிடித்தவர். இது கூட அப்போது உணரவில்லை. அம்மாவிடம் உதவி பெற்றவர்கள் எல்லாம் இப்போது கூறும் போது உணர்கிறேன். கண்கள் குளமாகிறது. "எலிஸபெத் பொன்னுதாய்" என்ற பெயருக்கேற்ப மகாராணி போல் வாழ்ந்தவர்.

என் அம்மாவின் இரண்டாவது நினைவு நாள் 2016. ஏப்ரல் 29 சொந்த ஊர் சென்றோம்.

தாத்தா பாட்டி ஆசிகள் சூழ்ந்திருக்கும் அதே வீடு. நாங்கள் வந்து மகிழ்ந்திருந்த வீடு. எனது அண்ணனின் திருமணம் நிகழ்த்தி சந்தோஷித்த வீடு. சொந்த பந்தங்களை தாங்கிய வீடு. என் தாய் துயின்ற கட்டில், என் தாய் அமர்ந்த மேசை, நாற்காலி, என் தாயின் உடைகள், என் தாயின் மேலாண்மையில் ஆட்பட்ட வீட்டு சாமான்கள், என் தாய் அன்பு கலந்து சமைக்கும் சமையலறை, என் தாய் இறைமையின் காலடியில் அமர்ந்து ஜெபிக்கும் ஜெப அறை அவரின் வார்த்தைகள், அன்பு, பண்பு, பாசம், அவரின் கவனிப்பு, அரவணைப்பு, ஆலோசனை...

அம்மா வீடு வந்து நாங்கள் திரும்பிச் செல்லும் போது அவர் தரும் அரிசி, பருப்பு, புளி பைகள் - அவர் சேர்த்து வைத்திருக்கும் சிறுவாடு காசை மூன்றாமவர் அறியாமல் நம் கைகளில் திணிக்கும் நெகிழ்ச்சி தருணங்கள் - 'குட்டி மா' என உயிர் கலந்து எனை அழைக்கும் குரல் - பிள்ளைகளும் பேர பிள்ளைகளும் வருகிறார்கள் என்றால் மூன்று நாட்களுக்கு முன்பிருந்தே அமர்க்களப் படும் வீடு.....

இன்று அமைதியாய்... அழுத்தமாய்....

மனது என் தாயின் பிரிவை அறவே ஏற்க மறுக்கிறது.

நான் இன்று மிக நன்றாக இருக்கிறேன். எனது பணம், படிப்பு, சொத்து, பந்தம், நட்பு அனைத்தையும் விட்டுவிட தயாராக இருக்கிறேன். ஆனால், என் தாய் ஒரு 2 நிமிடம் எனக்கு வேண்டும். அவரின் தலைகோதி கன்னத்தில் ஒரே ஓர் முத்தம். எனை பார்த்து அவர் ஒரே ஒரு முறை புன்னகைத்தால் போதும். அத்துடன் என்னுயிர் பிரிந்தாலும் பரவாயில்லை. அந்த வலி உயிரைக் குடைந்து இதயத்தை வேரோடு அறுக்கும் அந்த வலியை ஷணத்துக்கு ஷணம் உணர்ந்து மீள முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறேன்.

எனவே இப்போது தாய் உயிருடன் இருக்கும் அன்பர்கள் பேறு பெற்றோர். உங்கள் அம்மாக்களை நன்கு கவனித்துக் கொள்ளுங்கள் தாயுடன் நூறு நூறு ஆண்டுகள் வாழுங்கள்....

இந்த கட்டுரை கூட உலகத்தின் அனைத்து அன்பு தாய்மார்களுக்கும் சமர்ப்பணம்.....

டான்ஸ் நவரத்தினம் நினைவுகள்

மிருதங்க மேதை காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி

டாக்டர் எஸ்.நவரத்தினம்

தமிழோடும், தமிழ் கலைகளோடும் வாழும் வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.நவரத்தினம் தன் வாழ்வில் சந்தித்த மறக்க முடியாத கலைஞர்களைப்பற்றி தொடர்ந்து எழுதுகிறார். தமிழ்நாட்டில் பிறந்து, லண்டனில் வாழும் மிருதங்க மேதை காரைக்குடி ஆர்.கிருஷ்ணமூர்த்தியின் நினைவுகளை இங்கு பகிர்ந்து கொள்கிறார்.

லண்டனில் வாழும் கலைஞர்களில் எவர்களுக்கு இல்லாத தனிச்சிறப்பு அவருக்கு உண்டு. அந்தக் கலைஞரை நினைத்துப் பார்க்கிறேன்.

ஈழத்தில் பிறந்து, புலம் பெயர்ந்து, ஆங்கிலம் கோலோச்சும் அந்நிய பூமியில் வாழ்ந்தாலும், கடந்த பல ஆண்டுகளாக தமிழ் இசையோடும், இசைக் கலைஞர்களோடும் 'நெருங்கி' வாழ்கின்ற சுகானுபவத்தை இறைவன் எனக்கு அளித்திருப்பதை நினைக்கிறபோது, பெருமையாக இருக்கிறது.

1990ம் ஆண்டு அவர் இந்த நாட்டுக்கு வந்தார். பாரம்பரியமான இசைக் குடும்பத்தில், புகழிமிக்க சங்கீத பரம்பரையில், ஒன்பதாவது தலைமுறையாகப் பயணித்துக் கொண்டிருக்கிற மிருதங்க மேதை காரைக்குடி ஆர்.ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைத்தான் குறிப்பிடுகிறேன்.

நாட்டுக்கோட்டை செட்டியார்களின் பெயரைச் சொல்லிக் கொண்டிருப்பது தமிழ்நாட்டில் காரைக்குடி. அதுதான் அவரது பூர்வீகம்.

'காரைக்குடி சகோதரர்கள்' என்று அழைக்கப்பட்ட வீணை மகாவித்துவான்கள் சுப்பராம ஐயர், சாம்பசிவ ஐயர் சகோதரர்கள். சுப்பராம ஐயருக்கு ஐந்து புதல்விகள். இவர்களில் மூத்த புதல்வியின் மகன்தான் கிருஷ்ணமூர்த்தி.

'காரைக்குடி சகோதரர்களில் சுப்பராம ஐயர் காலமாகிவிட, அவரது உடன் பிறப்பு சாம்பசிவ ஐயர், ருக்மணி அருண்டேலின் அன்பான அழைப்பை ஏற்று, அடையாறு கலாஷேத்திரா கலைக் கூடத்தின் அதிபர் பதவியை ஏற்றார்.

கலைகளின் கம்பீரத்துடன் வாழ்ந்த ஒரு குடும்பத்திலிருந்து வந்த ஆற்றல்மிக்க கலைஞராக, வித்தைகள் முற்று முழுதாகக் கற்றுத்தேர்ந்த ஞானவானாக காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி திகழ்கிறாரென்றால், அவருக்கு வழி வழியாக வந்த பாண்டித்தியமும் ஒரு காரணமாகலாம்.

விளையும் பயிர் முளையில் தெரியும் என்பார்கள்.

சின்னப் பேரன் சாம்பசிவ ஐயர் வீட்டுக்குப் பெற்றோருடன் போயிருக்கிறார் ஐந்து வயதுச் சிறுவன் கிருஷ்ணமூர்த்தி.

மதியச் சாப்பாடு முடிந்த பின்னர், சாம்பசிவ ஐயர் சற்றுச் சரிந்து ஓய்வு எடுத்துக் கொண்டார். அப்போது தனது மடியில் மிருதங்கம் ஒன்றை வைத்து வாசித்துப்பார்த்தார். இதனை உன்னிப்பாக கவனித்தார் அந்த சிறுவன். எல்லாம் முடிந்தது. பெற்றோரும் சிறுவனுடன் போவதற்குத் தயாரானபோது, சாம்பசிவ ஐயர் சிறுவனை அழைத்து, அவனை அணைத்தபடியே, "உனக்கு என்ன வேணும்?" என்று கேட்டார். "இந்த மிருதங்கம் எனக்கு வேணும்" என்று கேட்டுவிட்டார். பேரன் கொடுத்த முதல் மிருதங்கம் அவனுக்குக் கிடைத்ததிலிருந்து, வித்தை அவருள் புகுந்து, வித்துவத்தைக் காட்ட ஆரம்பித்து விட்டது போலும்.

இந்தச் சுவையான சம்பவத்தை அறிந்தபோது, நான் எனக்குள்ளேயே அதிசயப்பட்டேன்; ஆச்சரியப்பட்டேன்!

மறைந்த வித்தகர் இராமநாதபுரம் பத்மஸ்ரீ சி.எஸ். முருகபூபதியிடம் குருகுல வாசமுறையில் பயிற்சியை கிருஷ்ணமூர்த்தி தனது எட்டாவது வயதிலேயே ஆரம்பித்தார். பாலக்காடு மணி ஐயர், பழநி சுப்பிரமணியபிள்ளை, சி.எஸ்.முருகபூபதி ஆகிய மூவரும் அத்தருணத்தில் மிருதங்க மும்மூர்த்திகளாகத் திகழ்ந்தவர்கள்.

பன்னிரண்டு வயதிலேயே சிறுவன் கிருஷ்ணமூர்த்தி இசை மேதைகளாகத் திகழ்ந்த மகாராஜபுரம் விஸ்வநாத ஐயர், ஜி.என்.பி. என்ற ஜி.என்.பாலசுப்பிரமணியம், புல்லாங்குழல் மாலி, என்.ரமணி போன்றோர்களுக்கு மிருதங்கம் வாசித்திருக்கிறார்.

எம்.எல்.வசந்தகுமாரிக்கு மிருதங்கம் காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி வாசிக்கிறபோது மிக சிறப்பாக உயர்ந்ததரத்திலான கச்சேரியை வழங்கியதாக பாடகியே மனம் திறந்து கூறியிருக்கிறார். அமெரிக்கா போன்ற நாடுகளில் எம்.எல்.வியின் சங்கீத நிகழ்ச்சிகளுக்கு மிருதங்கம் வாசித்த மறக்க முடியாத சில அனுபவங்களை என்னுடன் காரைக்குடியார் பகிர்ந்து கொண்டிருக்கிறார்.

பத்மஸ்ரீ பத்மா சுப்பிரமணியம் போன்ற பிரபலமான பல பரதநாட்டியக் கலைஞர்களுக்கும், சிங்கப்பூர், லண்டன் ஆகிய நாடுகளில் உள்ள நர்த்தகிகளுக்கும் மிருதங்கம் வாசிக்கிறார். பரத நாட்டிய அரங்கேற்றங்கள் பலவற்றில் இங்கு அவர் கை வண்ணம் தனித்துவத்துடன் மிளிர்ந்திருக்கிறது.

1994 ம் ஆண்டு என்று நினைக்கிறேன். மறைந்த ஈழத்து பாடகி நாகேஸ்வரி பிரமானந்தாவின் இசைக் கச்சேரி தொடர்ந்து பத்து ஆண்டுகளாக லூய்ஷியம் சிவன் கோயிலில் எனது திருவிழாவில் நடந்தது. அவருடைய இசைக் கச்சேரிக்கு காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி மிருதங்கம் வாசிப்பார். இப்படி இரு தடவை நடக்கிற நிகழ்வுக்காக, காரைக்குடியாரையும் என் காரில் கூட்டிச் செல்வேன்.

அவருடைய மிருதங்க வாசிப்பில் எனக்கு ஏற்பட்ட ஈர்ப்பு, அவருடன் இசைக் கச்சேரி, நடனத்துக்கு மிருதங்கம் வாசிப்பது போன்ற பல்வேறு நுட்பங்களை அறிந்து கொள்வதில் ஆர்வமாக இருப்பேன். அவரும் அலுக்காமல் பேசிக் கொண்டு வருகிறார்.

1996ம் ஆண்டில், அமரர் பேரின்ப நாயகம் ஏற்பாட்டில் தமிழ்நாட்டில் பிரபலமான பாடகியாகத் திகழும் பூஷணி கல்யாணராமனின் இசைக் கச்சேரியை பாரதிய வித்தியபவனில் ஏற்பாடு செய்தார். அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, பாடகியின் இசைத்திறனைப் பாராட்டினார். காம்போதியில் அவர் பாடியதை வெகுவாகப் புகழ்ந்தார். நல்ல நிகழ்ச்சிகளுக்கு சென்று, தனக்குச் சரியென்று பட்டதை மனம் திறந்து கூறுவதும், பாராட்டுவதும் அவரது இயல்பு.

பாடகி சாருமதிக்கும் மிருதங்கம் வாசித்திருக்கிறார்.

1998இல் செந்தூரன் என்ற தனது மாணவனின் மிருதங்க அரங்கேற்றத்துக்கு பாடுவதற்கு பூஷணி கல்யாணராமனை ஏற்றவரெனத் தேர்ந்தெடுத்து, தமிழ்நாட்டிலிருந்து அவரை அழைப்பதற்கு தன் விருப்பத்தை பெற்றோர்களுக்கு தெரிவித்தார். காரைக்குடியாரின் முத்திரை அம்மாணவனின் வாசிப்பில் பதிந்திருந்தது.

அந்த மிருதங்க அரங்கேற்றம் சிறப்புகள் பெற்று விளங்கியதற்கு பாட்டும் ஒரு காரணம் என்பதை அம்மாணவனின் குரு ஏற்றுக் கொண்ட பக்குவத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாது. டாக்டர் அனந்தசயனன் தம்பதிகளின் புதல்வர் செந்தூரன் 1997 இல் இந்த அரங்கேற்றம் நடந்தது.

சென்னையில் இவரது மனைவி சுசிலா வாழ்கிறார். இரண்டு ஆண் பிள்ளைகள், ஒரு பெண் பிள்ளை. காரைக்குடியாரின் தந்தையார் இராமசுவாமி ஐயர். தாயார் சுப்புலட்சுமி அம்மாள்.

1959ம் ஆண்டு கலாஷேத்திரா பைன் ஆர்ட்ஸ் அகடமியில் மிருதங்க விரிவுரையாளராக நியமனம் பெற்றார். 1981ம் ஆண்டிலிருந்து 1988ம் ஆண்டு வரை சிங்கப்பூர் இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சொசைட்டியில் விரிவுரையாளராக கடமையாற்றினார். பல்வேறு துறைகளிலும் பிரபலமானவர்கள் அந்த பெரிய நிறுவனத்தில் இவருடன் பணியாற்றினார்கள்.

தனது மிருதங்க திறனாலும், இசை ஆற்றலாலும் சிறந்த இசைஅமைப்பாளராக திகழ்ந்தார்.

பரதநாட்டியத்துக்கு வாசிக்கிறபோது காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி தனக்கென ஒரு தனிப்பாணியை வகுத்துக் கொண்டார். சங்கீத ஞானத்தோடு, பாட்டுக் கச்சேரிகளுக்கு வாசிப்பதைக் கலந்து நாட்டியத்துக்கு 'காரைக்குடி பாணி' என்று ஒரு தனிப்பாணியைப் புகுத்தியிருக்கிறார். அதை அவர் மிருதங்கம் வாசிக்கிற நடன நிகழ்ச்சிகளில் கவனித்து ரசித்தும் இருக்கிறேன். இந்தியாவில் வழங்கப்பட்ட அதி உயர் விருதுகள் இவரையும் அணைத்துக் கொண்டுள்ளன. இந்தியாவில் இசைவிற்பன்னர்கள் 47 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, சங்கீத நாடக அகடமியினால் வழங்கப்பட்ட விருது பெற்றவர்களில் இவரும் ஒருவர்.

பாரத் கலாச்சார் வழங்கிய விஸ்வ கலா பாரதி பட்டம் 2003 இல் இவருக்கு இந்திய நடனம், பாட்டு ஆகியவற்றில் மிருதங்கத்தின் சிறப்பான பங்களிப்புக்கும், வெளிநாடுகளில் ஆசிரியர் பணிக்கும் வழங்கப்பட்டு, கௌரவிக்கப்பட்டது. மறைந்த திரைப்பட இயக்குனர் எஸ்.பாலசந்தர், கவிஞர் வாலி ஆகியோருக்கும் அப்போது வழங்கப்பட்டது.

கீரிமலை நகுலேஸ்வரம் கட்டடநிதிக்காக, சமீபத்தில், ஆச்வே முருகன் ஆலய மண்டபத்தில் எனது ஏற்பாட்டில் பூஷணி கல்யாணராமனின் பாட்டுக் கச்சேரி நடைபெற்றது. காரைக்குடி கிருஷ்ணமூர்த்தியை பிரதம விருந்தினராகப் பேசுவதற்கு ஏற்பாடு செய்திருந்தேன். உள்ளதை உள்ளபடி சொல்லக்கூடிய ஒருவர் அவர்தான். தான் ரசித்தவற்றைக் கூறினார். பூஷணியின் சிடியையும் வெளியிட்டுவைத்து அதன் சிறப்புகளையும் கூறினார்.

லக்சுமி பைன் ஆர்ட்ஸ் கணேசன் ஏற்பாட்டில்தான் காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி லண்டனுக்கு வந்தார். இன்றுவரை இங்கு அவர் தங்கியிருந்து தன்னால் முடிந்த பணிகளைச் செய்வது அவரால் கிடைத்த வாய்ப்பாக எண்ணி மகிழ்கிறார்.

தொடர்ந்தும் அவர் பணி லண்டன் தமிழர்களுக்குக் கிடைக்க இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

அண்டனூர் சுரா

புதினம் உலகளாவிய சிறுகதைப்போட்டி -2வது பரிசு

மிடறு

'அம்மா.....தாயீ.... புள்ளைக்கு பால் கொடுங்கம்மா.....'

வீட்டிற்கு வெளியே இறுக அடைக்கப்பட்டிருந்த கிறில் கேட்டைத் தவிர வீட்டின் அத்தனை கதவு, சன்னல்களும் திறந்திருந்தன. வீட்டிற்குள் மின்விசிறி சுற்றும் அரவமும், தொலைக்காட்சியின் இரைச்சலும் வெளியே கேட்டவண்ணமிருந்தன.

'அம்மா.... புள்ளைக்கு பால் கொடுங்கம்மா....'

கிறில் கேட்டில் கன்னத்தைப் பதித்து கொண்டு குறுக்கும் நெடுக்குமானக் கம்பிகளின் வழியே அவள் வீட்டின் உட்புறத்தோற்றத்தைப் பார்த்து கொண்டிருந்தாள். அவளுடைய முகம் சோகமாகவும், கெஞ்சல் தொனியுடனும் இருந்தது. அவள் கேட்டினை அசைத்துப்பார்த்தாள். அவளால் பெரிய அளவில் அசைக்க முடியவில்லை. ஒரு பக்கக் கதவு தரைக்குள்ளாகவும் மற்றொரு கதவு உட்புறமாகவும் தாழ்ப்பாளிட்டிருந்தது.

அந்த வீட்டில் நாயொன்று இருந்திருந்தால் தொண்டைத்தண்ணீர் வற்ற குரை. குரையெனக் குரைத்திருக்கும். நாய் ஏன் குரைக்கிறதென்று யாரேனும் வெளியே வந்து எட்டிப்பார்த்திருப்பார்கள். அவள் நின்ற நேரத்திற்கு ஒரு மிடறு பாலோ அல்லது காதை நிறைக்கும் வசைகளோ கிடைத்திருக்கும். அவள் நீண்ட நேரம் தொட்டு வாசலில் 'அம்மா....தாயே.....' என அழைத்துக் கொண்டிருந்தாள்.

இந்த வீதியிலிருக்கும் அத்தனை வீடுகளிலும் பால் கேட்டாகி விட்டது. 'அம்மா...தாயீ....சாமி....அப்யா' எனக் கெஞ்சிப்பார்த்தாகி விட்டது. ஒரு வீட்டிலாவது பால் முகம் காட்டப்பட்டதா என்றால் இல்லை. அத்தனை வீட்டிலும் அகோர முகம்தான்.

'இவள்வத் தொல்லை பெருந்தொல்லையால இருக்கு....'- ஒரு வீட்டில்

'இவள்வள நாட்டுக்குள்ள விட்டது போதும்... அப்பப்பா.... அகதிகள் மாதிரியா நடந்துக்கிறாள்வ.... சொந்த வீடு மாதிரில நடந்துக்கிறாள்வ....' இன்னொரு வீட்டில்.

'அடச்சீ....'- மற்றொரு வீட்டில்.

'பாலாம்....பால்....பால் விக்கிற விலை தெரியாம வந்திடுறாள்வ....'

'அடிக்கிற வெய்ல்ல பிரிட்ஜல வைக்கிற பால் கூட கெட்டுப்போகுது... ஒனக்குத்தான்டி ஒன்னும் புரியல....'

'சோறு கேளு தாறேன்.... பால் கேட்காதே...'

இப்படியாக ஒவ்வொரு வீட்டிலும் பஞ்சப்பாடுகள். நாயை ஏவி அடுத்த வீட்டை நோக்கி விரட்டியடிப்புகள் கதவடைப்புகள். ஏளனப்பார்வைகள்....

இந்த வீடு ஒன்றுதான் நாய் இல்லாத வீடாக இருந்தது. தெருவின் கடைசி வீடும்கூட. இந்த வீட்டை விட்டால் வேறு எந்த வீட்டில் பால் வாங்குவதாம்....

'அம்மா....தாயீ....ஏ புள்ளைக்கு ஒரு மொரட்டு பால் கொடுங்கம்மா.....'

அவள் மடிக்குள் கிடந்தக் குழந்தையின் தலை முடியை கோதிவிட்டுக் கொண்டாள். குழந்தையின் நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள். கன்னத்தை மெல்ல அள்ளிக் கொஞ்சினாள்.

வீட்டிற்குள் 'கக்...கக்....' என இருமிக்கொள்வதும், 'இக்கூம்.....' எனக் கணைத்துக்கொள்வதும் வெளியே கேட்டிருந்தன. கணைப்பும் இருமலும் தடித்த ஆண்குரலாக இருந்தது.

'அய்யா....சாமீ....பால் வேணுங்க....'

கண்ணையா கையில் தினசரியுடன் மேலில் சட்டையில்லாமல் நெஞ்சு முடியோடு போர்டிகோவில் நின்று வாசலைப்பார்த்தார்.' யாரு....?

'ஏ புள்ளைக்கு பால் கொடுங்க சாமீ.....'

'பால் இல்லம்மா.... வேற வீட்டப்பாரு....' போர்டிகோவில் கிடந்த சோபாவில் தினசரியை விரித்துவைத்து கொண்டு உட்கார்ந்தார் அவர். அவருடைய மனைவி சித்ரா தொலைக்காட்சி சீரியலில் படு சீரியஸாக இருந்தாள். மகன் சுபாஷ் லேப்டாப்பிலும், மகள் கோபிகா நோக்கியா கையடக்க பேசியிலும் கவிழ்ந்து போயிருந்தார்கள்.

'அய்யா....உங்களத்தான் சாமீ....பால் கொடுங்க'

ஒரு மூதாட்டி கையிடத்தில் வளைந்த ஊன்று கோலுடன் நடையை மெல்ல எடுத்து வைத்து போர்டிகோவிற்கு வந்தார். அவருக்கு அவ்வளவாகக் காது கேட்காது. கண்ணையாவின் தாய் அவர். கண்களில் வட்டமிட்டிருந்த கண்ணாடியை சரிசெய்து கொண்டு வாசலைப்பார்த்தார். வாசலில் ஒரு பச்சிளங்குழந்தையுடன் ஒருத்தி நிற்பதைக்கண்டாள்.

'அம்மா....தாயீ....நீயாவது ஏ புள்ளைக்கு ஒரு மொரட்டு பால் கொடு தாயீ....'

அவளது வாய் அசைவுகளையும் கெஞ்சல் முகத்தையும் பார்க்கையில் அவருக்கு கோபம் உச்சந்தலைக்கு ஏறியது..' அடியே...ஈனச்செறுக்கி.....இந்த உறும நேரமும் அதுவுமா கொடுத்தக்கடன வசூலிக்க வந்தவ மாதிரி நிற்கிறே.... போறீயா.... இல்லையாடி நீ..' கையில் வைத்திருந்தக் குச்சியை நீட்டி விரட்டியடித்தார்.

'ஒரே ஒரு மொரட்டு பால் கொடு தாயீ போயிடுறேன்.....'

'சொல்றேன்... பிறகென்னடி இன்னும் நிற்கிறே.....'

'பால் தாயீ.... உங்களுக்கு புண்ணியமாப்போகும்....'

அவள் அந்த இடத்தை விட்டு நகர்வதாக இல்லை. குறுக்கும் நெடுக்குமானக் கம்பியைப்பிடித்துக் கொண்டு கண்கள் இடுங்க அவள் வெளியே நின்றுகொண்டிருந்தாள். முகத்து எலும்பிடத்தில் பள்ளம் விழுந்துபோயிருந்தன.

அந்த மூதாட்டி கைப்பிடியை ஊன்றிக்கொண்டு வாசலை நோக்கி நடந்தாள். எங்கேயோ மேயப்போயிருந்த நாய் நான்கு வீடு தாண்டி வருகையில் 'வவ்....வவ்....' வெனக் குரைத்துக் கொண்டு வந்தது. குழந்தையைக் காக்க அவள் குழந்தையை தோளிற்கும், மடிக்குமாக மாற்றிக் கொண்டிருந்தாள். நாயின் குரைப்பும், அகோர இரைச்சலும் தினசரியில் மூழ்கிக்கொண்டிருந்த கண்ணையாவிற்கு எரிச்சலைக் கொடுத்தது.

'அடேய்....கண்ணையா....நாய் குலைக்கிறது காதுல கீதுல விழுவுதா இல்லையாடா...' மகனை அவர் அரற்றினார்.

'என்னம்மா.....' என்ற அவர் தினசரியை அப்படியே வைத்துவிட்டு வாசலை நோக்கி வந்தார்.

'பாரு....இந்த உறும நேரமும் அதுவுமா.... ஒருத்தி நிற்கிறத்த....'

கண்ணையாவின் முகம் விகாரமெடுத்தது. 'யாரும்மா நீ....?' அரற்றும் குரலில் கேட்டார்.

'பால் வேணுங்க சாமீ...'

'அதான் இல்லைனு சொன்னேனே...'

'ஒரே ஒரு மொரட்டு வேணுங்க சாமீ...'

அவளுடைய கெஞ்சல், பார்வை, அழுதிட எத்தனிக்கும் உதடுகள் என அத்தனையையும் அவர் ஒரு சேரப் பார்த்தார். உட்பக்கமாக நின்றவர் கேட்டைத் திறந்து கொண்டு வாசலுக்கு வெளியே வந்தார்.

'உனக்கு என்னக் குறை....இம்....? காலும் கையும் நல்லாதானே இருக்கு... வேலைச்செஞ்சி பிழைச்சா என்னவாம்...இப்படி பிச்சை எடுக்கிற....' பற்களைக் கடித்துகொண்டு அவளை அவர் ஒருவிதமானக் கோபத்தோடு பார்த்தார். அவரது மிரட்டலையும். பற்கள் நெறு, நெறுவெனக் கடிபடுவதையும் அவள் சட்டை செய்யவில்லை. சொன்னதையே கிளிப்பிள்ளையைப்போல சொல்லிக்கொண்டிருந்தாள். 'ஒரு மொரட்டு மட்டும் கொடுங்க சாமீ...'

'ஒன் பேரன்ன...?'

'பால்..'

'எங்கேயிருந்து வாறே....?'

'வேணுங்க....'

'இந்த வெயில்ல புள்ளய தூக்கிட்டு அலையாட்டி என்னவாம்....'

'ஒரே ஒரு மொரட்டு....'

'இது ஒன்னோட புள்ளையா...?'

'பால் வேணுங்க சாமீ....'

அவருக்கு மூக்கின் மேல் கோபம் வந்தது. பற்களைக் கடித்துகொண்டார். அருவருப்போடு அவளைப்பார்த்தார். அப்பொழுதும் அவளது உதடுகள் 'பால்....பால்....' என்று முணங்கிக்கொண்டிருந்தன.

அவள் பார்க்க ஒரு மாதம் பட்டினி கிடந்தவளைப்போல இருந்தாள். ஒரு சோளத்தட்டைக்கு சேலைக் கட்டிவிட்டதைப்போல அவளுடைய உருவமிருந்தது. அவளது மொத்த எலும்பு, நரம்புகளை எண்ணிவிட முடியும் வகையில் கூடுடம்பு இருந்தது. அவளது மேலாடை தோளிடத்தில் 'I'வடிவில் கிழிந்து போயிருந்தன. அழுக்குச்சேலை உடுத்தியிருந்தாள். மார்பு நெஞ்சோடு ஒடுங்கிப்போய் அவள் உடுத்தியிருந்த சாக்கெட் தொளதொளத்துப்போயிருந்தது. இல்லாத இரண்டு மார்புகளுக்கிடையில் அவளது முந்தாணை ஓடிக்கிடந்தது. தலை முடிகள் செம்பட்டைத் தட்டிப்போய் அள்ளி முடியாமல் பரந்து விரிந்துக்கிடந்தன. உதடுகள் இரண்டும் தண்ணீர் படாமல் பித்த வெடிப்புகளைப்போல வெடித்திருந்தன.

அவளது கண்கள் ஏக்கமும், துக்கமும், கெஞ்சலும் கலந்து ஒளியிழந்து போயிருந்தன. விழிகள் இரண்டும் இடுங்கி குழிக்குள் விழுந்துகிடந்தன. விழியோரத்தில் கண்ணீர் பிசுபிசுத்துப்போய் வழிந்து காய்ந்து தடமாக ஒழுகிக்கிடந்தன.

அடுத்த இதழில் முடியும்

'புதினம்' 20வது ஆண்டில் பயணிக்கத் தொடங்கியதைக் குறிக்கும் முகமாக நடத்தப்பட்ட லட்சம் ரூபா (இலங்கை) உலகளாவிய சிறுகதை போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற சிறுகதை இங்கு வெளியாகிறது. முதல் பரிசுபெற்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கே.ஆர். டேவிட் அவர்களது கதை 'புதினம்' 20வது ஆண்டு மலரில் வெளியானது. நூற்றுக்கு மேலான சிறு கதைகளுக்குள், ஏழு ஆறுதல் பரிசு பெற்ற சிறுகதைகளுக்கும், பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. 2வது பரிசுக்குரிய இந்தச் சிறுகதையை எழுதியவர் முகவரி அண்டனூர் சுரா, (சு. இராஜமாணிக்கம்), மகாத்மா நகர், கந்தர்வ கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம், தமிழ்நாடு.

போகிற போக்கில்...

ஏ.ஜே.ஞானேந்திரன்

பாராட்டப்படும் பாதுகாப்பான நாடு

உலகிலேயே மிகவும் பாதுகாப்பான நாடு எதுவென்று சமீபத்தில் ஓர் ஆய்வு நடாத்தப்பட்டது. அந்த நாடு எதுவாக இருக்குமென்று நம்புகிறீர்கள்? சில குறிப்புகள் தருகிறேன். கண்டுபிடியுங்கள் பார்க்கலாம். இந்த நாட்டின் பெயரும் தலைநகரின் பெயரின் ஒன்றுதான். ஒரு பிரதான தீவோடு இணைந்து மேலும் 62 குட்டித் தீவுகள் இருக்கின்றன. டாலரை உபயோகிக்கும் நாடுகளில் இதுவும் ஒன்று. குறிப்புகள் இப்போதைக்கு போதும். கண்டுபிடியுங்கள்.

இரண்டாவது இடம் எந்த நாட்டிற்கு கிடைத்தது? ஐரோப்பிய சிறு நாடான லக்ஸ்ம்பேர்க்கிற்கு இந்த இரண்டாவது இடம் கிடைத்துள்ளது. கடந்த வருட மதிப்பீட்டில் இதற்குக் கிடைத்த இடம் பத்து. மேற்கேயும் வடக்கேயும் பெல்ஜியம், கிழக்கே ஜேர்மனி, தெற்கே பிரான்ஸ் என்று மூன்று நாடுகளுக்குள்

சிக்குண்டு கிடக்கும் நாடு இது.

சுவிஸ், கனடியன் கடவைச்சீட்டுக்களைப் போல விசா இல்லாமல் 172 நாடுகளுக்கு லக்ஸம்பேர்க் நாட்டினரால் பயணஞ் செய்ய முடியும்.

மூன்றாவது இடம் கடந்த வருடம் 22வது இடத்திலிருந்த ஜப்பானுக்குக் கிடைத்துள்ளது.

ஜஸ்லாந்து, டென்மார்க், நோர்வே , ஜேர்மனி, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா, சுவீடன் ஆகிய நாடுகளுக்கு மற்றைய நான்கிலிருந்து பத்து வரையிலான இடங்கள் கிடைத்துள்ளன.

சரி என் ஆரம்பக் கேள்விக்கு வருவோமா? முதலாவது இடம்பிடித்த நாட்டைக் கண்டு பிடித்து விட்டீர்களா? சிங்க நகரம் என்றும் அழைக்கப்படும் நாடுதான் அது.

பாடும் திமிங்கலங்கள்

திமிங்கலங்கள் பாடக்கூடியவை என்று யாராவது சொன்னால் நீங்கள் நம்பத் தயாரா? இவை இரகசியமாகப் பாடுவதன் மர்மம் இப்பொழுது ஆய்வுகள் மூலம் துலங்க ஆரம்பித்துள்ளது. தண்ணீருக்கு அடியில் இந்த இராட்சத உயிரினங்கள் நீந்தும்போது 650 அடிகள் தூரத்தில் உள்ள தன் நண்பருடன் உரையாட அதிர்வலைகளை அனுப்பி வைக்கின்றன. அவை எப்படிப் பாடுகின்றன. ஏன் பாடுகின்றன என்பது விஞ்ஞானிகளுக்கு புரியாத புதிராக இருந்தாலும், இந்தத் திமிங்கலங்களின் பாட்டு தண்ணீருக்கு அடியில் சிறிய அதிர்வலைகளை

உண்டாக்குவதை உறுதிப்படுத்தி இருக்கின்றார்கள். இது நீண்ட தூரத்திலுள்ள சகாக்களைக் கண்டுபிடிக்க உதவுகின்றது. எனினும் மனிதனுடைய நடமாட்டம் இந்த விடயத்தில் இடையூறாக அமைந்து விடுகின்றது என்கிறார்கள்.

இந்த அதிர்வலைகள் 200மீற்றர்(656அடி) தூரம் பயணிக்கும் என்று ஆய்வில் தெரிய வந்தாலும், நிஜத்தில் இந்த அதிர்வலைகள் பல மடங்கு தூரம் வரை செல்லும் என்பது தெரிய வந்துள்ளது.

ஒரு திமிங்கலத்தின் காது எலும்புகள் அமைந்திருக்கும் விதத்தைப் பார்க்கையில் அலை அதிர்வுகள் எப்படி ஒரு திமிங்கலத்தின் செவித்திறனை அதிகரிக்க வைக்கின்றது என்பது புலனாகி விடும்.

நீர் யானைகளும் தண்ணீருக்கடியில் அதிர்வலைகள் மூலம் கேட்கும் திறனைக் கொண்டுள்ளன. தண்ணீர் மட்டத்திற்கு மேலே காதுகள் இருந்தாலும் இவற்றால் கிரகிக்க முடியும். யானையின் கதையோ வேறு. இவை பூமிக்கு அடியிலிருந்து கால்கள் ஊடாக காதுக்கு வந்து சேரும் ஒலி அலைகளைக் கிரகித்து தகவலைக் கிரகித்துக் கொள்கின்றன.

தண்ணீருக்கு அடியில் மனிதர்களால் எதையும் கேட்டறிய முடிவதில்லை. கப்பல்களின் அசைவு தண்ணீருக்கடியிலான எண்ணெய் அகழ்வு என்று பல நிகழ்வுகள் இடம்பெற்றாலும் மனிதனுக்கு அது இடைஞ்சலாக இருப்பதில்லை.

ஆனால், திமிங்கலங்களுக்கு அல்ல.

உயிரை மாய்க்க இப்படியொரு காரணமா?

ஒரு உயிரின் மதிப்பு என்னவாக இருக்கும்? ஒரு இலட்சம் டாலர்கள். ஒரு கோடி டாலர்கள். ஒரு பில்லியன் டாலர்கள்..... இதில் எதுவுமே இல்லையென்பது உங்களுக்கு நன்றாகவே தெரியும். விலைமதிப்பற்ற உயிர் இன்று பலருக்கு செல்லாக்காசாகி விட்டது. ஒரு உயிரை அநியாயமாகப் பறிப்பவர்களுக்கோ அல்லது உப்புச் சப்பிலாத காரணங்களுக்காக தம் உயிர்களை மாய்த்துக் கொள்வோருக்கோ உயிரின் மதிப்பு அடியோடு தெரியாது என்றே கொள்ளல் வேண்டும்.

வயது 33தான். பிலிப்பைன்ஸ் நாட்டு இளம் பெண் அவள்.

ஜனநெருக்கடியில் சிக்குண்டு கிடக்கும் வானுயர்ந்த கட்டடங்களுக்கு சொந்தக்கார நகரமான நியூயோர்க்கின் மான்ஹாட்டன் ஹாட்டல் ஒன்றிலிருந்து பாய்ந்து 140 தரையில் விழுந்து அநியாயமாக தன்னை மாய்த்திருக்கிறாள் இந்தப் பெண். முதலில் தான் சாகப் போவது பற்றி இரண்டு உறவினர்களுக்கு கடிதங்கள் எழுதி வைத்து விட்டு, மனத் தைரியத்திற்காக மதுபானம் அருந்தியுள்ளாள் இவள். பின்பு ஒரு கதிரையை உபயோகித்து விளிம்பில் ஏறி நின்று பாய்ந்துள்ளாள் இவள்.

சரி ஏன் இந்த முட்டாள்தனமான முடிவு?

ஒரு ஹோட்டலில் குடித்து. உணவுண்ட பின்பு, தன் கடனட்டை முலம் பணம் செலுத்த முயன்றுள்ளாள் இவள். ஏதோவொரு காரணத்திற்காக மறுக்கப்பட்டுள்ளது. இதை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. உடன் எடுத்த முடிவுதான் தற்கொலை!

உயிரே உன் விலை என்ன? ஒரு வேளை உணவா?

வருடாவருடம் ஒரு மில்லியன் வரையிலானவர்கள் தற்கொலை செய்து கொள்கிறார்களாம். 100,000 ஜனத்தொகை கொண்ட இடத்தில் 16 பேர் தம் உயிரைத் தாமே மாய்த்துக் கொள்கின்றார்கள். கடந்த 45 வருடங்களில் தற்கொலை வீதம 65 வீத அதிகரிப்பைக் கண்டுள்ளது. பொதுவாக பெண்களை விட ஆண்களே அதிகம் தற்கொலை செய்பவர்களாக இருப்பினும், சீனா, கியூபா,ஈக்குவடோர், எல்சல்வடோர், இலங்கை இதற்கு விதிவிலக்கான நாடுகள்.15-19க்கு இடைப்பட்ட வயதினரே அதிகமாக தற்கொலை செய்பவர்கள் என்கிறது உலக சுகாதார அமைப்பு.....

பிரித்த பெருஞ்சுவரும் பிறக்கப்போகும் தனிச் சுவரும்

நவம்பர் 9ந் திகதி கடந்து சென்று விட்டது. இந்தத் திகதியைப் பற்றி என்ன அறிந்துள்ளீர்கள்? உலகம் நன்கறிந்த பேர்லின் பெருஞ்சுவர் அழிக்கப்பட்ட நாள் இது. இது இன்றைக்கும் இருந்தால் ஆகஸ்ட் 1961இல் எழுப்பப்பட்ட இதன் வயது 55ஐ எட்டியிருக்கும்..



ஆனால், அதிர்ஸ்டவசமாக 1989ம் ஆண்டு கிழக்கையும் மேற்கையும் பிரித்த இந்தப் பொல்லாத சுவர் நவம்பர்9இல் தகர்க்கப்பட்டு விட்டது.

இது எழுப்பப்பட்டபோது, இதைத் துணிவோடு கடக்க முயன்று சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் தொகை 139ஐ தொட்டது அன்று.!

இப்பொழுது வேடிக்கை என்னவென்றால் 27 வருடங்கள் கழித்து, அமெரிக்கா தெரிவு செய்துள்ள புதிய அதிபர், மெக்ஸிக்கோ எல்லையில் ஒரு புதிய சுவரை எழுப்ப திட்டமிட்டுள்ளார் என்பதுதான்.

இதை அதிபர் டொனால்ட் டிரம்பின் சொற்களில் சொல்வது பொருத்தமாக இருக்கலாம்.

மெக்ஸிக்கோ அமெரிக்காவிற்குள் தனது குடிமக்களை அனுப்பும்போது திறமான பிரஜைகளை அனுப்புவதில்லை. மிக அதிகமான பிரச்சினைகளைக் கொண்டவர்களையே அனுப்பி எமக்கும் பிரச்சினை தருகின்றார்கள். போதை மருந்துகளைக் கொண்டு வருகின்றார்கள். குற்றச் செயல்களைக் காவி வருகின்றார்கள். கற்பழிப்பவர்களை அனுப்பி வைக்கின்றார்கள். இதைத் தடுக்கவே நான் ஒரு சுவரை எழுப்ப விரும்புகிறேன் என்றே இவர் கூறியுள்ளார்.

முஸ்லீம் சமுதாயத்தை கூட இவர் நேசிப்பதாகத் தெரியவில்லை. நாட்டுக்குள் இவர்கள் நுழைவதை அடியோடு தடுக்க வேண்டும் என்றுகூட இவர் கூறியுள்ளார்.

இந்த நாளில்தான் 1938ம் ஆண்டு உடைந்த கண்ணாடிகளின் இரவு என்று அறியப்படும் இரவில் நாஸிகள் யூதர்களின் வழிபாட்டுத்தலங்களை அடித்து உடைத்து நொறுக்கி, அவர்கள் வீடுவாசல்கள், வர்த்தக ஸ்தாபனங்களை அழித்து 100 யூதர்கள் வரையில் கொன்றார்கள் .நாஸிகளின் ஆட்சியேற்றமும் அவர்கள் காழ்ப்புணர்வுகளும் இந்த இரவில்தான் நிதர்சனமாக பலருக்குத் தெரிந்தன. ன78 வருடங்களில்தான் எத்தனை மாற்றங்கள்?

5ம் பக்க தொடர்ச்சி

விமலின் பக்கம்

இன்னுமோர் ஆயுதப் போராட்டம் இனிமேல் கிடையவே கிடையாது! உலகம் மாறி விட்டது.

அமெரிக்கா இன்று கோமாளி டிரம்பின் கையில்! ஈழத் தமிழர்கள் இழந்து விட்ட தமது உரிமைகளையும் நிலங்களையும் மீட்க சிங்களத் தலைவர்களுடன் பேசித்தான் ஆகவேண்டும். அதற்கு, சிங்கள மொழி தெரிந்த சிங்களப் புலமை வாய்ந்த, சிங்களவர்களை நன்கு அறிந்த முதல் அமைச்சர் விக்னேஸ்வரன், சம்பந்தன் ஐயா, வழக்கறிஞர் சுமந்திரன் ஆகியோரைத் தமிழர்கள் நம்பித்தான் ஆகவேண்டும்!!

இன்றைய சிங்களத் தலைவர்கள் இவர்கள் மூவரையும் மதிக்கிறார்கள் - அது எங்கள் பலம். இவர்களில் ஒருவரையேனும் நாங்கள் கழற்றி விட நினைத்தால் அது எமது பலவீனம். இனவெறியர்கள் கையில் இருந்த பிரிட்டனை நீதி தேவனின் ஆட்சியாக்கிய '2010 இன நல்லுறவுச் சட்டம், போன்ற ஒன்று இலங்கையில் உருவாக்கப்பட வேண்டும் என நாம் சிங்கள ஆட்சியாளர்களை வற்புறுத்த வேண்டும்.

காவியுடை போர்த்திக் கொண்டு இனவெறியுடன் தமிழ் - முஸ்லீம் விரோத துவேஷங்களைப் பரப்பிக் கொண்டிருக்கும் சிங்களக் காடையர்களையும் தமிழ் விரோத கொழும்பு ஊடகத்தினரையும் விமல் வீரவன்ச போன்ற அருவருப்பான அரசியல்வாதிகளையும் சிறையில் தள்ளக் கூடிய இன நல்லுறவுச் சட்டம் வெறும் உடன்படிக்கையாக உருவாக்கப்பட்டால் பண்டா செல்வா ஒப்பந்தம் போல அதற்கும் பேப்பே காட்டி சாக்கடையில் வீசிவிடுவார்கள் சிங்களவர்கள்.

எனவே அமெரிக்காவைப் போல அரசியல் சாசன திருத்தங்கள் செய்யப்பட்டு இன நல்லுறவு கட்டாய சட்டமாக்கப்பட்டால் பிரிட்டனைப் போன்ற இனநல்லுறவுச் சமத்துவம். இலங்கையிலும் நிலவும்.சிங்கள இனவெறியும் அடங்கும். - புலம்பெயர் தமிழர்களின் கோடானுகோடி வெளிநாட்டு பணம் இலங்கையில் முதலீடு செய்யப்படும் - லஞ்சம் ஒழிந்து இலங்கை சிங்கப்பூர் போல் சுபீட்சமடையும்!

இது பொறுப்பான தமிழர்கள் பலரின் கனவு!

கனவு பலிக்குமா?

துயர் பகிர்தல்

திருமதி. விசாலாட்சி கனகசபாபதி

பிறப்பு: 22-ஜனவரி -1928 இறப்பு: 23-நவம்பர்- 2016

பிறப்பிடம்: **சிவன் கோவிலடி. திருக்கோணமலை**

திருக்கோணமலையைப் பிறப்பிடமாகவும், இலண்டன் வில்ஸ்டனை (willesden) வதிவிடமாகவும் கொண்ட திருமதி.விசாலாட்சி கனகசபாபதி அவர்கள், 23-11-2016 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ் சென்ற கனகசபாபதி அவர்களின் இணையாளும்,

திருநாவுக்கரசு, விஜயநாதன், விமலா, இராதா, உதயா ஆகியோரின் பாசமிகு தாயாரும்,

ரோஹான், நவநீதன், சிவேந்திரன், ஷிராணி, அக்னஸ் ஆகியோரின் நேசமிகு மாமியாரும்,

சோனாலி, ஷானலி, ஹேஷாந்தி, மாதுமை, அபிராமி, ஏமி, ரேச்சல், ஜேம்ஸ், மிச், பென் ஆகியோரின் பேத்தியும், சார்லி மற்றும் மீராவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் உடலம், எதிர்வரும் புதன் கிழமை (30-11-2016) அன்று, சென்ட். மரிலிபோன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை, சுற்றத்தார், நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகனம்: 30-11-2016 புதன்கிழமை
10.00 மு.ப. – 11.45 மு.ப. வரை.

முகவரி:
St. Marylebone Crematorium
East End Road, Finchley,
London N2 0RZ

தொடர்புகளுக்கு:
ராதா – 020 8459 2898
(0044 208 459 2898– வெளிநாடு)

கைத்தொலைபேசி:
07506934454 / 07949173794

ENGINE TEC MOTORS

we offer Facilities for

- Servicing
- Clutches
- Brakes
- Overhauls
- Car Electricals
- Pre - MOT Checks
- ALL Types of Repair & Body Work
- Insurance Work Undertaken

என்ஜின் ரெக் மோட்டர்ஸ்
உங்கள் கார் திருத்த
வேலைகளுக்கு
நம்பிக்கையான நிறுவனம்

Ask for Vel or Rajan
Tel: 020 8640 8000
020 8640 1230
Mob: 0786 0226 476
07860 770 945

Email: vel@etmluk.com
rajan 339c@gmail.com
www.etmluk.com

Unit 5,339 London Road, Mitcham, Surrey CR4 4BE

தமிழிலேயே பேசி உங்கள் கார் பிரச்சனையைத் தீர்த்துக் கொள்ளலாம்.

லண்டனில் தானே பாடி நடனமாடிய வித்தியாசமான பரதநாட்டிய அரங்கேற்றம்

சமீபத்தில் லண்டன் CATFORD தியேட்டரில் நல்லதொரு பரதநாட்டிய அரங்கேற்றத்தைப் பார்த்து, ரசித்து, மகிழும் சந்தர்ப்பம் கிடைத்தது. நடன ஆசிரியை நாட்டிய கலைமாமணி மதிவதனி பிரபாகரன் மாணவி அஜித்தா பாலகிருஷ்ணன் நாட்டிய நிகழ்வு மனதை நிறைவு செய்கின்ற அளவுக்கு அமைந்திருந்தது.

ஐரோப்பிய தொலைக்காட்சி நேயர்களுக்கு நன்கு அறிமுகமான என்.ரி. ஜெகன் தனக்கே உரிய தனிப்பாணியில் நிகழ்ச்சிகளைத் தொகுத்தளித்தார்.

நர்த்தகி அஜித்தாவின் முதல் நடனமே நெஞ்சைக் கவர்ந்தது. இரு கரங்களிலும் மலர் ஏந்திய வண்ணம் கம்பீர நாட்டையில் அமைந்த புஸ்பாஞ்சலிக்கு குருவின் நட்டுவாங்கத்துடன் பாடகர் வம்சி கிருஷ்ணாவின் கம்பீர, இசையுடன், சோமசுந்தர தேசிகரின் மிருதங்க - தாளலயத்துடன் இணைந்த 'சபை வணக்கம்' நன்றே இருந்தது. தொடர்ந்து வினை தீர்க்கும் விநாயகப் பெருமான் சுலோகம், அலாரிப்பு, ஜதீஸ்வரம் என விறுவிறுப்பான உருப்படிகளை நர்த்தகி வழங்கினார். இதனை அடுத்து நடந்த வர்ணம் மிக முக்கியமானது. பரதநாட்டியத்தின் உயிர்நாடி. நடன ஆசிரியை, குரு மதிவதனியின் கடின உழைப்பும், அவருடைய பயிற்சியோடு மாணவி மிகவும் ஆழ்ந்த பயிற்சியைப் பெற்றமையும் வர்ணத்தில் தெரிந்தது. 35 நிமிடங்கள் வரை நிகழ்ந்த இந்த வர்ணம் சலிப்பைத் தரவில்லை. நேர்த்தியாக நடந்தேறியது.

இடைவேளையின் பின்னர், நடந்த நிகழ்ச்சி நடன ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்துவிட்டது எனலாம். நர்த்தகி அஜித்தா, பாடிக் கொண்டே நடனமாடினார். 'ஆசைமுகம் மறந்து போச்சே, யாரிடம் சொல்வேனடி தோழி...' என்ற அழகான பாடலை, தன் இனிய குரலால்பாடி, அந்தப் 'பதம்' நடன நிகழ்வை அசத்தி விட்டார்! இதில் கண்ணனை நினைந்துருகுவதாக அமைக்கப்பட்ட அபிநயத்துடன், ஆடலுடன் பாடலையும் பாடி அஜித்தா அசத்தி விட்டார். பாடிக் கொண்டே மேடையில் ஆடுகின்ற நிகழ்ச்சி ஒன்று லண்டனில் முதல் தடவையாக நடந்திருக்கின்றது என்று பலரும் அங்கு பேசிக் கொண்டார்கள், 'ஆசைமுகம்' என்று பாடி அபிநயித்தபோது, ஆசையை ஏற்படுத்திவிட்டு, 'மறந்து போச்சு' என்ற வரிகளை பாடும்போது அப்படி ஒரு சோகம் அந்த அபிநயங்களில். இதனைப் பார்த்து மெய்சிலிர்த்த தந்தையின் ஆனந்தக் கண்ணீர்.... மாணவியை உருவாக்கிய குரு மதிவதனியின் நெஞ்சில் ஒரு பூரிப்பு.... ஒட்டுமொத்தமான கரகோஷத்தைப் பெற்று அசத்திவிட்டார் அஜித்தா!

இவற்றைத் தொடர்ந்து காவடிச் சிந்து நடனத்தை அழகாக சித்தரித்தார் நர்த்தகி. தொடர்ந்து மாடு மேய்க்கும் கண்ணா போன்ற நடனங்கள் சபையோரை மிகவும் கவர்ந்தது.

பக்கவாத்தியக் கலைஞர்கள் இந்த அரங்கேற்றத்துக்கு பக்க துணையாக இருந்து உயிரூட்டியவர்கள். பாட்டு-வம்சி கிருஷ்ணா, மிருதங்கம் - சோமசுந்தரத் தேசிகர், வயலின்-ரதீஷ்குமார் மனோகரன், புல்லாங்குழல்-பிச்சையப்பா ஞானவரதன், மோர்சிங்-கந்தையா சிதம்பரநாதன் ஆகியோர் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கானபூஷணம் அம்பிகா தாமோதரம் பேசுகையில், நர்த்தகி அஜித்தாவின் சிறப்பான முகபாவங்களை வெகுவாகப் புகழ்ந்தார். அரங்கத்தில் அம்மனாகவே அஜித்தா காட்சியளித்து, அனைவரையும் மெய்மறக்கச் செய்து விட்டார் என்றும் பாராட்டினார். குரு மதிவதனி பிரபாகரன் தன் மாணவியை சிறப்பாகப் பயிற்று வித்திருக்கிறார் என்றும் கூறினார்.

பிரதம விருந்தினர் நாட்டிய கலைமாமணி எஸ். பிரதீஷ்குமார், நர்த்தகி தானே பாடி, ஆடியதைப் பாராட்டினார். மிகவும் சிரமமான பணி இது என்றும் குறிப்பிட்டார்.

சிந்திக்கத் தூண்டும் Think 2wice ஒன்றியம்

கடந்த 12.11.2016 இல், Woodford Green, Wood Bridge High School, Wynndale Hallஇல், மண்டபம் நிறைந்த ஆதரவாளர்களுடன் சிறப்பாக நடந்தேறியது, Think 2wice ஒன்றியத்தின் சலங்கை ஒலி நிகழ்வு.

ஆறு ஆண்டுகள் பூர்த்தியான பெருமிதத்துடன், "Think 2wice" ஏற்பாடு செய்த 'சலங்கை ஒலி' நிகழ்வில் பல தமிழ் நிலையங்கள் தனித்துவமாக இயங்கும் தமிழ் அமைப்புக்களைச் சேர்ந்த ஆதரவாளர்கள், இளையோர், முக்கியமாக.... பல்வேறு தமிழ்ப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவ மாணவிகள் பங்கு கொண்டனர். கண்ணைக் கவர்ந்த பரத நாட்டியங்கள், பல் வாத்தியங்கள் ஒன்றிணைந்த இன்னிசைக் கச்சேரிகள், மேலைத்தேய நடனங்கள் நம் இளையவர்கள் அரங்கினை அலங்கரித்து, அன்றைய மாலைப் பொழுதினையும், அரங்கு நிறைந்த பார்வையாளர்களையும் பரவசப்படுத்தினர்.

Think 2wice ஒன்றியம் வருடந்தோறும் நடத்தி வரும் மற்றுமொரு நிகழ்வான "Walk For Bike" எனும் நடைபயணம் பலரும் அறிந்த விடயம். இந்த நடைபயணம் புலம் பெயர் மண்ணில் வாழும் சிறுவர்கள், இளையோருக்குத் தம் தாய்' நாட்டில்..... தம் வயதை ஒத்த இளையோர் அனுபவிக்கும் இன்னல்களை எடுத்துரைத்து விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் நல்லதொரு நோக்கின் பின்னணியே ஆகும். இவ்வருடம் ஆனி மாதத்தில் நடந்தேறிய நடைபயணத்திலும் நிறைவாகவே இளையோர்கள் கலந்து கொண்டமை "Think 2wice" ஒன்றியத்தின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு வழிகோலும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

"சலங்கை ஒலியின் கண்ணுக்கினிய நடனங்கள், செவிக்கினிய தாள வாத்திய, வாய்ப்பாட்டு இசையில் தமை மறந்து மூழ்கியிருந்த பார்வையாளர்களது சிந்தனைப் பறவையை சிறகடிக்க வைத்து அன்று அரங்கேறிய நாடகம்; "நல்லதோர் வீணை செய்தே"

'மாவடி ஸ்ரீ எனும் புனை பெயரில், Think 2wice அமைப்பின் தாபகர் திரு.A.R. ஸ்ரீதரனின் கதை, கவிதை, வசன நெறியாள்கையில் மேடையேறிய "நல்லதோர் வீணை செய்தே" நாடகம், மண்டபத்தில் அமர்ந்திருந்தோர் கண்களில் நீர் மல்க வைத்தது. ஈழ மண்ணில் இடம் பெற்ற போர் விட்டுச் சென்ற வடுக்களையும், அம் மண் சுமந்த, சுமக்கின்ற வலிகளையும் தத்ரூபமாகக் கூறிய அந்நாடகத்திற்கு உயிர் கொடுத்த நடிகர்கள் அனைவருமே அக் கதாபாத்திரங்களாகவே மாறி, நாடகத்தின் உட்கருத்தினை அங்கமர்ந்திருந்த ஒவ்வொருவரது மனதிலும் பதிய வைத்தமையை, மண்டபத்தில் நிலவிய நிசப்த நிலை நிரூபித்தது.

தம் மண் காக்கப் போராடி, சிறைகளில் அடைக்கப்பட்டு விடுதலை பெற்ற இளம் பெண்களைப் பற்றி அதே மண்ணில் பிறந்து வளர்ந்து வாழும் இதர பெண்கள் அவதூறாகப் பேசி, சமூகத்தில் இருந்து விலக்கி வைப்பதையும் எந்த மண்ணை மீட்கப் போராடினார்களோ... அதே மண்ணில் திக்குத் தெரியாத நாட்டில் நிற்குமாப்போல, நிர்க்கதியர்

நிலையில், அவர்கள் வெதும்புவதையும் வெளிச்சம் போட்டுக் காட்டியது ஸ்ரீதரனின் "நல்லதோர் வீணை செய்தே" நாடகம். பெண்கள் அடிமைகளாக வாழ்ந்த காலம் ஒரு சிறிது மாறி மீண்டும் பழைய அவலநிலைக்குத் தள்ளப்படும் பரிதாபம். "பெண் என்றால் பேயும் இரங்கும்" என்ற மொழி தடம்புரண்டு நாய் கூட இரங்காத நிலைக்கு நமது மண்ணில் பெண்கள் தள்ளப்பட்டுள்ளனர் என்பது சீரணிக்க முடியாத உண்மை.

வீரம் நிறைந்த பெண்கள், 'விரக்தி நிலையில் விதவைகள், நலிந்த பெண்ணின் வலிதனைப் பயன்படுத்தி அவர்கள் கற்புக்கு விலை பேசும் ஆண்கள், பெரும் பதவியில் இருக்கும் வெறும் பதர்கள், போலிக் கௌரவம் பேசும் பெற்றோர், அடிபட்டுத் திருந்தும் அடிமுட்டாள்கள் விதவைகட்குத் தாலி எனும் வேலியை வழங்க முன்வரும் இளைஞர்கள், வலுவிழந்தோர்க்கு வாழ்வாதாரம் தேடிக் கொடுக்க விரும்பும் நல்லவர்கள், ஆண்மீகக் காவலர்கள் இப்படிப் பல கதாபாத்திரங்களை உருவாக்கி ஒரு நல்ல சமூக முற்போக்கு நாடகத்தை வழங்கிய Think 2wice நிறுவனத்தினர், தொடர்ந்து ஆதரவு வழங்குபவர்கள் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

- சரோஜினி சந்திரகோபால்

பத்திரிகை தொடர்பான பணிகளை பயிற்றுவித்தவர் மூத்த பத்திரிகையாளர் கலாநிதி லண்டன் பாலசுந்தரம்.

அவர் எனக்கு குடும்ப நண்பர். திரு. பொன். பாலசுந்தரம் அவர்கள் சிவயோகம் மலர் வெளியிட்டார்கள். அதற்கு இங்குள்ள தமிழ்த்தேனீ இரா. மோகன் உள்ளிட்ட தமிழ் அறிஞர்கள் பலரிடம் கட்டுரை வாங்கி அனுப்பி உதவினேன். இலண்டனில் மணிமொழியனாரை சந்தித்த திரு. பொன். பாலசுந்தரம் அவர்கள் என்னிடம் அலைபேசியில் பாராட்டி மகிழ்ந்தார். மணிமொழியனார் பற்றி அற்புதமான கவிதை ஒன்று எழுதி அவரது நூல் ஒன்றையும் இணைத்து மணிமொழியனாரிடம் என்னை ஒப்படைக்க வேண்டினார். நான், அய்யா மணிமொழியனாரைச் சந்தித்து நூலையும் கவிதையையும் வழங்கினேன். பெற்றுக்கொண்டு திரு. பொன். பாலசுந்தரம் அவர்களையும், ராஜகோபால் அவர்களையும் பாராட்டி மகிழ்ந்தார். லண்டன் வாழ் தமிழர்களின் உள்ளங்களையும், திருக்குறளால், உயர்ந்த பண்பால் கொள்ளைகொண்டவர் மணிமொழியனார்.

முன்பு எனது நூல் வெளியீட்டு விழா நடத்திட காலேஜ் ஹவுஸ் விடுதி அரங்கைக் கேட்ட போது நன்கொடையாக அரங்கை வழங்கி விழாவிற்கும் வருகை தந்து சிறப்புரையாற்றி சிறப்பித்தவர் மணிமொழியனார்.

அந்த விழாவில் தமிழ்த்தேனீ இரா. மோகன், கவிதை உறவு இதழுக்கு ரூ. 5000 நன்கொடை வழங்கிடஎன்னிடம் சொன்னார்கள். கவிதை உறவு ஆசிரியர் கலைமாமணி ஏர்வாடியார் அவர்களிடம் நிதி வழங்கி மகிழ்ந்தேன். இதுபோன்ற பல நல்ல நிகழ்வுகள், இலக்கிய நிகழ்வுகள் காலேஜ் ஹவுஸ் விடுதியில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. எனக்கு மட்டுமல்ல பல கவிஞர்கள், படைப்பாளிகளுக்கு விடுதி அரங்கை நன்கொடையாக

வழங்கி இலக்கியப்பறவைகளுக்கு வேடந்தாங்கலாக விளங்கி வருபவர் மணிமொழியனார்.

நீதியரசர் கற்பக விநாயகம் தொடங்கி குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் வரை பலரை வரவழைத்து திருக்குறள் திருவிழா நடத்தி மகிழ்ந்த மணிமொழியனார். இங்கு நீதியரசர் கற்பக விநாயகம்அவர்களின் சிறப்பான உரை கேட்டு, அவருக்கு மடல் எழுதி தொடங்கிய நட்பு, நூலிற்கு மதிப்புரை வாங்கும் அளவு வளர்ந்து நீதியரசர் மதுரை வரும் போதெல்லாம் இலக்கிய இணையர் தமிழ்த்தேனீ இரா.மோகன், தமிழ்ச்சுடர் நிர்மலா மோகன் அவர்களுடன் சேர்ந்து சென்று சந்திக்கும் அளவிற்கு வளர்ந்தது. நீதியரசருடனான நட்புக்கு காரணமாக இருந்தது மணிமொழியனார் நடத்திய திருக்குறள் திருவிழா.

கடந்த சில ஆண்டுகளாக திருக்குறள் திருவிழாவை மாநாடு போல நடத்தி வருகிறார்கள். இந்த வருடம் மணிமொழியனார் அவர்களின் 70வது வயதும் சேர்ந்து கொண்டதால் திருக்குறள் திருவிழா,சித்திரைத் திருவிழா போல ஆகி விட்டது. இலக்கிய ஆர்வலர்கள் அனைவருமே மணிமொழியனாரை மனதார பாராட்டி மகிழ்கின்றார்கள்.

விருதுகள் பல பெற்ற போதும் தலைக்கனம் இல்லாதவர், மென்மையானவர், மேன்மையானவர்.

உலகப்பொதுமறையான திருக்குறளை இவர் அளவிற்கு வேறு யாரும் நேசிக்கவில்லை என்றேசொல்ல வேண்டும். அந்த அளவிற்கு நேசிப்பவர். திருக்குறள் திருப்பயணம் மேற்கொண்ட பாராளுமன்றஉறுப்பினர் தருண் விஜய் அவர்கள் மதுரைக்கு வந்த போது, மகாகவி பாரதியார் ஆசிரியராகப் பணிபுரிந்தசேதுபதி மேல்நிலைப்பள்ளியில் அவரை வரவேற்று தேசிய நூலாக அறிவிக்க ஆவன செய்யவேண்டுமென்ற கோரிக்கையையும் வைத்து வழி அனுப்பி வைத்தார்கள்.

திருக்குறள் தேசிய நூலானால், மணிமொழியனார் மட்டற்ற மகிழ்ச்சி அடைவார். எனவே அவர்மட்டுமல்ல, உலகத் தமிழர் யாவரும் மகிழ்ச்சி அடையும் வண்ணம் திருக்குறளை உடனடியாக தேசியநூலாக்கிட அனைவரும் குரல் கொடுப்போம். மணிமொழியனாரின் கனவை நனவாக்கும் வகையில் திருக்குறளை தேசிய நூலாக்கியே தீருவோம் என்று அனைவரும் உறுதி ஏற்போம்.

ஆறுமுகநாவலர் அவதரித்த நல்லூரில் ஆறுமுகநாவலர் மாநாடு

அவதார புருஷர் எனவும் ஐந்தாம் குரவர் எனவும் அழைக்கப்படும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாடு மற்றும் குருபூசை நிகழ்வுகள்,அவர் பிறந்த மண்ணாகிய நல்லூரில் நவம்பர் 18,19,20 மற்றும் 21 ஆகிய நான்கு தினங்களும் காலை மாலை என ஏழு அமர்வுகளாக வெகு சிறப்பாக நடைபெற்றது.

இலங்கை மற்றும் இந்திய நாட்டு ஆன்மீப்பெரியார்கள், இலங்கை மத்திய அரசாங்க மாகாண சபை அமைச்சர்கள், பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், உயர் அரச அதிகாரிகள், சைவசமய மற்றும் தமிழ்ப்பற்றாளர்கள் என தினமும் பல நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்ட மாநாட்டின் ஆரம்ப நிகழ்வாக நடைபெற்ற எழுச்சி ஊர்வலமும்- புத்தகக்கண்காட்சி விற்பனையும் விசேட அம்சங்களாக இடம்பெற்றன.

சைவசமயத்தையும் தமிழ்மொழியையும் தனது இரு கண்கள் என மதித்து அர்ப்பணிப்புடன் கல்விப்பணி, சமயப்பணி, சமூகப்பணி என பலதுறைகளிலும் சிறப்பாகப் பணியாற்றியவர் ஆறுமுகநாவலர். பாடசாலைகளை நிறுவுதல், பிரசங்கம் செய்தல், நூல்களை எழுதுதல் - பதிப்பித்தல் என ஒவ்வொரு களத்திலும் தடம் பதித்து, சாதனைகள் நிலை நாட்டிய நாவலருக்கு இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய மாநாட்டில் இலண்டன், இந்தியா, சிங்கப்பூர், கனடா நாட்டிலிருந்தும் பிதிநிதிகள் கலந்து சிறப்பித்தனர்.

குறிப்பாக திருமுறைக் கலைமாமணிகள் நாவலர் நற்பணி மன்றத்தினர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையினர் ஆகியோர் உட்பட பெரும் எண்ணிக்கையினர் பல நிகழ்ச்சிகளில் பங்குபற்றினார்கள்.

ஆக்கத்திறன் மூலம் சாதனை நிகழ்த்திய மாணவ மாணவிகளுக்கு பெறுமதியான விருதுகள் பரிசில்களும் வழங்கப்பட்டன.

புதினம் இளமை இருபது: தவறுக்காக வருந்துகிறோம்

'புதினம்' 20வது ஆண்டு விழாவில் வெளியிடப்பட்ட 'புதினம் இளமை இருபது' மலரில், தமிழர் தகவல் – கனடா முதன்மை ஆசிரியர் திரு.எஸ். திருச்செல்வம் எழுதிய கட்டுரையின் தலைப்பு

'புலம் பெயர் தமிழரின் ஊடகச் செல் நெறி' என்பது **'புலம் பெயர் தமிழரின் ஊடகத் தமிழ் நெறி'** என மாற்றப்பட்டிருக்கின்றது. இத்தவறு ஏற்பட்டதற்காக கட்டுரையாளரிடமும், வாசகர்களிடமும் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- ஆசிரியர்

லண்டனில் மகிழ்வுக்கு ஒரு வழிகாட்டல்

சென்ற 13ம் திகதி சனிக்கிழமை லண்டன் "எக்செல்" மண்டபத்தில் ஏறத்தாழ நாலாயிரம் பேர் நிறைந்திருக்கக் காணப்பட்டது.

யோக வாழ்வை மக்களுக்கு எடுத்துச் செல்லும் பணியில் ஈடுபட்டுள்ள சற்குரு ஜக்கி வாசுதேவ் 'உள் நோக்கிய தொழில்நுட்பம் - மகிழ்வுக்கு ஒரு யோகியின் வழிகாட்டல்' ஆங்கில நூலை இலகுவாகப் புரியும் வண்ணம் பகிர்ந்துள்ளார்.

சற்குருவின் வழமைபோல ஹாஸ்யம் கலந்த பேச்சுடன் சிறு தியானப் பயிற்சியையும் வந்திருந்தோருக்கு வழங்கினார். அவரது புதிய நூலின் பல்லாயிரக்கணக்கான பிரதிகள் விற்பனை செய்யப்பட்டன. மக்களின் வேண்டுகோளுக்கிணைய புத்தகங்களில் தனது கையொப்பத்தையும் சலிக்காது வழங்கினார்.

சென்றவருடம் ஐக்கிய நாடுகள் சபையில் உலக யோகா தினத்தை ஆரம்பித்து வைத்த பெருமை சற்குருவையே சாரும்.

அண்மையில் அமெரிக்காவில் (நியூயார்க் நகரில்) இந்நூல் வெளியிடப்பட்டு மாபெரும் விற்பனையை எட்டியமை குறிப்பிடத்தக்கது.

- அம்பி

LycaFly

CALL 0207 132 32 32
lines open 24x7

The Market Leader for COLOMBO

from £448 incl. taxes
40 kg

ETIHAD	OMAN AIR	TURKISH AIRLINES	JET AIRWAYS	Emirates	KUWAIT AIRWAYS	QATAR AIRWAYS
£405	£398	£395	£398	£393	£406	£415
46 kg	30 kg	30 kg	35 kg	40 kg	40 kg	40 kg

All fares are from and include taxes

WORLDWIDE FLIGHT DEALS | INCL. TAXES

Chennai	fr £352	Melbourne	fr £598
Trichy	fr £412	Las Vegas	fr £447
Kochi	fr £397	Toronto	fr £330
Mumbai	fr £376	Bangkok	fr £370
Delhi	fr £439	Singapore	fr £447
Goa	fr £442	Kuala Lumpur	fr £342

AMAZING HOLIDAY DEALS

★★★
Dubai | CityMax Bur
3 nights | B&B | incl. Flights
fr £283 pp

★★★★★
Dubai | Atlantis the Palm
3 nights | HB | incl. Flights
fr £645 pp

★★★
Maldives | Thoddoo Ocean
7 nights | B&B | incl. Flights
fr £788 pp

★★★★★
South America Cruise
7 nights | AI | excl. Flights
fr £349 pp

Plus **£20 FREE** LYCAMOBILE CREDIT WHEN YOU BOOK WITH US
*T&Cs Apply

200 AIRLINES & 400,000 HOTELS, **PRICE MATCH GUARANTEED!**

WEMBLEY
14 Ealing Road, Wembley,
London HA0 4TL · 0207 132 0055

EAST HAM
180 High Street North,
East Ham E6 2JA · 0207 132 0056

CANARY WHARF
Walbrook Building, 195 Marsh Wall
London E14 9SG · 020 7132 0100

All fares shown above are subject to availability. The Free Lycamobile top-up offer is offered to each fully paid adult return ticket and will not be offered to child/infant and one way tickets. The Lycamobile top-up offer is not valid for selected airlines. The Lycamobile top-up offer is not exchangeable, transferable or redeemable for cash. LycaFly reserves the right to withdraw this offer before the expiry date, without notice.

IATA

Lycamobile

Call the world for less

4G

UK PLAN L

1000
National minutes

Unlimited
National SMS

2GB
Data

Unlimited
calls to Lycamobile UK

Only! £12 30 days

To activate: Dial *139*12044#

9p /min Sri Lanka
Landline & Mobile

To activate : Text SAVE to 2525

Order your free SIM at www.lycamobile.co.uk
or call 020 7132 0322

Top-up your SIM online or where you see the following signs:

TESCO Sainsbury's ASDA WHSmith M'Coll's

Customers may not be able to use Electronic Top-Up at all locations where the top-up logo appears

Customers should opt-in by texting SAVE to 2525 to be eligible to get the special rates. Customer who did not opt-in will be charged at standard rates. Opt-in save promotional tariff is valid from 25.02.2015. Customers with India 1p/min promotion (top up offer) should not opt-in to this special rates. If you opt-in to this promotion, you will not be able to avail India special rates.Promotional tariff valid for 30days from the Opt-in. Lycamobile reserve the right to amend or vary the terms of this promotion, or to withdraw this plan at any time on reasonable notice. Lycamobile UK Plan ("the offer") Inclusive allowances are for calls and texts from the UK to standard UK landline (starting 01,02 or 03) and other UK mobile numbers, and for mobile internet usage in the UK. Other usage will be charged at standard rates. Allowances are valid for 30 days from the date of purchase. 4G availability is subject to handset model and location. Calls are rounded up to the nearest minute for the purpose of calculating remaining allowances. A customer may have only one offer on their account and may not buy another during the 30-day validity period. Any remaining allowance after 30 days will not be carried over into the next 30 day period should the customer repurchase their bundle. In bundle data usage is rounded up and charged in 1KB increments. Once the data allowance of a bundle has been fully used, additional data usage will be charged at standard rate. Lycamobile reserve the right to replace or amend the offer or these Terms & Conditions or to withdraw the offer at any time on reasonable notice. Note that promotional credit (credit which Lycamobile has given to customers for free) cannot be used towards purchasing a bundle. The offer is for non-commercial, private, personal use only – Lycamobile reserves the right to withdraw or suspend the offer or to disconnect you if we suspect that offer is being used for commercial purposes, for conferencing, or if it is not being used in a handset (in a SIM box for example), if it is being used for tethering or if any reason Lycamobile reasonably suspects that you are not acting in accordance with this policy where we consider that the usage was illegitimate. Promotional period: The offer is valid from 09.06.2015.

Lycamobile
Call the world for less